190381

சிந்தாமணி

Feb. 1927

JL
15w21, N25
N27 .. 3.7
190381

பொருளடக்கம்.

	பக்கம்.
சுபோதராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்)	... 386
பெண் கல்வியும் பெற்ேறாரும் (பத்திராதிபர்)	... 387
தாரா (ஸ்ரீமான் T. S. K. சுவாமி)	... 389
ஆசை (ஸ்ரீமதி செ. ராஜம்மாள்)	... 395
நூர்ஜஹான் அல்லது பாத கண்டத்துச் சௌந்தரியக் கொடி (ஸ்ரீமதி பாகீரதியம்மாள்)	... 396
பெண் மக்களுக்கு எத்தகைய கல்வி தேவை (ஸ்ரீமதி S. அம்புஜவல்லி)	... 399
அகிலாண்டம்மாள் மடி கொண்டாட்டம், ஆதிசேஷய்யர் படுர்திண்டாட்டம் (ஒரு சிறு கதை). (ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள்)	403
லியோனிதாஸ் (ஜனாப் M. A. அல்லாபிச்சை)	... 423
சுகன்யை சரித்திரம் (ஸ்ரீமதி குகப்பிரியை)	... 431
பர்வத குமாரி (ஸ்ரீமான் மகேச குமார சர்மா)	... 435
ராணி சாந்தபீபி அல்லது தேசசரித்திரத்தை யொட்டி அதற்கேற்ப அமைத்த ஓர் நவீனக்கதை (ஸ்ரீமதி சீதம்மாள்)	... 442
பலமணிக் கோவை (ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)	... 464

OFFICE OF THE ... 11 MAR 1927

M. R. Ry. K. V. Sesha Aiyangar Avl., M.A., B.L., High Court Vakil, 23, Nadu Street, Mylapore, writes under date 9th January 1927 :—

I have always looked forward to the next issue of the "Chintamani" with much interest and its articles have been read by myself and my friends with pleasure and instruction. Though perhaps primarily intended for ladies, its contents will amply repay perusal to gentlemen also. I have no doubt that the journal will grow in popularity and usefulness.

Some Select Opinions on "Chinthamani"

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date ... February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani*. From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl., M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—*

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz. the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chief Court Vakil, Pudukotah, writes under date 12-8-26, as follows:—

Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women, whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the woman-hood of India is of great interest.

Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.

Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

M. K. ACHARYA Avl., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home, as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR Avl., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

Chinthamani contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

**

It is with much pleasure that I heard of a new venture in Tamil journal ism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras*.

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini*.

The Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind, This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows :—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes :—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows :—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

P. G. Naicker Esq., Durban ; 25th April 1925.

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearence of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

Goonaruthinum, Esq , Durban, Natal ; 14th March 1925.

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad,

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. III.] February 1927. [No. 7.

श्रीशारदायै नमः ।

श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.

(All Rights reserved by the Authoress)

सुबोधराम चरिते

॥ अरण्यकाण्डः॥

प्रजावतीं विहायैकां विजने विपिने कुतः।
समागतोऽसि त्वरया मद्वाक्यमविचारयन् ॥ ३१ ॥

प्रजावतीं மதனியை विजने ஜன சஞ்சாரமற்ற विपिने வனத்தில் ऐकां ஒருத்தியாக विहाय விட்டு விட்டு मद्वाक्यं என் சொல்லை अविचारयन् (सन्) கவனியாமல் कुतः எதற்காக त्वरया வேகமாக समागतोऽसि வருகிறாய் (इति என்று रामः ஸ்ரீராமர் अनुजं தம்பியான லக்ஷ்மணனை अपृच्छत् கேட்டார்) ॥ ३१ ॥

तच्छ्रुत्वा लक्ष्मणो रामं प्रणम्य सहसा ततः।
तवाशुभं शङ्कमाना सीता मां बहुधाऽन्वशात् ॥ ३२॥

लक्ष्मणः லக்ஷ்மணர் तत् அவ்வார்த்தையை श्रुत्वा கேட்டு सहसा உடனே प्रणम्य அடி வணங்கி ततः பிற்பாடு तव உங்களுக்கு अशुभं ஆபத்தை (ஆபத்து வந்து விட்டதென்று) शङ्कमाना சந்தேகித்தவளான सीता சீதை मां என்னை बहुधा பலவாறு अन्वशात् பேசினள் ॥३२॥)

परुषं वचनं तस्या अरुन्तुदमनार्यकम्।
असोढ्वा द्रष्टुकामस्त्वामागतोऽस्मीत्युवाच सः ॥ ३३ ॥

तस्याः சீதையினுடைய अरुन्तुदं மனதைப் பிளப்பதாயும் अनार्यकं உச்சரிக்கத் தகாததாயும் உள்ள परुषं கொடுமை வாய்ந்த वचनं வார்த்தையை असोढ्वा சகிக்கமாட்டாது त्वां உங்களை द्रष्टुकामः (सन्) காணவேண்டுமென்ற எண்ணத்தால் आगतोऽस्मि வந்தேன் इति என்று सः லக்ஷ்மணர் उवाच சொன்னர் ॥ ३३ ॥

सलक्ष्मणोऽथ रामोऽपि सीतादर्शनलालसः।
स्वाश्रमं प्राप्य वैदेहीमदृष्ट्वा विललाप सः ॥ ३४॥

अथ பிறகு सलक्ष्मणः லக்ஷ்மணரோடு கூடிய रामोऽपि ராமரும் सीतादर्शनलालसः (सन्) சீதையைக் காணவேண்டுமென்ற ஆவலுள்ளவராக स्वाश्रमं தனதாச்சிரமத்தை प्राप्य அடைந்து वैदेहीं சீதையை अदृष्ट्वा காணாது विललाप பிரலாபித்தார் ॥ ३४ ॥

(To be continued.)

ஸ்ரீராமஜெயம்

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] அக்ஷய—மாசி. February 1927. [இதழ் 7.

பெண் கல்வியும் பெற்றோரும்.

(பத்திராதிபர்)

பெண் மக்களைக் கல்விப் பயிற்சியின் நிமித்தம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புதல் கூடவே கூடாதென்ற தீர்மானம் முன்னொரு சமயத்தில் நம்மிடையே நிலைத்திருந்தது. ஆடவர்கள் தற்காலக் கல்வித் துறையில் அதிகம் செல்ல வாரம்பித்ததிலிருந்து பெண்கள் ஒன்று மறியா மூடர்களென பாவிக்கப்படுதல் கூடாதென்ற எண்ணத்தினுல் முன்னொருகால் வேண்டாமென்று தடுத்ததைத் தாமாகவே கைக்கொண்டு தமது பெண் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதில் பெற்றோர் முற்படலாயினர். காலக்கிரமத்தில் தற்கால நாகரிக முறைப்படி கல்வி போதிக்கும் பெண் பாடசாலைகள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு நாளுக்குநாள் அவைகள் பரவி வருகின்றன. தற்காலக் கல்வி முறையானது ஆண் பெண் இருபாலார்க்கும் ஒரே மாதிரியாக அமைக்கப் பட்டிருப்பதன்றிப் பெண் மக்கட்குரிய கல்வியை போதிக்கக்கூடிய பெண் பாடசாலைகளும் கிடையா. அதற்கேற்ற பாட புத்தகங்களும் கிடையவே கிடையா வென்பதை மறுத்துரைக்கமுடியாது. கல்வி கற்றல் அவசியமென்ற காரணத்தாலும் பெண் மக்கட்குரிய கல்வியை போதிக்கும் ஸ்தாபனங்கள் இல்லாமையாலும் ஆண் என்றாலும் பெண் என்றாலும் கல்விப் பயிற்சி ஒன்றுதான் என்ற தீர்மானம் ஆங்காங்கு ஏற்பட்டிருப்பதாலும் தமது பெண் மக்களைப் பெற்றோர் தாராளமாகக் கல்விச் சாலைகளுக்கு அனுப்பி வருகின்றனர். மக்களைப் பள்ளிக்கூடத்திற் கனுப்பிவிட்டால் கல்

190382

விப் பயிற்சி முழுதும் ஏற்பட்டு விடுமென்று தற்காலம் பெற்றோர் எண்ணியிருப்பதன்றிக் கல்விப் பயிற்சியில் வீட்டளவில் குழந்தைகளைப் பழக்குவதில் தங்களுக்குள்ள பொறுப்பு எத்தகையதென்பதை இன்றளவும் கருதுகிறார்களில்லை. பொய் சொல்லல், எதிர்த்துப்பேசல் முதலிய பல துர்க்குணங்களும் இளமைப் பருவமிருந்தே சிறுவர்களுக்குப் பழகிவிடுகிறதென்பதையும் இதற்குத் தங்கள் கவனக்குறைவும் சில சமயம் தாங்களே காரணமென்பதையும் சிறிது உணருவரேல் மக்களுக்குக் கல்விச் சாலைகளைக் காட்டிலும் வீட்டில் போதிக்க வேண்டிய நற்போதனைகள் முக்கியமென்பதையும் இதில் தங்களுக்குள்ள முழுப் பொறுப்பையும் தெரிந்து நடக்க முற்படுவார்கள். தற்காலக் கல்வியானது ஏதோ ஒரு சிறு வருமானத்தையாவது மாதாமாதம் அளிக்கக்கூடும் என்ற ஆர்வத்தினால் படிப்பிக்கப்படுவதன்றி இக்கல்வியில் இம்மை மறுமைக்குரிய பயன் அணுவளவும் கிடையாதென்பது வெளிப்படை. ஆண் பெண் இருவகுப்பும் நற்குணம், நல்லொழுக்கம், நன்னிலை, நற்கருமம், நற்புகழ் இவைகளுடன் தமது வாழ் நாளைக் கழிக்க வேண்டுமாயின் இளமையிலிருந்து சூது வாது சற்று மறியாத பேதைப் பருவமிருந்து பெற்றோரால் நன்கு பராமரிக்கப்படுதல் மெத்த அவசியமாகும். இதை யனுசரித்தே "மக்களுக்குச் சற்குரு மாதாபிதா" என்ற பழமொழியும் நம்மிடையே உலவுகின்றது. தமதருங்குழந்தைகளைச் செல்வமாய் வளர்ப்பதில் தாய் தந்தை இருவருக்கும் பொறுப்பிருக்கிறதாயினும் பெற்ற தாய் இக்கடமையைச் செலுத்துவதில் தலைமை வகித்திருக்கின்றாள். அதிலும் பெண் குழந்தையைப் பற்றிய சிரத்தை தாய்க்கு இரட்டிப்பாக ஏற்பட்டுள்ளது. இவ்வளவு பொறுப்பை ஏற்றிருக்கும் தாய் தன் மகளைப் பாடசாலைக்கனுப்பி விடுவதினாலேயே தன் பொறுப்பு நீங்கி விட்டதென்று நினைத்துப் பெருமை பாராட்டிக் கொள்ளுவாளாயின் இதைக் காட்டிலும் பெண்ணுலகத்திற்கு வேறு துர்ப்பாக்கியமுமுளதோ? சிக்கனம், தன்னடக்கம், வீட்டு வேலை முதலியவைகளைப் பெற்ற தாய் பழக்கினாலன்றி மற்றவரால் போதிக்க வியலுமோ? பெண் மக்களைத் தாராளமாகப் பள்ளிக்கூடங்களுக்கனுப்பக் கூடியதான பன்னிரண்டு வயதிற்குள் உபாத்திமார்கள் மாணவிகளுக்கு எவ்வளவு பாடங்களைத்தான் கற்பிக்க முடியும். ஒரு பெண் மகள் இல்லாளென்ற உயர் பதவியில் வைக்கக்கூடிய தன்மையைத் தாயின் உபதேசத்தாலடைகிறாளன்றி எண்ணும் எழுத்தும் கற்கக் கூடிய கலாசாலைகளால் அடைந்துவிட முடியுமோ? "இளமையிற் கல்" என்ற முதுமொழி ஏற்பட்டிருக்கும் காரணந்தானென்ன?

வீட்டளவில் போதிக்கக் கூடியவற்றில் தாய்மார் தக்க சிரத்தை யெடுக்காமலிருப்பதுடன் இதற்கு மாறாகவும் சிலர் நடந்து கொள்ளல் அறியாமையாகும். சிக்கனமென்பது பெண்களுக்குரிய அணிகலனாயிருக்க ஆடம்பரமே ஆரம்பம் முதல் போதிக்கப்படுமாயின் அப்பெண்மகளின் எதிர்கால நிலை எவ்வாறிருக்குமென்பதைப் பெற்றவள் சீர்தூக்கிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கவில்லையா?

இது விஷயத்திலுள்ள பல குறைகளை விரித்துரைப்பதென்றால் சாத்தியமில்லை. காலப் போக்கையும் மக்களின் நிலைமையும் ஆராய்ந்து நமது சகோதரிகள் இனியேனும் கண்விழித்துத் தமது பெண் குழந்தைகளின் கல்விப் பயிற்சியில் தங்களுக்குள்ள முழுப் பொறுப்பை உணர்ந்து கொள்ளுவார்களென்று நம்புகிறோம். தற்காலத்தியப் பெண் கல்வி முறையில் பெண் சமூகத்திற்கேற்றதான அம்

சம் சிறிதும் அமையாதிருப்பதுபோலவே அக்கல்விச்சாலைகளுக்குப் பெற்றோர் அனுப்பும் தோரணைகளும் பல. பள்ளிக்கூடம் செல்வதென்றால் அதற்கென்று ஒரு வேஷம், ஒரு உடை எனப் பலவித ஆடம்பரங்களும் மலிந்துவிட்டன. சிறு வயதிலாரம்பிக்கப்பட்ட இவ்வழக்கம் "தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்" என்று ஏற்பட்டு விடவும் கூடுமன்றோ. ஆகையால் கல்விப் பயிற்சி யென்பது அறிவைத் தெளிவுபடுத்தக் கூடியதென்பதையும், அறிவானது அடக்கமான முறையிலே முதிர வேண்டுமென்பதையும், தன்னடக்கம் அளிக்கக் கூடிய முறையிலேயே கல்வி புகட்டவேண்டுமென்பதையும், எதிர் கால வாழ்க்கை எவ்விதமமைந்திருப்பினும் பெண் மகளை ஆரம்பம் முதல் ஆடம்பரமற்ற வாழ்க்கையில் பழகச் செய்தல் இன்றியமையாததென்பதையும், வாழ் நாளைச் சிறப்பிப்பதே கல்வியின் முக்கிய நோக்கமென்பதையும், இத்தகைய கல்வியைக் கலாசாலைகளிலிருந்தே முழுதுங் கற்றுவிட முடியாதென்பதையும், இதற்குப்பெற்றதாயின் பராமரிப்பு முக்கியமென்பதையும் தாய்மார்கள் சிந்தித்து அதற்கேற்ற முறைகளைக் கைகொள்வார்களாக.

சுபம்!

தாரா.

(ஸ்ரீமான் T. S. K. சுவாமி)

"தாரா! சீக்கிரம் காரியத்தை முடித்துக் கொண்டு புறப்படு. நீ வராவிடிற் சோபிக்காது" என்றனள் மாலதி.

"அப்படியா—நான் வந்து சேருகின்றேன். நீ போய் மீதியுள்ள காரியத்தைப் பார்" எனப் பதிலுரைத்தனள் தாராவும்.

மாலதியின் வீட்டில் அன்று ஏதோ விசேஷமாக இருந்ததால், அங்கே வீணை வாசிக்கும் பொருட்டு அவள் தாராவை வரும்படி வேண்டிக்கொண்டாள். தாராவின் தந்தை வீணையிற் கைதேர்ந்த ஒரு பாகவதர். இவர் சங்கீதத்திற் றேர்ச்சியடைந்திருந்தது பற்றி நல்ல பணம் சம்பாதித்தார். ஆனால் சங்கீதத்தொழிலிருப்பவரது வழக்கப்படி, சம்பாதித்த பணத்தைச் செலவுஞ் செய்து வந்தார். இவர் திடீரெனக் காலகதியடையவே, தன் குடும்பத்திற்குத் தரித்திரத்தையும் கடனையுமே மீதி வைத்திருந்தார். ஆனால், தனக்குப் பிற்காலம் தன் வீணையாவது உபயோகப்படும்படி தனது ஒரே குமாரியாகிய தாராவிற்கு வீணையில் நல்ல ஞானத்தைக் கொடுத்திருந்தார்.

தாரா வாஸ்தவத்தில் மிக்க எழில் வாய்ந்து அகண்டு பிரகாசிக்கும் நேத்திரங்களோடு தாராவாகவே விளங்கினாள். சௌந்தரியத்திற்கேற்றவண்ணம் அவளிடம் குணமும் கலையும் பொருந்தியிருந்தன. குழந்தைப் பருவமுதற்கொண்டே தன் தந்தை வீணை வாசிக்கும்பொழுது அருகிலுட்கார்ந்து ஒவ்வொன்றையுங் கவனித்து வருவாள். வயதாக ஆக, இவளும் வீணையிற் பயின்று, தனது தந்தைக்குச் சமமாகத் தேர்ச்சியடைந்தனள்.

தந்தை இறந்தபின் அக்குடும்பம் அதிகக் கஷ்டங்களுக் குள்ளாயிற்று. வயிற்றை வளர்க்கும் பொருட்டுத் தாராவின் தாய் தையல் வேலையைச் செய்து வந்தனள். தாரா புத்தி கூர்மையுள்ளவளா யிருந்ததால், தன் தாயின் கஷ்டங்களை யறிந்து, பள்ளிக்குப் போவதை

நிறுத்தினாள். வீணையை ஓர் மூலையிற் சாற்றினாள். மற்றுந் தன் தாய்க்குத் தையல் வேலையில் உதவி புரிந்து வந்தாள். வீணை வாசித்து வந்த அவளது விரல்கள் இப்பொழுது தையல் வேலையிலமர்ந்திருந்தன.

அன்று தாரா தன் தாயுடன் தையல் வேலை செய்து கொண்டிருந்தபொழுது, இவளுடன் பள்ளியிற் பயின்று வந்த மாலதி அங்கு வந்து முன் கூறிய வண்ணம் வீணை வாசிக்கும் பொருட்டுத் தாராவைச் சீக்கிரம் தன் வீட்டிற்கு வரும்படி வேண்டிக்கொண்டனள்.

மாலதியும் தாராவும் ஒரு பள்ளியிற் பயின்று வந்தார்களென்பது வாஸ்தவமே. ஆனால் இவ்விருவருடைய ஸ்திதிகளும் மிகவும் வேறுபட்டிருந்தன. மாலதியின் தந்தை சோமசுந்தரம் என்பவர் கீர்த்தி பெற்ற பாரிஸ்டராயிருந்ததுமன்றி, ஒரு பெரிய ஜமீன்தாராகவுமிருந்தார். தாரா ஒரு குடிசையில் வசித்து வந்தனள். மாலதியோ ஒரு அரண்மனையிலிருந்தனள். ஜரிகை வஸ்திரங்களாலும், வைர நகைகளாலும் மாலதி தன்னை அலங்கரித்திருந்தனள். ஆனால் தாராவிடமோ கிழியாத வஸ்திரம் ஒன்றேனுமில்லை. மாலதி சென்றபின் தாரா தன் தையல் வேலையை நிறுத்தி, அறைக்குட்சென்று தன் வஸ்திர மூட்டையை யவிழ்த்து ஒவ்வொன்றாய்ப் பார்த்தாள். கடைசியில் அங்கிருந்த இரண்டு மூன்று புடவைகளிற் கொஞ்சம் சுமாராயிருந்த ஒன்றை யெடுத்துக் கட்டிக் கொண்டனள். இப்படிப்பட்ட வஸ்திரத்தைத் தரித்து தனவந்தரது வீட்டிற்குச் செல்ல லஜ்ஜைகொண்டாளாயினும், வருவதாக ஒத்துக் கொண்டிருப்பதால், லஜ்ஜைப்பட்டு பலனென்ன? பிறகு தன் தந்தையின் புகைப்படத்தை மிக்க அன்புடனும் ஆதரவுடனும் நமஸ்கரித்து, வீணையைத் தூக்கிக்கொண்டு சோமசுந்தரத்தின் வீட்டை நோக்கி நடந்தனள்.

தாராவைக் கண்ட மாத்திரத்தில் மாலதி எதிர் வந்துபசரித்து, அவளது கரத்தைப் பிடித்து உள்ளழைத்துச் சென்றாள். அங்கிருந்த தடபுடல்களைக் கண்ட தாரா ஸ்தம்பித்து நின்றனள். எங்கும் ஒரே பிரகாசமாயிருந்தது. பரிமள வாசனை அவ்வீடு முழுதும் வீசி வந்தது. அங்கு பல ஸ்திரீகள் கூடியிருந்தார்களாயினும், மத்திய பாகத்தில் தாராவிற்காக இடம் விடப்பட்டிருந்தது. லஜ்ஜை மிகுதியால் தாரா ஸ்திரீகளது கூட்டத்தைக் கண்டு பிரமை கொண்டனள். தனக்காக விடப்பட்டிருந்த இடத்திலுட்கார்ந்து வீணையை மீட்டினாள். விலைமிக்க வஸ்திர ஆபரணங்களால் அலங்கரித் துட்கார்ந்திருந்த ஸ்திரீகள் தாராவை நோக்கிய வண்ணம் ஒருவருக்கொருவர் மெதுவாகப் பேசி வந்தார்கள். ஆனால் தாராவோ தரையை நோக்கிய வண்ணம் வீணையை மீட்டித் தன் குரலை வெளியிட்ட மாத்திரத்தில் எங்கும் நிச்சப்தமே நிலைத்தது.

இது நிற்க, சோமசுந்தரத்தின் குமாரன் வசந்தகுமாரன் தாராவின் சங்கீதத்தைக் கேட்கும் பொருட்டு உற்சாகத்துடன் காத்திருந்தான். இவன் முன்னுற் பன்முறை இவளது சங்கீதத்தைக் கேட்டுள்ளான். வசந்தகுமாரன் வைத்திய கலாசாலையிற் பயின்று வந்தனன். புத்திசாலியாக யிருந்ததால், அக்கலாசாலையில் நான்கு வருடப் பரீட்சைகளில் தேறி யிருந்தான். கடைசி வருடப் பரீட்சையே மீதியிருந்தது. தாரா தன் மனைவியாகும் பட்சத்தில் தனது வாழ் நாட்கள் முழுவதையும் அவளது முகத்தை நோக்கிய வண்ணம், அவளது மதுரமான சங்கீதத்தைக் கேட்ட வண்ணம் கழிக்கலாமென எண்ணுவான். ஆனால் தன் மனதை ஒருவருக்கும் வெளியிடத் தைரியமில்லாதிருந்தான். அப்படி வெளியிட்டிருந்த போதிலும், அவனது தந்தை சோமசுந்தரம் அதற்குக்

கொஞ்சமேனும் சம்மதப்பட்டிரார். குபேர சம்பத்துள்ள சோமசுந்தரமெங்கே! பிச்சைக்காரப் பாட்டுக்காரி தாரா எங்கே!

"இப்பெண் வாஸ்தவத்தில் நன்றாக வாசிக்கின்றாள்" என்றனன் சோமசுந்தரம். "ஆமப்பா! வீணை தனத்தின் விரல்களைவிட இவளது விரல்கள் நன்றாய்ப் பேசுகின்றன" எனப் பகர்ந்தனன் அருகில் வீற்றிருந்த வசந்தகுமாரன்.

கொஞ்ச நேரத்திற்குள் தாரா சங்கீதத்தை முடித்து வீணையைக் கீழே வைத்தனள். உடனே வசந்தகுமாரன் தன்னை யாரோ பர்வதத்தினின்றும் பாதாளத்திற் தள்ளிய வண்ணம் வேதனைக்குள்ளானான். சோமசுந்தரம் தன் குமாரி மாலதியை யழைத்து, "உன் தாராவிற்கு இன்று என்ன சம்பாவனை செய்வதாக உத்தேசித்துள்ளாய்?" என விசாரித்தனன்.

"சந்திரகலா புடவை யொன்று இவளுக்குக் கொடுக்கவேண்டி அம்மா வாங்கி வந்துள்ளாள்."

"சரி; அத்துடன் இருபத்தைந்து ரூபாயுங்கொடு. சங்கீதத்திற் கேற்றவண்ணம் அவளிடம் குணமும் பொருந்தியிருக்கின்றது."

தனது கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி தாராவிற்குப் பரிசாகக் கொடுத்துத் தன் பிரேமையை வெளிக்காட்ட வசந்தகுமாரன் உத்தேசித்தனன். ஆனால் தன் தந்தைக்குமுன் அக்காரியத்தைச் செய்யக் கூடிய தைரியங் கொண்டவனல்ல.

மாலதி ரூபாயெடுத்துக்கொண்டு, மாடியை விடுத்துக் கீழே சென்றபின், வசந்தகுமாரனும் கீழே யிறங்கி, தாரா வீட்டிற்குச் செல்லும் பொழுது அவளது தரிசனங் கிடைக்குமென யெண்ணி, வாசற் கதவருகிற் காத்திருந்தான். அங்கு கூடியிருந்த ஸ்திரீகளெல்லோரும் சென்றார்களாயினும், தாரா மாத்திரம் இவனது திருஷ்டிக்குப் புலப்படவில்லை. பாபம்! தாரா தன் வீணையை யெடுத்துக்கொண்டு எப்பொழுதேயோ பின்புறக் கதவு வழியாகத் தன் வீட்டிற்குப் புறப்பட்டு விட்டனள்!

* * * *

தாராவின் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தி, வசந்தகுமாரன் கீழே யிறங்கிக் கதவைத் தட்ட, தாரா மிக்க அவசரமாய் வெளியே வர, அங்கே வசந்தகுமாரன் நின்றிருக்கக் கண்டு, லஜ்ஜையாலும் ஆச்சரியத்தாலும் ஸ்தம்பித்தனள். சில நாட்களாய்த் தாராவின் தாய் மிக்க நோயுடனிருந்தாள். இதுவரை தையல் வேலையிற் கிடைத்து வந்த சொற்பக் காசுக்குந் தடையாயிருந்தது. ஏழைகளுக்கு நோய் வந்தால் மிகவுங் கஷ்டமே! நல்ல டாக்டர் ஒருவரை யழைத்து வரத் தாரா இச்சை கொண்டாள். ஆனால் ஆகக்கூடிய காரியமா? இச்சங்கதி மாலதிக்குத் தெரியவே, அவள் உடனே தன் தமையன் வசந்த குமாரனை அனுப்ப, அவன் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்திருந்ததால், மிக்க ஆனந்தத்துடன் அவளது வீட்டிற்குச் சென்றனன். இதுவுமன்றி இப்பொழுது கடைசி வருடப் பரீட்சையில் தேறியிருந்ததால், டாக்டர் என்று எங்குஞ் செல்லப் பூர்ண அதிகாரத்தை யடைந்திருந்தனன்.

வசந்தகுமாரன் தாராவினுடைய தாயின் வியாதியின் காரணத்தை யறிந்து, ஒளஷதமுங் கொடுத்தான். இவ்வண்ணம் நாலைந்து நாட்கள் மருந்து கொடுக்கவே, தாராவின் தாய் வியாதியினின்றும் எழுந்தாள். ஆறுவது நாளும் வசந்தகுமாரன் தாராவின் தாயின் தேகஸ்திதியைப் பார்த்துவிட்டுப் புறப்படவே, தாரா தன் மனதை திடப்படுத்திக்கொண்டு

"தயவுசெய்து கொஞ்சநேரம் தாமதிக்கவும், காப்பிகொண்டு வருகின்றேன்" என்றனள்,

"ஆகா! கொண்டு வா. எனக்கு அவசரமொன்றுமில்லை" என வசந்தகுமாரன் ஆனந்தத்துடன் பகர்ந்தனன்.

சீக்கிரத்தில் தாரா காப்பி தயார்செய்து கொணர்ந்தனள். காப்பிப் பாத்திரத்தைக் கரத்திலேந்தி, அதை வசந்தகுமாரனுக் கெதிரிற் கீழே வைக்கக் குனிந்த சமயத்தில், குமாரனது கண்களும் இவளது கண்களும் ஒன்றுசேரவே, இவளது தேகம் சிலிர்த்தது.

"ஏழைகளாகிய எங்களுக்கு மிக்க உபகாரத்தைச் செய்துள்ளீர்."

"சே! உபகாரமென்ன? நான் எனது பீஸை விட்டு விடுவேனென நினைத்தாயா? உனது கரத்தில் வீணையைக் கொடுத்து, நானெனது பீஸை வசூல் செய்யாமலிரேன்" எனப் பகர்ந்த வண்ணம் வீணையை யெடுக்க எழுந்திருந்தான்.

ஆனால் தாரா அவனுக்குக் கஷ்டத்தைக் கொடுக்க மனமில்லாது சீக்கிரமெழுந்து வீணையைக் கொணர்ந்து, அழகிய கீர்த்தனமொன்றைப் பாடினாள். தாராவின் மதுரரூபம், அவளது மதுர ஸ்வரம், வீணையின் மதுர நாதம் இவைகளால் வசந்தன் ஸ்தம்பித்தனன். கீர்த்தனம் முடியவே அவளை நோக்கி "போதும், போதும். உனது மதுரமான ஒரு கீர்த்தனம் எனது பீஸ் முழுவதற்கும் சமமாயிருக்கிறது. நீ மறுபடியும் பாடுவாயாகில் நானுனக்குப் பீஸ் கொடுக்கவேண்டி யிருக்கும்" என்றனன்.

வசந்தன் தன்னை நோக்கி ஸ்துதியாகப் பகர்ந்த வார்த்தைகளைக்கேட்டு, தாராவின் உடல் சிலிர்த்தது. மறுபடியும் இருவரது நேத்திரங்களும் முன்போற் சந்தித்தன.

தாராவின் தாய்க்கு ஔஷதங் கொடுக்குங் காரணத்தைக்கொண்டு, வசந்தன் அவளது வீட்டிற்கு அடிக்கடி வந்தனன். தாராவும் மாலதிக்கு வீணை கற்றுக்கொடுக்கவேண்டி வசந்தனது வீட்டிற்கு அடிக்கடி போய் வந்ததால் அவள் கொண்டிருந்த லஜ்ஜையும் பீதியும் குறைந்தன. தன்னை யறியாமலேயே அவளது பவித்திர அந்தக்கரணத்தில் வசந்தனைப் பற்றி ஓர்வித உணர்ச்சி யுண்டாயிற்று.

சில நாட்களுக்குப் பிறகு தென்னிந்தியாவில் வெள்ளத்தில் வீடுகளைப் பறிகொடுத்து, உண்ணவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஏழைகளது உதவிக்காக அவ்வூரிலுள்ள ஸ்திரீகளெல்லோரும் ஒன்று கூடி ஒரு பாட்டுக் கச்சேரி ஏற்பாடு செய்தார்கள். முதலிற் சில பள்ளிப் பெண்கள் கோலாட்டத்துடன் பாடினார்கள். பிறகு பற்பல ஸ்திரீகள் ஒவ்வொருவராகப் பாடினார்கள். கடைசியாகத் தாரா வீணையைக் கையிலெடுத்துத் தந்திகளை மீட்டிப் பாடிய மாத்திரத்தில் அங்கிருந்த ஸ்திரீகளது வாய்களெல்லாம் மூடப்பட்டன. தெருவிற் போய்க்கொண்டிருந்த புருஷர்கள் இவ்வீணாநாதத்தைக் கேட்டுத் தெருவிலேயே நின்றார்கள். அச்சமயம் வசந்தகுமாரனது வண்டியும் அங்கே தென்பட்டது. ஆகா! என்ன ஆச்சரியம்! இச்சிறு பெண் தன் சங்கீதத்தால் எல்லோரையும் பைத்தியம் பிடிக்கச் செய்தனள்!

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு தாராவின் கச்சேரி முடிவுபெற்றது. அங்கு கூடியிருந்த ஸ்திரீகளும் கலகலவெனப் பேச ஆரம்பித்தார்கள். அங்கு கிடைத்த சொற்ப வெகுமதியைப் பெற்று, வீணையைக் கையிற் பிடித்துத் தாரா தன் வீட்டை நோக்கி நடந்தாள். சபையில் நின்றிருந்த ஜனங்களெல்லோரும் தங்களிருப்பிடத்தை நோக்கி நடந்தார்கள். நின்றிருந்த வண்டிகளும் ஒன்றன்பின்னொன்றாகச் சென்றன. ஆனால் வசந்தனது வண்டி மாத்திரம் அங்கேயே யிருந்தது. தாரா ஜனக் கூட்டத்தை விட்டுக் கொஞ்ச தூரஞ் சென்றதும், வசந்தன் வண்டியை அவள் சமீபமாய்க் கொண்டுபோய் நிறுத்தி "தாரா! வண்டியிலுட்கார்; நான் உன்னை உன் வீட்டில் விடுத்துச் செல்லுகின்றேன்" என்றனன். அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்கள் பார்க்கும் பட்சத்தில் பிரமாதமாக முடியுமென இவளறியாதவளல்ல. ஆனால் வசந்தனது வேண்டுகோளை மறுக்க இவளது மனம் இடங்கொடுக்கவில்லை. ஆகவே வண்டியிலுட்கார்ந்தாள். வண்டி கொஞ்ச தூரஞ் செல்லவே, இவ்விதந் தனித்து வண்டியில் வருவதால் வீண் அபவாதங்களுக்குத் தானுள்ளாகவேண்டியிருப்பதை அவனுக்கு ஸ்பஷ்டமாய்ப் புலப்படும்படிப் பகர்ந்தனள். கடைசியாக நீர் நிறைந்த நேத்திரங்களுடன், "நீரோ பெரிய அந்தஸ்திலுள்ளவர். தாம் என்ன செய்தாலும் பிரமாதமாகத் தோன்றாது. ஆனால் என்னைப் போலுள்ள ஏழைகள் இப்படிச் செய்வது தகாது" என்றாள்.

"தாரா! ஜனங்களது அபவாதத்திற்குப் பயந்து ஆகவேண்டியதென்ன? இன்று நான் வீட்டை யடைந்தவுடன் தாராவையே மணம் புரிவேனென எல்லோரிடமுஞ் சொல்லப் போகின்றேன்."

"நானுமவ்விதம் நிச்சயித்துள்ளேன். ஆனால் உமது தந்தை இதற்குச் சம்மதிப்பாரா? இவ்வேழைப் பெண்ணைத் தன் புத்திரனுக்கு மணஞ் செய்விப்பாரா?"

"நான் என் தாயிடமும் இதை விவரமாய்த் தெரிவிக்கப் போகின்றேன். லீலாவதியை எனக்கு மணமுடிக்க நிச்சயித்துள்ளார்களாயினும், நான் எனது நிச்சயத்தை அவர்களுக்குச் சொல்லப் போகின்றேன்."

இப்படிப் பேசி முடித்த மாத்திரத்தில், வண்டியும் தாராவின் வீட்டினெதிரில் நிற்க, அவளை அங்கே விடுத்து, வசந்தன் வீட்டிற்குச் சென்றனன்.

* * * * *

வீட்டை யடைந்தவுடன் வசந்தன் தன் மனதைத் தனது தாயிடம் வெளியிட்டனன். காவேரியம்மாள் இதற்குக் கொஞ்சமேனும் சம்மதிக்கவில்லை. ஜமீன்தார் ராஜேந்திரனது புதல்வி லீலாவதியைத் தன் மருமகளாயடைய இச்சை கொண்டிருந்தனள். மறுநாள் வசந்தனது பிறந்த நாளாயிருக்கவே, தாராவை வரவழைக்கும் பட்சத்தில் தன் தாய் இச்சங்கதியைத் தந்தையிடம் சொல்லாமலிரான் என எண்ணினான். இவன் திட மனமுள்ளவனாயிராததால் தன் தந்தையிடம் தன் மனதை வெளியிடப் பீதிகொண்டனன்.

காவேரியம்மாள் கொஞ்சநேரம் யோசித்திருந்தபின் "சரி, நாளை அவளை அழைத்துவா. பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றனள். மறுநாட் காலை வசந்தன் மகிழ்வுடன் தாராவின் வீடுசென்று, அவளைத் தன் வீட்டிற்கு வரும்படி வேண்டிக் கொண்டனன். தான் தன் தாயிடம் பகர்ந்த சங்கதி யாதொன்றையும் இவன் அவளிடஞ் சொன்னவனல்ல.

இங்கே காவேரியம்மாள் தன் பதியுடன் வசந்தனது இச்சையையும் அதைத் தடுக்கத் தான் செய்யப்போகும் ஏற்பாட்டையும் சவிஸ்தாரமாகச் சாற்றினாள். சோமசுந்தரமும் அவளது யுக்திக்குச் சம்மதித்தனர்.

மறுநாள் சோமசுந்தரத்தின் கிருகத்தில் ஸ்திரீகளும் புருஷர்களும் வந்துகொண்டே யிருந்தார்கள். தாரா தனக்குச் சோமசுந்தரத்தின் வீட்டில் வெகுமதியாகக் கிடைத்திருந்த சந்திரகலா புடவையைத் தரித்துவந்

தனள். வசந்தனுக்கு நிச்சயித்திருந்த பெண் லீலாவதியும் வைர ஆபரணங்களால் தன் தேகத்தை அலங்கரித்துக் கொண்டு அங்கு காணப்பட்டனள். ஆனால் தாராவின் சௌந்தரியத்திற்குச் சமமாக அங்கு வேறொருவருங் காணப்படவில்லை.

போஜனம் முடிந்தவுடன் வசந்தன் தந்தையுடன் மாடிக்குச் சென்று தன் தாய் தாராவை மாடிக்கு அழைத்து வருவாளெனக் காத்திருந்தனன். ஆனால் இங்கே காவேரி தாராவை ஒரு புறமாக அழைத்துச் சென்று, லீலாவதியைச் சுட்டிக்காட்டி "தாரா! இவள்தான் ஜமீன்தாரது புதல்வி லீலாவதி; இவளை நமது வசந்தனுக்கு மணம் புரிவிக்க நிச்சயித்துள்ளேன். கலியாணத்திற்கு இன்னும் நான்கு நாட்களேயிருக்கின்றன. நாங்கள் இங்கே நிச்சயித்திருக்குஞ் சங்கதியை வசந்தன் அறியாததால் அவன் உன்னிடம் வேறு அவ்விதமாகப் பகர்ந்துள்ளானாகையால், அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்படி என்னை வேண்டிக் கொண்டனன். இவன் மிகவும் இளகிய மனமுள்ளவனாகையால், உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவும் தைரியமில்லாதிருக்கின்றான். தாரா! இவன் எப்பொழுதாவது ஏதாயினும் உன்னிடஞ் சொல்லியிருந்தாலும், அதை வாஸ்தவமென நினைக்க நீ அவ்வளவு பைத்தியக்காரி யல்லவென நம்புகின்றேன்" என்றனள்.

இச்சங்கதியைக் கேட்ட மாத்திரத்தில் தாரா பிரமைகொண்டு ஸ்தம்பித்து நின்றாள். கண்கள் சுழன்றன. உடல் சிலிர்த்தது. நா வறண்டது. காவேரிக்கு யாது பதிலளிப்பதென அறியாது தவித்தனள். வசந்தனது வஞ்சனையை நினைத்தாள். இவன் இவ்வளவு நீசனாக இருப்பானாவெனச் சமுசயித்தாள்.

"லீலாவதி! நீ இவளை அறிவாயா? இவள் எங்கும் புகழ் பெற்ற வீணைத் தாரா!" என்று காவேரியம்மாள் அருகில் வந்த லீலாவதியிடம் பகர்ந்தனள்.

"பெயரைக் கேட்டிருக்கின்றேன். ஆனால் இதுவரை பார்த்ததில்லை. என்ன, ஒரு மாதிரியா யிருக்கிறாயே! தேக சௌக்கியமில்லையோ?" என லீலாவதி விசாரித்தனள்.

"ஒன்றுமில்லை. சௌக்கியமே" எனத் தன் கண்ணீரை மறைத்துத் துடைத்துக் கொண்டே தாரா பதிலுரைத்தனள்.

"இவளது வீணையில் நமது வசந்தனுக்கு அதிக இஷ்டம். நீ இவள் வீணையைக் கேட்டுள்ளாயா?

"இல்லை, இதுவரை கேட்டதில்லை."

"தாரா! உனது மதனி லீலாவதிக்குக் கொஞ்சம் வீணை வாசித்துக் காட்டேன்."

"நான் வீணை கொண்டு வரவில்லை" எனத் தலை குனிந்த வண்ணம் தாரா பதிலுரைத்தனள். இன்று அங்கே அவள் வீணை வாசிக்க வந்தவளல்ல. வசந்தனைத் தான் கூடிய சீக்கிரத்தில் மணமகனாக அடையப் போகிறோம் என்ற உத்தேசத்துடன் அவள் அங்கு வந்திருந்தனள்.

'வீணை கொண்டு வரவில்லை' எனத் தாரா பகர்ந்தபின், காவேரியம்மாள் தாராவின் வீட்டிற்கு ஆளனுப்பி வீணையைக் கொண்டுவரச் செய்து அதை அவளிடங் கொடுத்தனள். அச்சமயம் தாராவின் உடல்மட்டும் அங்கிருந்த போதிலும், மனம் வேறெங்கேயோ சஞ்சரித்துக்கொண்டிருந்தது. வீணையைக் கையிலெடுத்தாளாயினும், விரல்கள் கொஞ்சமேனும் அசையவில்லை. திடீரென வீணையும் கரத்தை விட்டகல, மூர்ச்சித்துக் கீழே விழுந்தனள்.

காவேரியம்மாள் உடனே வேண்டிய சிகிச்சைகளைச் செய்து, அவளை வண்டியிலேற்றி, அவளது வீட்டிற்கனுப்பினாள். இதையறிந்த வசந்தன் கீழே வர எழுந்திருக்கவே, சோமசுந்தரம் அவனைப் போக விடாமல் தடுத்து, "அடே மூர்க்கா! இப்பிச்சைக்காரி வீணைக்காரியின் வீட்டிற்கு அடிக்கடி சென்றாய். இவளை வண்டியிலுட்காருவித்துத் தெருத் தெருவாய்ச் சுற்றினாய். இவ்வளவு போதாதா? இன்னுமா இவளுடன் செல்ல வேண்டும்? இங்கு வந்திருப்பவர்கள் உன்னைக்கண்டு சிரிக்கவா நீ யிவ்வாறு செய்கின்றாய்?" என்றார். வசந்த குமாரனது வாய் அடைபட்டது. தன் மனதை வெளியிடத் தைரியமிருந்தாலல்லவோ? தந்தையின் வார்த்தையைக் கேட்டுத் தரையை நோக்கிய வண்ணம் நின்றுகொண்டிருந்தனன்.

* * * * *

தாரா வீடு சென்றவுடன் வீணையை ஒரு மூலையிற் சாற்றிப் படுக்கையிற் படுத்துக் கண்ணீர் உதிர்த்தனள். அன்று அவள் உண்ணவுமில்லை. தன் மனோவேதனையின் காரணத்தைத் தன் தாயிடம் கூறவுமில்லை. மறுபடியும் வசந்தன் இன்று அல்லது நாளை திரும்பிவந்து தன் துக்கத்தை நிவர்த்தி செய்வானென்ற வீண் ஆசை மட்டும் ஒவ்வொரு நாளும் அவளுக்கு இருந்து வந்தது. நாலாவது நாள் மாலை வேளையுஞ் சமீபித்தது. சோமசுந்தரத்தினது வீட்டின் மங்கள வாத்தியத் தொனி இவளது காதில் விழுந்தது. அச்சமயமே இவள் மனத்திலிருந்த ஆசை முழுதும் இருந்த இடந்தெரியாது மண்ணிற் கவிழ்ந்தது. இதுவரை ஜனங்கள் இவளைக் குறித்துச் சொல்லி வந்த அபவாத வார்த்தைகளை 'தான் வசந்த குமாரனை அடையப்போகிறோம்' என்ற ஆசையாற் சகித்து வந்தனள். அதிக நேரம் யோசித்தாள். அழுதாள். ஆயினும் வேறொரு மார்க்கமுந் தெரியவில்லை. கடைசியாகத் துக்கத்தினின்றும், நிராசையினின்றுந் தப்ப ஒரு வழி கிடைத்தது.

* * * * *

மறுநாட் காலை தாராவின் தாய் அதிக நேரஞ் சென்றும் தன் பெண் எழுந்திராததால், அவளை யெழுப்பச் சென்றபொழுது அவள் தன் படுக்கையிற் பிணமாகக் கிடந்தனள். அவளது ஆத்மா சுவர்க்கத்தை யடைந்து எவ்வளவோ நேரமாயிருந்தது. ஆனால் அவளது வீணையோ மூலையிற் சாத்தியவண்ணமிருந்தது. வசந்தகுமாரா! ஏன் இக் கோரமான ஸ்திரீ காதகத்திற் குள்ளானாய்? தோஷமற்ற அச்சுகுமார புஷ்பம் உனது அக்கிரமத்தாலன்றோ நாசமடைந்தது! ஏனிந்த ஜன்ம முனக்கு?

(மனோரஞ்சனிலிருந்து மொழி பெயர்க்கப் பட்டது.)

ஆசை.

(ஸ்ரீமதி செ. ராஜம்மாள்)

உலகில் பொதுவாக மனிதர் அடையுஞ் சகல கஷ்டங்களுக்கும் முக்கிய காரணம் ஆசையே. இவ்வுலகில் யாவரும் சந்தோஷமாக இருக்கவே விரும்புகிறார்கள். எவரும் கஷ்டதுக்கங்களை அனுபவிக்க விரும்புவதில்லை. சந்தோஷமாயிருக்க வேண்டுமானால் ஆசையையொழிக்க வேண்டும். ஆசையை யொழிப்பதென்றால் பொன் பொருள் முதலியவற்றிலுள்ள ஆசை மட்டுமல்ல. தரித்திரத்தையடையும்போதும் அஷ்டைசுவரியத்திலிருக்கும்போ

தும் ஒரே விதமான திருப்தியுடன் எவர்கள் இருக்கிறார்களோ அவர்கள்தான் ஆசையற்றவர்கள். ஆசையற்றிருப்பது மிகவுங் கஷ்டமென அநேகர் எண்ணக் கூடும். ஆசை எனுங் கொடிய யானையை விவேகம் எனும் அங்குசத்தால் அடக்குவது மிகவும் இலேசாகும். மனிதப் பிறப்பினர் முக்கியமாய் அடையவேண்டிய மோட்ச விருப்பத்திற்கும் குருகுலவாசம் முதலிய நல்ல சகவாசங்களுக்கும் தடையாய் நிற்பது ஆசையே. யாவற்றினும் பொருளாசையே மிகவுங் கொடியது. அநேகருக்குப் பணம் வந்தால்

‘சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுளார் மூகராவர்
பறியணி செவியுளாரும் பயிறரு செவிடராவர்
குறிபெறு கண்ணுளாருங் குருடராய் முடிவான்றே’

என்றதுபோல் அகங்காரம் வந்து விடுகிறது. மனிதரிடத்திருக்கும் துர்க்குணங்களில் அகங்காரமே மிகவுங் கொடியது. அக்கொடிய அகங்காரத்தோடு கூடிய பொருளால் யாது பிரயோசனம்? பொருளால் பிரயோசனம் இல்லை என்று சொல்லவில்லை; அகங்காரம் இல்லாமலிருப்பதே விசேஷம்.

பஞ்சமா பாதகங்களாகிய கொலை களவுகள் காமமாகிய துஷ்டச் செய்கைகளுக்கும் ஆசையே காரணம். இகத்தில் கஷ்டத்தையும் சஞ்சலத்தையுமே கொடுத்துப் பரலோக விருப்பத்தையுங் கெடுக்கும் ஆசையை வேரோடு களையவேண்டும். ஆசை யென்னும் விடுசிகா வியாதி நம்மைத் தாக்காமல் பார்ப்பதே மனித வாழ்க்கையின் முக்கிய கடனாகும்.

‘ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினு மாசையறுமின்கள்
ஆசைமடப்பட வாய்வருந்துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தமாமே’.

நூர்ஜஹான் அல்லது பாத கண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

(342-வது பக்கத் தொடர்ச்சி)

இருபதாவது அத்தியாயம்.

தன் விஷய வாசனைக்குப் பலியான ரஜியாவை இனிமேல் தரிசிக்கவும் வழியில்லையெனக் கண்ட சலீம், அவளை மறந்து, மேஹருல் நிஸாவையடைய எண்ணினான். அவளது தந்தையின் சம்மதத்தைப் பெறுவதே மீதியிருந்தது. அதைப் பெற்று மேஹருல் நிஸாவை மணந்து அவளைத் தன் பட்டராணியாகக் கொள்ளவேண்டும் என்ற விசாரத்திலிருந்தனன். சில தினங்களுக்கு முன்னால், இனிமையாகப் பேசித் தனது பிரேமபாசத்தாற் கட்டிய ரஜியாவை இப்பொழுது மறந்தான். அவளது கணவன் அவளை வேறொரு அன்னிய புருஷனுடன் தனித்திருக்கப் பார்த்ததால் அவள் என்னென்ன சங்கடங்களுக்குள்ளாயினளோ என்பதைக் குறித்துக் கொஞ்சமேனுங் கவலை கொண்டவனல்ல. காற்றிலடிபட்டு வரும் ஒரு தாமரையை விடுத்து, பூரண கந்தத்துடனிருக்கும் வேறொரு தாமரையைச் சுற்றி ரீங்காரஞ் செய்துவரும் வண்டைப்போல், சலீமின் மனமும் மேஹருல் நிஸாவை நாடியது.

ஓர் சுப தினத்தில் சலீம் அவளது தந்தை அயாஸ் பெக்கின் வீட்டை நாடிச் சென்றனன். தன் வீட்டில் இளவரசனைக் கண்ட அயாஸ் ஆச்சரியத்திலாழ்ந்தவனாய், மிக்க உபசாரத்துடன் அவனை வரவேற்று ஓர் பெரிய ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்தனன். க்ஷேம சமாசாரங்களை விசாரித்தறிந்தபின், “மகா ராஜா! இவ்வளவு சிரமமெடுத்துக் கொண்ட காரணம் யாதோ?” என வினவ, இராஜகுமாரனும் தன்னைச் சுற்றி நாலா பக்கங்களிலும் பார்த்துக் கொண்டு, ஒரு முக்கிய சங்கதியைக் குறித்துத் தான் இங்கு வந்திருப்பதாகத் தெரிவித்து, அயாஸைத் தன் சமீபமாக வந்துட்காரும் பொருட்டு வேண்டிக் கொண்டனன். இளவரசனது வார்த்தைகளைக் கேட்ட அயாஸ் மிக்க உற்சாகங் கொண்டவனாய், இளவரசனுக்கெதிரிலிருந்த வேறொரு ஆசனத்திலமர்ந்தனன். பிறகு சலீம் மறுபடியும் நாலா பக்கங்களிலும் பார்த்துக்கொண்டு, தான் அங்கு வந்த காரணத்தைப் பின் வருமாறு தெரிவிக்கலானான்: “ஐயா! தாம் ஏற்கனவே அடைந்திருக்கும் பாக்கியத்தை அதிகரிக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் நானிங்கு போந்துள்ளேன். தம்மிடத்தில் ஓர் அற்புதமான ரத்தினமுளது. அந்த ரத்தினத்தைக் குறித்து உமது நோக்கம் எவ்வாறுளது என அறிய இச்சை கொண்டுள்ளேன். எனது வேண்டுகோளுக்குத் தாம் இணங்குவீரென்ற பூர்ண ஆசையோடிருக்கிறேன். அந்த ரத்தினம் யாதெனத் தாமறிந்திருப்பீர். தமது அதிலாவண்யக் கன்னிகை சரியான வயதையடைந்திருப்பதால், அவளது விவாகத்தைக் குறித்துத் தாம் கவலை கொண்டிருக்கவேண்டும். தமது இளங்குமரி அரண்மனையைத் தவிர வேறெங்குமிருக்கத் தகுந்தவளல்ல. ஆகையால் அக்பர் பாதுஷாவின் புத்திரனுக்கே அவளை மணஞ்செய்து கொடுக்கவேண்டுமெனத் தம்மைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.”

இளவரசனது கடைசி வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் அயாஸின் முகம் ஆச்சரிய மிகுதியால் பிரகாசித்தது. அவனுக்கு யாது உத்தரமுரைப்பதென அறியாது கொஞ்சநேரந் தயங்கினான். இவனைக் கண்ட சலீம் அதைரியமடைந்தவனாய், “ஐயா! இஃதென்ன உத்தரமுரையாதிருக்கின்றீர்? எனது வேண்டுகோளைத் தாம் அங்கீகரிக்க இஷ்டமில்லைபோலும்!” என்றனன். இவ்வார்த்தைகளைச் சொல்லி முடிப்பதற்குள் அயாஸ் கரங்கள் கூப்பி வணக்கத்துடன், “மகா ராஜா! வீட்டைத் தேடி வந்த லக்ஷ்மியை வேண்டாமெனத் தடுப்பவருமுண்டோ? நான் மௌனமாயிருப்பதற்குக் காரணம் யுவராஜா என்னைப் போலுள்ள ஏழையைப் பரிகசிப்பதாகத் தோற்றியது. யுவராஜாவின் யோக்கியதையெங்கே! என்னைப் போலுள்ள பிச்சைக்காரனது யோக்கியதையெங்கே!”

சலீம்:—“என்ன சொல்லுகின்றீர்? சேற்றிற் றாமரை உற்பவித்தால் அத்தாமரையின் யோக்கியதை குறைந்து விடுகின்றதோ? கரிச்சுரங்கத்தில் வைரமகப்படுவதால், அதின் தேஜஸ் கம்மியாய் விடுகின்றதோ? அந்த வைரம் அரசர்களது கழுத்தில் ஜ்வலிப்பதுபோல், தமது வீட்டில் ஜனித்துள்ள மாணிக்கம் இராஜாக்களது கட்டிலேயே சோபித்திருக்கமாளும்.”

அயாஸ்:—“யுவராஜாவிடம் நானதிகமாகப் பகருவது அனாவசியமே. பாஸ்வாதீனத்திலிருக்குஞ் சங்கதியைத் தாமறியாதவரல்ல. இவ்விஷயத்தைக் குறித்து பாதுஷாவின் அனுமதியைப் பெறுவீராகில் நன்மையாயிருக்கும்.”

சலீம்:—“அஃதேன்? இது ராஜாங்க விஷயமல்ல. யாருடைய அனுமதியையும் பெற வேண்டுமென இச்சை கொள்ளுகின்றீரோ,

அவருடைய புத்திரனல்லவோ நான்! நீர் உமது புதல்வியை எனக்கு மணஞ் செய்விப்பீராகில், பாதுஷாவின் விசேஷ கிருபையை அடைவீரன்றி, கோபத்திற்குள்ளாகமாட்டீர்."

அயாஸ் :—(கோபங் கொண்டவனாய்) "பாதுஷாவின் கிருபை ஒரு புறமிருக்கட்டும். நான் யாருடைய உப்பைத் தின்று வருகின்றேனோ, அவர் உயிருடனிருக்கும்வரை அவரது சம்மதமிருந்தாலன்றி, யுவராஜாவிற்கு என் புதல்வியை மணஞ் செய்விப்பேனாகில், அவரை அவமதித்ததாகுமென எனதற்ப புத்திக்குப் புலப்படுகிறது. பிறகு யுவராஜாவினிடம்—"

சலீம் :—"உமது ராஜ நிஷ்டையின் கற்பனை மிக்க அதிசயமாயிருக்கிறதென்பதிற் சங்கையில்லை. பிரேமையாகிய இராஜ்யத்தில் அரச ஆக்ஞையில்லை. உமது புதல்வி என்னை மனதில் வரித்திருந்து, நானுமதற்குச் சம்மதித்திருந்தால், நீரல்ல—பாதுஷாவாலும் ஒருபோதும் இதைக் தடுக்க முடியாது."

அயாஸ் :—"மகா ராஜா! நான் ஏதோ பகருகின்றேனெனக் கோபங் கொள்ளக் கூடாது. தருணர் தருணிகள் பரஸ்பரம் ஒருவரையொருவர் இச்சிப்பது சகஜமே. உலக அநுபவம் விசேஷமாக அவர்களிடமில்லாததால், அப்பிரேமை சுத்தமாயுளதா என்பதையறியச் சக்தியற்றிருப்பது பற்றி, அவரவர்களது பெற்றோர்களின் சம்மதத்தைப் பெறுவதும் மேன்மையாகும்."

சலீம் :—(கோபத்துடன்) "உமது கர்நாடக வழியை இக்காலத்துத் தருணர் தருணிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆயினும் பாதகமில்லை. நான் சமயம் பார்த்திருந்து பாதுஷாவினிடம் இதைத் தெரிவித்து அவரது சம்மதத்தைப் பெறுகின்றேன். பிறகு வேறொரு தடையுமிராதே?"

அயாஸ் தன் தாடியை யுருவிக்கொண்டு மிக்க மகிழ்வுடன், "பிறகு கேட்பானேன்? பாதுஷாவே பகர்ந்தபின் எவன்தான் தன் புதல்வியைச் சரியான இடத்தில் மணம் புரிவிக்க யோசிப்பான்?" என்றனன்.

"சரி, இனி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கின்றேன்" எனப் பகர்ந்து சலீம் அயாஸினிடம் விடைபெற்றுத் தன் மஹாலை நோக்கிச் சென்றனன். அயாஸோ ஆங்கிருந்த ஓர் மஞ்சத்திற் படுத்து மனோ ராஜ்யத்திலாழ்ந்தான். ராஜ்ய லக்ஷ்மியின் திவ்வியப் பிரகாசத்தின்முன் தன்னை மறந்தான். "நானின்று கேட்டு வந்ததும் வாஸ்தவமாயிருக்கலாமோ? கனவோ அல்லது நினைவு தானோ? கந்தஹார்வனத்தில் என் திருஷ்டிக்குப் புலப்பட்ட அம்மாயையோ? ஒரு துளி பாலுமில்லாது ஜனமற்ற கந்தஹார்வனத்தில் இறக்குந்தருவாயிலிருந்த என் மேஹரா இந்துஸ்தானத்துப் பாதுஷாவின் குமாரனது பட்டாணியாகப் போகின்றாள்! ஈசுவரா! உனது லீலையை என்னவென்று சொல்லுவேன்! பிரியே அமீனா! அமீனா! இப்படிச் சுகப்படுஞ் சமயத்தில் உன் கன்னிகையிட மில்லாதிருக்கின்றாயே. உன் புதல்வியின் வைபவத்தைக் கண்டு நீ எவ்வளவு ஆனந்தமுறுவாய்!"

அமீனாவின் நாமத்தை உச்சரித்த வண்ணம் அயாஸ் துக்கமேலீட்டாற் கண்ணீரைப் பெருக்கினான். அவனது நீர் நிறைந்த நேத்திரங்களுக்கு முன் அமீனாவின் சுந்தரமூர்த்தி புன்சிரிப்புடன் நின்றிருக்கக் கண்டனன். கொஞ்சநேரம் கண்ணீரைப் பெருக்கியிருந்து, ஒருவாறு தன் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

பிறகு தன் புதல்வியின் விவாகத்தைக் குறித்துச் சிந்திக்கலானான். முதலில் இளவரசனை மருமகனாக அடைய ஆனந்தமடைந்தது

வாஸ்தவமே. ஆயினும் சலீமின் கெட்ட குணங்கள் இவனுக்கு ஒன்றன்பின்னொன்றாகத் தோன்றவே, யோசனையிலாழ்ந்தான். பாதுஷாக்கள் இளவரசர்களது எண்ணிறந்த மனைவிகள் மைனாக்களைப்போற் கூண்டிலடைபட்டுக் கஷ்டங்களை யநுபவிப்பது இவனுக்கு ஞாபகம் வந்தது. மற்றும் பல பேகங்கள் அரண்மனையிலிருந்த போதிலும் எப்பொழுதும் விபசாரத் தொழிலிலேயே யிருந்து வருவதை இவனறியாதவனல்ல. இவைகள் ஒவ்வொன்றாக இவனது கண்களுக்கு முன் தோன்றவே, கோபங் கொண்டவனாய், "காசுக்காசைப்பட்டு என் மேஹரை நரககுண்டத்தில் தள்ளுவேனா? இதைவிடச் சீலனான ஒரு ஏழைக்கு விவாகஞ்செய்து கொடுப்பதே மேலாம். ஷேர் ஆப்கனுக்கு இன்னும் விவாகமாகவில்லை, எனது புதல்விக்கு அவனே யோக்கியனாவான். சாந்த சுபாவமுள்ளவன், ரூபவந்தன், விநயசீலன், அதிசூரன்—வேறென்னவேண்டும்? இவனது சௌரியம், குணம் முதலியவற்றைக் கண்டுள்ள பாதுஷா, இவனைச் சேனாதிபதிகளி லொருவனாகச் செய்ய யோசித்துள்ளார். இவனது குணம் ஒன்றே பெரிய பெரிய சர்தார் ஜமீன்தார்களை வெட்கப்படும்படி செய்கின்றது. விவாகமென்றால் ஜன்மமுடிப்பு. ஐசுவரியம் நீர்க்குமிழிபோல் க்ஷணநேரமே நிலைத்திருக்கின்றது. எனக்கோ ஓரே பெண்! அதுவுமன்றி தாயற்றவள்! ஆகையால் யோக்கியமான ஒரு வரனைத் தேடிக் கொடுப்பதே என் கடமை. என்னவானாலும் அதிசூரனான ஷேர் ஆப்கனே இவளுக்குத் தகுந்த கணவனாவான்" என தீர்மானித்தனன்.

(தொடரும்)

பெண் மக்களுக்கு எத்தகைய கல்வி தேவை.

(ஸ்ரீமதி S. அம்புஜவல்லி)

சகோதரிகளே!

நமது நாட்டிலுள்ள ஸ்திரீகள் எல்லோருக்கும் கல்வியறிவு அத்தியாவசியம் என்பதைப் பற்றி இரண்டு அபிப்பிராயம் இருக்க முடியாது. ஆனால் நமது இந்திய சகோதரிகளின் நலமான மேம்பாட்டிற்குரிய கல்வி எத்தகையதாயிருத்தல் வேண்டும், அக்கல்வியினால் ஏற்படும் அறிவு எவ்வாறு பயன் தரத்தக்கதாக இருத்தல் வேண்டும், தற்காலம் நமது பெண்களுக்கு பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் கல்வியும், அதனால் உண்டாகும் ஞானமும் அவர்களின் உண்மையான மேம்பாட்டின் அபிவிருத்தியை நாடினவையாய் இருக்கின்றனவா என்பதைப்பற்றி அபிப்பிராய பேதம் இருப்பதாக நான் நினைக்கிறேன்.

எனதநுபவத்திலிருந்தும் எனது சிற்றறிவுக் கேற்றமட்டிலும் தற்போது பெண் கலாசாலைகளில் புகட்டப்பட்டுவரும் கல்வியும் போதனாமுறையும் உண்மையான நமது நாட்டு ஸ்திரீகளின் மேம்பாட்டைக் கருதியதாகவாவது, நமது தேசாசாரம் மதக்கோட்பாடுகள் இந்திய ஸ்திரீ தர்மம் இவைகளுக்கு ஏற்றதாகவாவது இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அன்றியும் போதனா முறையும் கற்பிக்கப்படும் விஷயங்களும் சாஸ்திரங்களும் ஆண்மக்களுக்கும் பெண் மக்களுக்கும் சிறிதும் வேறுபாடே இல்லாமல் நிருமாணிக்கப்பட்டு போதிக்கப்பட்டு வருகின்றன. ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் கற்பிக்கப் படவேண்டிய கல்வியும் போதனா முறையும் வெவ்வேறான தன்மையுடையது என்பது மேல் நாட்டு ஸ்திரீகளுக்

கென ஏற்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கும் முறைகளிலிருந்தும் விஷயங்களிலிருந்தும் விளங்கும். அக் கலாசாலைகளில் கற்பிக்கப்படும் முறைகள் நமது பெண் மக்களுக்கு முற்றிலும் ஏற்றவை யென்றாவது அம்மாதிரியே நமது கலாசாலைகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்றாவது நான் கூறவரவில்லை.

இப்போது நமது சகோதரிகள் பெரும் கல்வியறிவு ஏதாவது ஒரு தொழிலோ, உத்தியோகமோ செய்ய விரும்பும் வெகு பாண்மையான பெண்களுக்குமட்டும் பிரயோஜனமாவதன்றி குடும்ப சம்ரக்ஷணையில் ஈடுபட்டு வாழ் நாட்களை இனிது கழிக்க விரும்பும் சகோதரிகளுக்கு ஏற்றதேயல்ல என்பது எனது துணிப்பு. அன்றியும் ஒரு பெண் 20 அல்லது 25 வயது வரையில் படித்து, பி.ஏ. முதலிய பட்டங்கள் பெற்றாலல்லாது படித்தவள் என கருதுவதற்கோ இடமில்லை. இம்மாதிரி படித்துப் பட்டதாரிகளாவதற்கு வேண்டிய தேக பலமும், மனோதிடமும் ஐசுவர்யமும் இல்லாத பெண்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையில் தகுந்த படிப்பின் பயனைச் செலுத்தி வாழ்நாட்களைத் தங்களுக்கும் தங்கள் கணவர் மக்கட்களுக்கும் இனிப்புடையதாகச் செய்ய எவ்விதமான கல்வி வேண்டுமோ அவ்விதக் கல்வியைச் சிறிதும்பெற இடமில்லாமலிருக்கிறது. இவ்விதமான சகோதரிகள் நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேற்பட்டவர்கள். ஆகவே ஜனத்தொகையில் நூற்றுக்குப் பதின்மரோ அல்லது அதிலும் மிக்கக் குறைந்த எண்ணிக்கையுடைய ஒரு வெகு சிறிய கூட்டத்தாருக்கு மட்டிலும் பிரயோஜனமாகும் கல்வியை எப்படிப் பொதுவில் ஸ்திரீகளுக் கேற்றதாக மதிக்கலாவது? பெரும்பான்மையான ஸ்திரீகளுக்கேற்ற கல்விக் கோட்பாட்டில் உயர்ந்த கல்வி முறைக்கும் விஷயங்களுக்கும் இடமிருக்கக்கூடாது.

உதாரணமாக நமது தேச சரித்திரத்தை இரண்டாவதாக ஒதுக்கி வைத்து, கிரேக்கர் ரோமியர் முதலியவரது சரித்திரத்தைப் போதிப்பதில் என்ன விசேஷம்? இவ்விரு தேசத்து ஆசாரங்களும் பழக்க வழக்கங்களும் நமது நாட்டிற்குறியனவையா? அவைகளை விஸ்தாரமாக போதிப்பது பயனற்றதல்லவா?

ஸ்திரீ தர்மத்தின் முக்கிய அம்சம் பிரஜாபிவிருத்தி. புருஷன் குடும்பரக்ஷகன். ஆகவே ஸ்திரீயின் கல்வி யறிவு முக்கியமாக அவளது தர்ம நிலையை அபிவிருத்தி செய்து அந்நிலைமையில் அவள் குடும்பத்திற்கோர் திலகம் போன்று விளங்க செய்வதல்லவா? பிரஜாபிவிருத்தி என்னும் பதம் கேவலம் பிள்ளைகளைப் பெறுவது என்பதை மட்டும் குறிப்பதல்ல. தாம் பெற்ற குழந்தைகளைச் சரி வர போஷித்து நோய்க்கிடங் கொடாமல் வளர்த்து, சிறு பொழுதிலிருந்தே அவர்களுக்கு நீதி மார்க்கங்களையும் சுகாதார வழிகளையும் கற்பித்து அவ்வழிகளிலிருந்து அவர்கள் வழுவவொட்டாமற் பாதுகாத்து அவர்களின் பால்யத்திலேயே தாய் நாட்டு சேவை செய்வதின் கவுரவத்தையும் பெருமையையும் இனிமையாகப் புகட்டி வயது வந்தவுடன் அவர்கள் தேசத்தின் அங்கத்தினராய்த் தங்கள் உரிமைகளையும் கடமைகளையும் கவனித்து நடத்தும்படி செய்வது இவ்வளவும் பிரஜாபி விருத்தி என்னும் பதத்தில் அடங்கியவை. ஆகவே ஸ்திரீ தர்மத்தின் முக்கியாம்சம் புருஷ தர்மத்தினது எல்லா அம்சங்களையும் சேர்த்துக் கணக்கிட்ட தொகுதியைவிட வெகு சிரேஷ்டமானதோடு கூட ஸ்திரீகளுக்கே அதிகமான பொறுப்பை ஏற்படுத்துகிறது. இது தவறல்ல. ஏனெனில் புருஷன் வீட்டில் தங்கும் நேரம் வெகு குறைவானது. குழந்தைகளுடன் எந்நேரமும் பழகி வரும் தாய்தான் அக்குழந்தைகளின் சரியான அபிவிருத்தியைக் கவனித்து நடத்த தகுந்தவள் என்றால், இவ்வித கடமை வாய்ந்த ஸ்திரீ அக்கடமைகளைச் சரி வர நிறைவேற்றத் தக்க அறிவு வாய்ந்தவளாக இருக்கவேண்டுமல்லவா? அவ்வறிவை அவளுக்குப் புகட்டக் கூடிய கல்வி நமது கலாசாலைகளில் கற்பிக்கப் படவேண்டாமா? நமது இந்திய வீரர்களின் செய்கைகளும் பௌருஷமும் இயற்கையில் நமது சிறுவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்குவதுபோல அயல் நாட்டு வீரர்களது செயல்கள் உண்டாக்குவதில்லை. நமது நாட்டு ஸ்திரீகளில் பெரும்பாலருக்கு குடித்தன சிக்கனம் என்னும் பதத்திற்கு அர்த்தம் கூட தெரியாது. எங்ஙனம் அவர்கள் குடித்தனத்தை சிக்கனமாக நடத்த கூடும்? இங்கிலாந்து ஜெர்மனி முதலிய் மேநாடுகளிலும் ஜப்பான் தேசத்திலும் உறிமையான கல்வித் தேற்சியினால் ஸ்திரீகள் சிக்கன வழிகளைக் கைப்பிடித்து, குடும்பத்தை நிர்வகித்து வருகிறார்கள். அதன் பயனாக அத்தேசத்திய ஜனங்கள் செல்வ மேம்பாட்டை யடைந்திருக்கிறார்கள். நமது பெண் கலாசாலைகளில் கற்பிக்கப்படும் கல்வி முறையில் குடித்தன சிக்கனம் என்ற விஷயத்தை பிரஸ்தாபம் கூட செய்யவில்லை.

இரண்டாவது இன்னொரு முக்கியமான குறையென்ன வென்றால் நமது கலாசாலைகளில் தேச பாஷையில் எல்லா விஷயங்களையும் போதிக்காமல் ஆங்கில பாஷையில் போதிப்பதே. இதனால் விளையும் தீங்குகள் பல. முக்கியமாக கல்வி கற்கும் மாணாக்கர்கள் (ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும்) தாய் பாஷையை மறந்து பகிஷ்காரம் செய்வதோடு வீட்டில் தங்கும் போதுங் கூட ஆங்கில பாஷையை இடையிடையே கலந்து ஆங்கில பாஷையின் போக்கின்படியே சம்பாஷிக்கிறார்கள். நமது தேச வீரர்களின் செய்கைகளைப் பற்றி ஒரு வியாசம் எழுதப் போனாலும் சரி, எடுத்துப் சொன்னாலும் சரி, தாய் பாஷையின் உற்சாகம் உருக்கம் மாண்பு முதலிய குணங்களை அமைத்து எழுதவோ பேசவோ கூடுவதில்லை. அந்தோ! என்ன விபரீதமான பரிதாப நிலை! இதன் முக்கிய காரணம் நமது போதனா முறைகளையும், கல்வி கற்பிப்பதற்கான முறைகளையும் நாமே திட்டம் செய்துக் கொள்ளக் கூடாதபடி அயல் நாட்டாருடைய இஷ்டத்திற்கும் கட்டுப் பாட்டிற்கும் இணங்கி நடக்க வேண்டியிருப்பதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது.

நமது தற்காலப் பெண் கல்விக் கோட்பாட்டின் மூன்றாவது முக்கியமான குறை என்னவென்றால் படிக்கும் பெண்களில் நூற்றில் தொண்ணூறுக்கு மேலானவர்கள் அவர்கள் படிப்பு முடிந்தவுடன் குடும்ப சம்ரக்ஷணையிலேயே ஈடுபடுகிறார்கள் என்று சொன்னேனல்லவா. இவர்கள் தங்கள் குடித்தன வேலைகளை செய்து ஒழிந்த நேரங்களை வீணே போக்காமல் யாதாவதொரு உபயோகமான கைத்தொழிலைச்செய்து பொழுதுபோக்கி அதனால் குடும்பத்துக்கும் நன்மை பயந்து வரும்படி செய்யக் கூடிய ஒரு தொழிலைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட வேண்டாமா? பின்னலூசி முதலியனகொண்டு செய்யும் மனோதற்பித்த வேலை (Fancy work) சிலபள்ளிக்கூடங்களில் கற்பித்து வந்தாலும் அது போதவே போதாது. ஏனெனில் இவ்வித வேலையினால் குடும்பத்திற்கு லாபம் சிறிதுமில்லை.

இனி மேற் கூறிய குறைகளை எவ்விதம் நிவர்த்திக்கக் கூடும் என்பதைப் பற்றி சில வார்த்தைகள் மட்டும் கூறி நிறுத்துகிறேன்.

முதலாவது சாதாரணமாக நமது பெண்களின் பெரும் பாலர் 15 வயதிற்கு மேல் பள்

சென்னை-600 005

ளிக்கூடங்களில் படிப்பதற்குக் கூடுவதில்லை. இதற்குக் காரணம் நமது மதாசாரங்களும் ஜாதிக் கட்டுப்பாடுகளுமாதலால் அவர்களை ஒரு கொடியில் நிவர்த்திக்க முடியாது. ஐந்தாம் பிராயம் துடங்கி 15 வயதிற்குள் (அதாவது 10 வருஷ காலத்தில்) ஒரு குடித்தன ஸ்திரீ தன் வேலைகளைச் சரி வர சிக்கனமாக நடத்தி வருவதற்காகவும் மனைவியின் முறையில் தனது கணவனது நலத்தை நாடி அவனது உத்தியோக முறையிலும், இதர வேலைகளி லும் அவனுக்கு இடைஞ்சலாயிராமல் உதவி புரிந்து வருவதற்காகவும், பின் இவள் தாயா ரான விடத்து தன் மக்களை முன்னே நான் சொல்லியபடி கவனித்து அபிவிருத்திக்குக் கொண்டு வருவதற்காகவுமான உத்தம விதி களையும் சாஸ்திர ஞானங்களையும் செய்வகை யாகக் கற்றறியவேண்டிய சாதனங்களைக் கல் விக்கோட்பாட்டில் ஒன்று சேர்த்துக் கலாசாலை களில் இம்முறைகளை அநுஷ்டித்துக் கற்பிக்க வேண்டும். தாய் பாஷையே பிரதானமாக வைக்கப்படவேண்டும், ஆங்கிலம் முதலிய இதர பாஷைகள் படிக்க விரும்புவோருக்கு அவை களை இரண்டாவதுபாஷையாகக் கற்பிக்க வசதி களும் இருக்கவேணும். சுகாதாரம், சரீர மர்ம சாஸ்திரம், குடித்தன சிக்கனம், சிசுசம்ர க்ஷணை முதற் சிகிச்சை இவைகள் முக்கிய மான அம்சங்களாகக் கருதப்படுவதோடு சாதா ரண தையல் வேலை, சங்கீதமும் கற்பிக்கப்பட வேண்டும். இதல்லாமல் முக்கியமாக எளிதில் எல்லாரும் கற்றுக்கொள்ளக் கூடியதும், எக் காலத்திலும் மிகுந்த உபயோகப்படக்கூடிய தும், தேவையானவர்கள் அதையே ஒரு ஜீவனோ பாயமாகக் கைப்பிடித்துப் பலனடையக் கூடி யதுமான ஒரு சுலபமான கைத் தொழிலைக் கட்டாயமான படிப்பின் பிரதம அம்சமாக நிர்மாணிக்கவேண்டும். நான் எதைப் பற்றி மனதில் எண்ணி யிருக்கிறேன் என்பதை ஏறக்குறைய நீங்கள் எல்லாரும் அறிந்திருப் பீர்கள்.

மஹாத்மாஜீ 'நமது நாட்டு ஜீவ ராசிகள் உஜ்ஜீவிப்பதற்கே போதும் "சர்க்கா" என்று சொல்லப்படும் ராட்டினத்தைத் தமது பிரு தாகக்கொண்டு எல்லோரும் எளிதில் அநுஷ் டிப்பதற்கேற்ற கைத்தொழிலாக வழி காட்டி வருகிறார். நாம் அதை அநுஷ்டித்தல் மிக்க சுலபம். அகௌரவம் ஒன்றுமில்லை.' ஏழை பணக்காரர் அனைவரும் நூற்கலாம். பால்ய ரும் விருத்தாப்பியரும் தங்கள் சக்திக்கேற்ற வாறு சுற்றிப் பயன் பெறலாம். தேகத்திற் குச் சிரமம் என்பதே இல்லாத தொழில்.

பிறர் நிர்ப்பந்தம் ஒன்றும் இல்லாமல் நாமே தோன்றியபொழுது உட்கார்ந்து மன வியா கூலத்தைக் கூட போக்கிக் கொள்ளுமாறு செய்யக்கூடிய வேலை. இவ்வேலையைச் செய்வதி னால் குடித்தன வருமானத்தையும் சிறிது அதி கரித்துக் கொள்ளலாம். நமக்குத் தேவையான ஆடைகளுக்கு வேண்டிய நூலை நாமே நூற்று அதிலிருந்து செய்யப்பட்ட ஆடைகளைக் கட்டி க்கொள்ளுவதினாலே மட்டும் மனதிற்கு என்ன பிரும்மானந்தம் உண்டாகிறது என்பதை ராட்டினம் சுற்றுபவர்கள் முகத்தில் நிமிஷத் திற்கு நிமிஷம் காணலாம். குடித்தன ஸ்திரீ களுக்கு ராட்டினத்தில் நூற்பதினால் உண் டாகும் சகலவித நன்மைகளும் நாளடைவில் விருத்தி யடைந்து நம் நாடு மேம் பாட்டடை வதற்கேற்ற சௌகரியங்களைப் பயக்கும் என் பது எனது திண்மையான நம்பிக்கை.

அகிலாண்டம்மாள் மடி கொண்டாட்டம், ஆதி சேஷய்யர் படுந்திண்டாட்டம்.

(ஒரு சிறு கதை)

(ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள்)

எங்கள் ஊரில் ஆதிசேஷய்யர் என்று ஒரு பிராமணர் இருந்தார். அவரது மனைவியின் பெயர் அகிலாண்டம்மாள். அவர்களுக்கு மூன்று பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு. ஆதிசேஷய்யர் ஒரு உத்தியோகத்தில் இருப் பவர். அவருக்கு நிலம், வீடு, முதலியவைகள் சொந்தக் கிராமத்திலிருந்தாலும், உத்தியோ கத்தில் வெளிப் புறப்பட்டவர்களுக்கு வாடகை வீடுதான் வேண்டிவருமாதலால், அவர் பெல்லூர் என்னும் ஊரில் உத்தியோகம் செய்து வருகையில், ஒரு வீடு வாடகைக்கு வாங்கிக்கொண்டு தன் குழந்தைகள் பெண் ஜாதியுடன் வசிக்கலானார். அங்கு வருஷத்திற் குப் பன்னிரண்டு வீடுகள், அதாவது, மாத மொரு வீடு மாற்றுவதே அவருக்குத் தொழி லாக விருந்தது. இதற்கெல்லாம் அவரது மனை வியின் அதிக மடிதான் காரணம். தவிர அந்த அம்மாள் தானிருக்கும் வீட்டில்யாராவது ஒரு வர் நடந்தால் அந்த இடத்திற்கும், உட்கார்ந் தால் அந்த இடத்திற்கும் ஜலத்தைக் கொட்டி,

அந்த ஈரத்தில் நடமாடி, அதனால் காயலா பிடித்துக் கஷ்டப்பட்டுத் தன் கணவனுக்குப் பணச்செலவு வைத்துக்கொண்டிருப்பாள். இது ஒட்டுக் குடியிருப்பவர்களுக்குங் கஷ்டமாதலால் அவர்களாவது வீட்டுக்கு யஜமானனாவது இவள் தண்ணீர் கொட்டி வீட்டை அசங்கியப் படுத்துவதையும், குடியிருக்கும் வேறு ஜனங்களுக்குங் கூட வியாதி பிடித்துக் கஷ்டப்பட இடமாகிறதென்றும் கண்டு, இவர்களது வீட்டைக் காலி செய்யச் சொல்லுவார்கள்; இவர்களுக்கும் அகிலாண்டம்மாளுக்கும் சண்டை வந்து விடும். இதைப்போன்ற பல தொந்தரவுகளினால், அந்த ஊரில் ஆதிசேஷய்யருக்கு வாடகைக்கு வீடு கொடுப்பார் ஒருவருமில்லாமல் கஷ்டமாய் விட்டது.

இந்த சமயத்தில், அதே தெருவிலிருந்த நாராயணய்யர் என்பவர் தன் வீட்டை விற்று விடுகிறார் என்ற பிரஸ்தாபம் ஆதிசேஷய்யர் காதிற்கு எட்டியது. உடனே, அவர் நாராயணய்யரைப் பார்ப்பதற்காக அவரது வீடு சென்றார். நாராயணய்யர், ஆதிசேஷய்யரைப் பார்த்ததும், "வாருங்கள் உட்காருங்கள். ஏதோ காரியார்த்தமாய் வந்திருப்பதுபோலிருக்கிறதே!" என்று விசாரித்தார். உடனே ஆதிசேஷய்யர் "நீங்கள் இந்த வீட்டை விற்று விடுவதாய் சமாசாரம் தெரிந்தது. நிஜந்தானா?" என்றார்.

நாராயணய்யர்:—"ஆமாம், நிஜந்தான். நான் இதை விற்றுவிட்டு வேறு பங்களா வாங்க உத்தேசித்திருக்கிறேன்."

ஆதிசேஷய்யர்:—"ஆனால் இவ்வீட்டை நான் வாங்கிக் கொள்ளுகிறேன். என்ன விலையாகும்? யாராவது கேட்டிருக்கிறார்களா?"

நாராயணய்யர்:—"யாரோ இரண்டுபெயர் கேட்கிறார்கள். இன்னும் இன்னாருக்குக் கொடுப்பதென்றும் இன்ன விலைக்குக் கொடுப்பதென்றும் தீர்மானிக்கவில்லை. நீங்கள் ஏன், எதற்காக விசாரிக்கின்றீர்கள்? உங்களுக்கென்ன?

ஆதிசேஷய்யர்:—"நீங்கள் விற்பதானால் தயவு செய்து எனக்குக் கொடுத்தால் ரொம்ப உபகாரமாயிருக்கும்."

நாராயணய்யர்:—"உங்களுக்கு இந்த ஊரில் எதற்காக வீடு? சொந்த கிராமத்தில்தான் இருக்கிறதே! உம்மை இங்குவிட்டு மாற்றி விட்டால் அப்போது வீட்டை என்ன செய்வீர்?"

ஆதிசேஷய்யர்:—"எனக்கு உத்தியோகம் இப்பொழுது இங்கிருப்பதால், இங்கு ஒரு வீடு அவசியமாயிருக்கிறது. நான் குடியிருக்க வீடு கிடையாமல் தவிக்கிறேன். என் பெண்ஜாதியின் மடியினால் ஒட்டுக் குடித்தனம் சரிப்படவில்லை. தனிக் குடித்தனமானாலும் வீட்டுக்காரர்கள் என் பெண்ஜாதி தண்ணீர் கொட்டுவதைப் பார்த்து 'இந்த மாதிரி வீட்டை எப்போதும் ஈரமாக்கினால், வீடு மூன்று நாளில் கெட்டுப்போகும்; நீங்கள் வீட்டைக் காலிசெய்து விடுங்கள்' என்று தொந்தரவு செய்கின்றார்கள். நான் இந்த ஊருக்கு வந்து ஒரு வருஷமாயிற்று. பன்னிரண்டு வீடு மாற்றியாயிற்று. இப்போதும் வீடு வேண்டும். கொடுப்பாரில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் நீங்கள் வீடு விற்கிறீர்கள் என்று தெரிந்ததால் வாங்கலாமென்ற யோசனையுடன் இங்கு வந்தேன். தயதுசெய்து வேறு யாருக்கும் கொடாமல் எனக்கே கொடுங்கள். நாலு பேர் மதிக்கிற கிரயம் நான் கொடுத்து விடுகிறேன். நீங்கள் எனக்கு இந்த உபகாரம் செய்தால் ஆதிசேஷனை ஸாக்ஷாத் நாராயணர் காப்பாற்றினமாதிரி என்னை நீர் காப்பாற்றினவராவீர். நம்ம பெயர்களும், ஆதிசேஷய்யர் என்றும் நாராயணய்யர் என்றும் ஒத்திருக்கின்றது" என்றார்.

இதைக் கேட்டவுடன் நாராயணய்யர் "ஆதிசேஷனை ஸாக்ஷாத் நாராயணர் எதற்காக எப்பொழுது காப்பாற்றினார்? பகவத் விஷயமாய்ப் பேசுகின்றீரே, அதைக் கேட்கலாம், எனக்குச் சொல்ல வேண்டும்" என்றார்.

ஆதிசேஷய்யர்:—"இது ஒன்றும் அற்புதமில்லையே. சிறு பிள்ளைகள்கூட ராமாயணம் பாகவதம் படித்துப் பார்த்துச் சொல்லுகின்றார்களே, உங்களுக்குத் தெரியாதா"? என்றார்.

அதற்கு நாராயணய்யர், "ஆமாம், நிஜந்தான். நானும் படித்திருப்பேன். ஆனால் இப்பொழுது ஞாபகமில்லை. அதை நீர் சொல்லும் பார்க்கலாம்" என்றார்.

ஆதிசேஷய்யர் சொல்லுகின்றார்:—

"ஒரு சமயத்தில், காரியார்த்தமாய் வெளியே போயிருந்த ஆதிசேஷனை, பக்ஷ பாராட்டும் கருடன் என்னும் பட்சி ராஜன் பார்த்து விட்டு இவன் நமக்குப் பகையானவனாதலால் இவனை விடாமல் கொன்று தின்றுவிடவேண்டுமென்று ஓடிவருவதைக் கண்ட ஆதிசேஷன் பயந்து, தவித்து, ஸாக்ஷாத் நாராயணரிடம் ஓடி என்னைக் காப்பாற்றும்" என்று சொல்லுவதைக்கேட்ட நாராயணர் அது யார் என்று பார்க்கும்பொழுது தனக்குச் சயனமாயிருக்கும் ஆதிசேஷன் என்று கண்டு, திடுக்கிட்டு, உடனே அந்த ஆதிசேஷனை எடுத்துத் தன் மடியில் மறைத்து வைத்துக் கொண்டு சமாசாரம் என்னவென்று கேட்டார். அப்பொழுது ஆதிசேஷன் சொல்லுகிறான்:—'நான் ஒரு காரியார்த்தமாய் வெளியில் போயிருந்த விடத்தில், எங்கள் குலத்திறகே வைரியான கருடன் என்ற பட்சிராஜன் என்னைப் பார்த்துவிட்டார். அவர் என்னைக் கொல்வதற்காக ஓடி வந்து கொண்டிருப்பதைக் கண்ட நான் தங்களிடம் வந்தேன்' என்றார். இதைக் கேட்ட ஸாக்ஷாத் நாராயணர் சிரித்துக் கொண்டு இருக்கும் பொழுது, கருடன் வந்தான். ஆதிசேஷனை அகங்காரத்துடன் தேடிவந்த கருடன், அவன் எம்பெருமானது மடியிலிருப்பதைப் பார்த்துக் கோபங் கொண்டு, "என்ன ஸ்வாமீ, நான் உம்மை நீர் வேண்டிய இடங்களுக்கெல்லாம் தூக்கிச் செல்பவனாகவிருந்தும், எனக்கு இந்த உபகாரமா நீர் செய்வது? என் வாயில் மண்ணைப்போட்டு விட்டீரே! நான் எதைத் தின்று ஜீவிக்கட்டும்? அந்த ஆதிசேஷனைக் கீழே விட்டு விட்டுப் பேசும்" என்றான். அதைக் கேட்ட எம்பெருமான் சிரித்துக் கொண்டு "ஏ, பட்சிராஜனே, நீ எனக்கு வாகனங்களில் எப்படி சிலாக்கியனோ, அப்படியே அந்த ஆதிசேஷனும் எனக்கு சயனத்திற்கு சிலாக்கியனாகவிருக்கின்றான். இப்படி நீங்கள் இருவரும் எனக்கு அவசியமாதலால், நீங்கள் ஒற்றுமையாயிருப்பதை விட்டு, வைரம் கொண்டாடலாமா? எனக்காக நீ ஆதிசேஷனைக் காப்பாற்று" என்றார். அந்தப் பேச்சைச் சிறிதும் கவனிக்காமல் கருடன் மறுபடியும் "நீர் அவனைக் கீழே விட்டுவிட்டு வேறு பேச்சுப் பேசும். எனக்கு ஆகாரம் வேண்டுமே. உலகிற்கெல்லாம் படியளந்து காப்பாற்றுபவர் என்ற உமது பெயரை நீர் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? எனக்கு இதே ஆகாரமாயிருக்க அதை நீர் பறித்துக்கொண்டால் நான் எதைத் தின்று பிழைப்பது? எனக்கு வயிறுக்கு ஆகாரமில்லாமல் உம்மைத் தூக்கிக்கொண்டு செல்ல எப்படி முடியும்? இப்போது அதிகதூரம் சிரமபபட்டுத தூககிபபோகும என்னை வஞ்சித்து, ஒனறுக்கும பிரயோசன மிலலாத அந்த ஆதிசேஷனைக் காப்பாற்றுகிறீரே! இதா

உமது தர்மம்? ஆதிசேஷன் உமக்கு சிம்மாசனமும் குடையும், சயனமுமே தவிர, அவனால், என்னைப்போல் உம்மை எடுத்துக்கொண்டு நீர் நினைக்குமிடத்திற்குக் கொண்டுபோக முடியுமா? அப்படியிருக்கும் என்னை மோசஞ் செய்தீரே. விடும் அவனைக் கீழே!" என்றான். உடனே ஸ்வாமி "கருடன் அதிகப் பசியுடனும் கோபத்துடனும் பேசுகிறான், அவனை நாம் சமாதானம் செய்யவேண்டும்" என்று எண்ணி, "ஏ, கருடா, நீ கோபிக்கக் கூடாது. நான் உனக்கு ஆகாரமில்லாமற் செய்ய மாட்டேன், ஆனால் ஒரு பேச்சுச் சொல்லுகிறேன், அதை நீ அங்கீகரிப்பாயானால், ஆதிசேஷனை விட்டு விடுவேன்" என்றார். இதைக்கேட்ட கருடன் சந்தோஷத்துடன் "என்ன சொல்லுகிறீர்" என்று கேட்டான்.

உடனே பகவான் "நான் உன்னிடம் ஒரு பதார்த்தத்தைக் கொடுக்கிறேன். அதை நீ காப்பாற்றி வைத்திருந்து, நான் கேட்ட பொழுது கொடுக்கவேண்டும். இது உனக்கு இஷ்டமானால் நான் ஆதிசேஷனை விட்டு விடுவேன்" என்றார். இதைக் கேட்ட கருடன் சந்தோஷித்து "ஸ்வாமி, நீர் கொடுக்கும் பதார்த்தத்தைத் தூசிபடியாமல் வைத்திருந்து தாங்கள் கேட்கும்போது கொடுப்பேன்" என்று சொன்னவுடன் நாராயணர் தன் மடியில் மறைத்து வைத்திருந்த ஆதிசேஷனைக் கருடனிடம் கொடுத்து, "இவனை நீ தூசிபடியாமல் காப்பாற்றி, நான் கேட்கும்பொழுது என்னிடம் கொடுக்க வேண்டும்" எனறு கருடனிடம் ஒப்புவித்தார். அந்த ஆதிசேஷனைக் கையில் வாங்கிக் கொண்டு, கருடன் "அய்யா, ஸ்வாமீ, என்னை இம்மாதிரி மோசஞ் செய்தீரே. நீர் காப்பாற்றும்படி சொல்லிக் கொடுப்பது இன்னதென்று தெரியாமல் நானும் ஒப்புக்கொண்டேனே; எனக்கு இப்போது ஆகாரத்திற்கு வழி சொல்லும்!" என்று கேட்க, நாராயணர், "நான் உனக்கு ஆகாரமில்லாமற் செய்யவில்லை. எல்லா ஜீவஜந்துக்களையும் காப்பாற்றுபவன் நானாயிருக்க, அந்த ஜீவரக்ஷணை உனக்கு இல்லாமற் போகுமா? ஆதலால் நான் ஆதிசேஷனைக் காப்பாற்றும்படி சொன்னேனே தவிர, அவன் குலத்தவர் எல்லோரையும் காப்பாற்றும்படி சொல்லவில்லை. அவைகளெல்லாம் உனக்கு ஆகாரமாயிருக்கக் கடவது. நீ அஞ்சவே வேண்டாம். ஆதிசேஷன் ஒருவனை மாத்திரம் நீ காப்பாற்றி நான் கேட்கும்பொழுது என்னிடம் கொடுக்கவேண்டியது. நீ ஆதிசேஷனை எந்த சமயத்திலும், எந்த இடங்களிலும், எவ்வித ஆபத்துமில்லாமல் காப்பாற்றிக் கொண்டு வைரமில்லாமல் இருக்கவேண்டியது" என்றார். இவ்வசனங்களைக் கேட்ட கருடன் சந்தோஷித்து, "அப்படியே ஆகட்டும்" என்று வாக்குத் தத்தம்செய்துவிட்டு அவரவர்கள் தங்கள் தங்கள் இடத்துக்குச் சென்று வாழ்ந்து வந்தனர். ஆதலால் நாராயணய்யரே, நீரே ஸாக்ஷாத் நாராயணர், நான் ஆதிசேஷனைப்போல் ஆபத்தில் உயிரைக் காப்பாற்ற இடமில்லாமல் தவிக்கிறேன். கருடனைப் போலுள்ள ஜனங்கள் எனக்கு வீடு கொடுக்க மாட்டேனென்று தொந்தரவு செய்கின்றார்கள். ஆதலால், இப்போது என்னைக் காப்பாற்றும் சக்தி உம்மிடந்தான் இருக்கிறது. தம்மையண்டிய ஆதிசேஷனைப் பகவான் காப்பாற்றியது போல், என்னையும் நீர் இப்போது காப்பாற்ற வேண்டுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார்.

இதைக் கேட்ட நாராயணய்யர் ரொம்ப சந்தோஷித்து "ஆதிசேஷய்யரே, நீர் சொன்ன இக்கதைக்காக வீட்டை உமக்கு அவசியம் கொடுப்பேன். நீர் அஞ்சவேண்டாம். வேறு

யாருக்கும் கொடுப்பதில்லை. நாலு பெயர் மதிக்கும் கிரயம் கொடுத்துவிட்டு வீட்டை நாளைக்கே வாங்கிக்கொள்ளும். பகை பொருந்திய கருடனிடமே ஆதிசேஷனை பகவான் கொடுத்துக் காப்பாற்றியதுபோல், நானும் உங்களுக்கு இந்த வீட்டைக் கொடுத்து இப்போது உமக்குப் பகையாயிருக்கும் ஜனங்களெதிரே நீர் இவ்வீதியில் வாழும்படி செய்கிறேன்; ஆதிசேஷன் பயம் நீங்கி வாழ்ந்ததைப் போல் நீரும் பயமற்று வாழலாம்" என்றார்.

உடனே ஆதிசேஷய்யர்:—"இதற்குக் கிரயம் எவ்வளவு என்பதைச் சொல்லி விடும். நாளைக்கே பணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட நாராயணய்யர்:—"நான் அறுநூறுக்கானால் விற்கலாமென்றிருக்கிறேன். ஜனங்கள் ஐநூறுவரை கேட்டிருக்கிறார்கள்; போகிறது! நீர் சொன்ன கதைக்காக உமக்கு ஐம்பது ரூபாய் விட்டுக் கொடுக்கிறேன். நீர் ஐநூற்றைம்பது கொடுத்து விட்டால் நாளைக்கே நீர் வீட்டுக்கு வந்து விடலாம். நாங்கள் இந்த வீட்டை விற்பதுதான் தடை; பங்களாவிற்குப் போய் விடுகிறோம்" என்றார்.

இதைக் கேட்ட ஆதிசேஷய்யர் சந்தோஷித்து, "நான்போய் வருகிறேன்" என்று எழுந்து புறப்பட்டு விட்டார்.

ஆதிசேஷய்யர் தன் வீடுவந்து சேர்ந்த பொழுதுதான் அவரது பத்தினி அகிலாண்டம்மாள் சமயல்செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது ராத்திரி மணி பன்னிரண்டு.

அதைக் கண்ட ஆதிசேஷய்யர் "ஏன் இப்பொழுதுதான் சமயல் செய்கிறாய்? இராத்திரி மணி பன்னிரண்டாயிற்றே. இனிமேல் எப்போது சாப்பிடுகிறது? நானோ வீடு விசாரித்து விட்டு இவ்வளவு பொழுது கழித்து வந்திருக்கிறேன். இன்னும் சமயல் ஆகவில்லையென்றால் எப்படி வியாதியில்லாமலிருக்கும்? நம்ம வீட்டில் வேளை கெட்ட வேளையில் சோறு தின்பது, எப்போது பார்த்தாலும் தண்ணீரைக் கொட்டி வீட்டை நாசஞ்செய்வது, இதனால் தான் சதா வியாதி பிடிக்கின்றது. நம்மைப் போல் இவ்வூரில் எவ்வளவோ ஜனங்கள் இருக்கவில்லையா? அவர்கள் வீட்டில் இம்மாதிரி வியாதி வருகின்றதா? இதெல்லாம் என் அதிர்ஷ்டம்! குழந்தைகளுக்கு இன்னும் சமயல் செய்து சாதம் போடவில்லை! எல்லாம் தூங்கி வழிகின்றதுகள். அவைகளுக்குத்தான் என்ன சுகம்? நாம் எல்லாரையும்போல் செலவுசெய்தும், நமக்குத்தான் என்ன சுகம்? நீ கொஞ்சம் மட்டுமிதமான மடியுடன் இருந்தால் நமக்கு இம்மாதிரி வீட்டுக்கும் தொந்தரவு ஏற்படாது! இவ்வளவுபோது வீட்டுக்காகப்போய் அலைந்து ஒன்றுங்கிடைக்காமல், ஒரு வீடு விலைக்கு வந்திருக்கின்றது. அதை வாங்கி விடலாமா என்று யோசித்து வந்தேன்" என்றார்.

இதைக் கேட்ட அகிலாண்டம்மாள், "அவ்வீடு எங்கிருக்கின்றது? கிணறு இருக்கிறதா? என்ன கிரயம்?" என்று கேட்டாள்.

அதற்கு ஆதிசேஷய்யர்:—"550க்குத் தீர்மானம் பண்ணியிருக்கிறேன். பணம் வேண்டும். அந்த வீட்டில் சௌக்கியமெல்லாம் உண்டு. என் ஆபீசுக்கு ரொம்ப கிட்டம். வேளைக்குச் சோறில்லாததினால் நான் ஒரு நாளாவது டயம் (Time) தப்பாமல் ஆபீஸ்போக முடிகிறதில்லை. அங்கு போனால் கொஞ்சம் சுகமாகுமோ என்று யோசிக்கிறேன். ஆனால் கையில் பணம் போதாது. என்ன செய்யலாம்?" என்றார்.

இதைக் கேட்ட அகிலாண்டம்மாள், "இதற் கென்ன பிரமாதம்? நமக்கென்ன, ஒன்றுமில்லையா? ஊருக்கு எழுதினால், நம்ம பூமியில் வரும் வருமானத்தில் கொஞ்சம் அனுப்பும்படி சொன்னால் பணம் வந்து விடுமே. ஏழைகளைப்போல் நாம் ஏன் வருத்தப்படவேண்டும்? நமக்கு வீடு கொடுக்கமாட்டேன் என்கிற இந்த ஊர் ஜனங்கள் எதிராக நாமும் வீட்டை வாங்கி விடவேண்டும். அப்புறம் நாம் என்ன மடிகொண்டாடினாலும் நம்மைக் கேட்பாரில்லை; அதற்குப் பின் நமக்குச் சரியானவர்கள் இந்த ஊரில் எங்கே யிருக்கிறார்கள்?" என்று சொன்னாள்.

உடனே ஆதிசேஷய்யர் பணத்திற்கெழுதினார். மறுநாள் பணமும் வர, நாராயணய்யரிடம்போய் பணத்தைக் கொடுத்துப் பத்திரம் எழுதி, வீட்டை வாங்கி விட்டார். உடனே நாராயணய்யரும் வீட்டைக் காலிசெய்து விட்டுப்போனார். ஆதிசேஷய்யர் இனி மேல் இவ்வூரிலிருக்கும் வரையிலும் வீட்டிற்கு அலையாமலிருக்கலாம் என்று சந்தோஷித்து நல்ல நாள் பார்த்துப் பெண்ஜாதி குழந்தைகளுடன் குடி வந்தார். அங்கு வந்த பிறகு அகிலாண்டம்மாள் மடி இன்னும் ஜாஸ்தியாய் விட்டது.

II

வீடு சொந்தமாய் விட்டதால், அகிலாண்டம்மாள் கொஞ்சமும் பயமற்று வீடு முழுவதும் தண்ணீர் கொட்டுவாள். ஆகவே, அவர்களது வீட்டில் சதா ஒருவரில்லாவிடில் பின்னொருவர் வியாதியாய்ப் படுத்திருப்பர். இந்த "முத்திப்போன" மடியினால் ஆதிசேஷய்யருக்கு முன்போல் கூட ஆபீஸுக்குப்போக முடியவில்லை; பகல் மூன்று மணிக்கும், இராத்திரி ஒரு மணிக்குந்தான் அவருக்குச் சாப்பாடு கிடைக்கும். அகிலாண்டம்மாள் சதா சுத்தம் கொண்டாடுவாள்; சப்தம் போடுவாள். மடிகொண்டாடுவதற்கும், சமயல் சாப்பாட்டுக்குமே அவளுக்குப் பொழுது போய் விடும். வேறு வேலைகள் ஒன்றுக்கும் அவளுக்குச் சாவகாசம் இல்லாமற் போக, அவள் தன் கணவனை குழந்தைகளைக் குளிப்பாட்டும் படிக்கும், வீட்டுச் செலவுக்குத் தண்ணீர் இழுத்துக் கொட்டும் படிக்கும், புடவை வேஷ்டிகளைத் தோய்த்து உலர்த்தும் படிக்கும், கடையிலிருந்து வாங்கி வந்த சாமான்களைச் சுத்தப்படுத்தி எடுத்து வைக்கும் படிக்கும் சொல்லுவாள். இதனால் ஆதிசேஷய்யர் "இவைகளெல்லாம் என்னால் முடியவில்லையே, இப்படி யெல்லாம் லாபம் பிடித்து நாம் யாருக்குச் சேர்த்து வைக்கவேண்டும்? நமக்கு ஒன்றும் இல்லாத கஷ்டமா? எவ்வளவோ ஆஸ்தியிருந்தும், மாசா மாசம் சம்பளம் வந்தும், ஏழைகளைப்போல் நாம் ஏன் கஷ்டப்படவேண்டும்? ஒரு ஆள் போட்டு விடட்டுமா?" என்றார்.

அதற்கு அந்த அம்மாள், "ஆள் போட்டால், நம்ம வீட்டில் அந்த ஆள் வந்த இடத்திற்குத் தண்ணீர் போடுவதும், சாமானைத் தொட்டால் அலம்புவதும், மறுபடி நான் ஸ்நானம் பண்ணுவதும், ஆகக் கூடி வேலை எனக்கு இன்னும் ஜாஸ்தி தானே! அப்போது சாப்பாட்டுக்கு இன்னும் பொழுதுதான் ஆகும்! இப்பொழுதே நாழியாகிறதென்று தினம் வெய்கிறதும், சண்டை பிடிப்பதுமாயிருக்கிறது! தவிர, பணத்தைக் கொடுத்து ஆள் போட்டுக் கொண்டால்தானா பெருமை!" என்றாள். ஆதிசேஷய்யருடைய கஷ்டங்கள் இவைகளுடன் நிற்கவில்லை. அவருடைய பத்தினி அவரே கடைக்குப்போய் வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கித் தூக்கிக் கொண்டும் வரவேண்டும், கூலியாள் வைக்கக்

கூடாது என்றும் நிர்ப்பந்தித்தாள். இம்மாதிரி சாமானைத் தூக்கி வரச் சக்தியில்லாமல் ஆதிசேஷய்யர் தவித்துத் தத்தளிப்பார். அவரது சினேகிதர்கள் அவரைப் பார்த்துக் கேலி செய்து சிரிப்பார்கள். "இவ்வளவு ஆஸ்தி, வீடு வாசல் இருந்தும் ஒரு கூலியாள் வைக்க மனம் வரவில்லையே. இந்த ஆஸ்தி என்னத்திற்கு? இவர் பெண்சாதிதான் என்ன பெண் ஜன்மம்? நல்ல பதிவிரதையாயிருந்தால் எவ்விதமான மடியும் அவசியமில்லையே; தங்களுடைய பதிகளைக் கஷ்டப்படுத்தாமல் சிசுரூஷை செய்து கொண்டிருப்பவர்களுக்கு ஒரு கோவிலுக்குப் போகவாவது, தெய்வத்தைத் தொழவாவது வேண்டிய அவசியமில்லையே! இது இப்படி யிருக்க, இவ்வுத்தமி தன் பதியை மேற் சொல்லியபடி கஷ்டப்படுத்திக்கொண்டு தினந்தப்பாமல் கோவிலுக்கும் போய் வருகிறாளே; இவ்வூரிலிருக்கும் ஸ்திரீகள் பிரதிசனிக்கிழமை தோறுந் தானே இவ்வூர் ஆஞ்சனேயர் கோவிலுக்குப் போவது வழக்கம். இவள் தினம் போகிறாளே! இவளுக்கு ஆஞ்சனேயரிடம் என்ன கோரிக்கையோ தெரியவில்லை! தன் பதி ஆதிசேஷய்யர் தான் சொன்ன வேலைகளை யெல்லாம் செய்ய வேண்டுமென்று தான் கோரி யிருக்கலாம்! அதனால்தான் அவர் தன் பெண்சாதியின் பேச்சைத் தட்டாமலும், எவ்வித அவமானத்தையும் பாராட்டாமலும் மூட்டை சுமப்பதும், வீட்டு வேலைகளைச் செய்வதும், புடவை தோய்ப்பதுமாய் இருக்கிறார். அவருக்கு ஒரு நாளாவது கோபம் வருவதுமில்லை. என் பெண்சாதி இவ்விதமிருந்தால் நான் அவளை 'நீ உன் பிறந்த வீட்டுக்குப்போ!" என்று அனுப்பிவிட்டுச் சுகமாயிருப்பேன். இந்தக் கஷ்டம் யார் படுவார்கள்? எதற்காகச் சம்பாதிப்பது? நாம் சுகப்படுவதற்கல்லவா? இந்த ஆதிசேஷய்யரைப் பார்த்தால் வருத்தமா யிருக்கின்றதே! இவர் இளம்பிராயத்திலேயே தாய் தந்தையர் ஒருவருமில்லாமல் சொந்த ஜனங்களிடமிருந்து கஷ்டப்பட்டவராயிற்றே! இப்போதும் பெண்சாதியால் கஷ்டமும் நேர்ந்ததே! இவருக்கு என்ன சுகம்!" என்றும் இவரது சினேகிதர்கள் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளுவார்கள். இந்த வார்த்தைகளெல்லாம் தனது காதில் விழுந்தாலும் ஆதிசேஷய்யர் வெட்கத்தினால் தன்கையிலிருந்த மூட்டைபாரத்தினாலும் நடக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டு வாயைப் பொத்திக்கொண்டு வீடு வந்து சேர்வார். வீட்டிற்கு வந்து நடந்தவைகளைத் தன் பெண்சாதியிடம் சொன்னால் அவள் சண்டை போடுவாள். "மூன்று மணிக்குக் கிடைக்கும் சோறும் மூஞ்சூராய் விடும்" என்று பயந்து சொல்லாமல் விட்டுவிடுவார். அகிலாண்டம்மாள் தன் புருஷனுக்குத் தான் செய்யும் தீங்குகள் போதாதென்று அவ்வூரில் அன்னியோன்னியமா யிருக்கிற ஸ்திரீ புருஷர்களுக்கும், மாமியார் நாட்டுப் பெண்மார்களுக்கும் சண்டை மூட்டி வைப்பாள். அவர்களது ஒற்றுமையைப் பார்த்துப் பொறுமைப்பட்டு, புருஷனிடம் பெண்சாதி பேரிலும், பெண்சாதியிடம் புருஷன் பேரிலும், மாமியாரிடம் மருமகள் பேரிலும், மருமகளிடம் மாமியார் பேரிலும், இப்படியே பந்துக்கள் ஒருவர் பேரில் ஒருவருக்கும் சாடி சொல்லிச் சண்டை மூட்டி வேடிக்கை பார்ப்பாள். இச்சண்டைச் சரவுகள் உள்ளூருடன் போகவிடாமல், அவள் தன் அயலாரின் பந்துக்கள் வெளியூரிலிருந்தால் அவர்களுக்கும் போக்கு வரவாயுள்ள ஜனங்கள் மூலமாய்ச் சொல்லி யனுப்பி, மகளைக் கண்டால் தாய்க்காகாமலும், பெண்சாதியைக்கண்டால் புருஷனுக்காகாமலும் அடித்து விடுவாள்! இவள் புத்தி நன்றாகத் தெரிந்திருக்

தும், இவளுக்கு அறிமுகமானவர்கள் மூடர்கள் போல் இவள் பேச்சைக் கேட்டுக் கடித மூலமாகவும், நேரில் கண்டபொழுது பேசிக் கொள்ளும் பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் ஒருவரோடொருவர் பல பேச்சுகள் பேசிக் கொண்டு மனஸ்தாபம் ஏற்படுத்திக் கொள்வார்கள். அகிலாண்டம்மாள் இவ்வாறு அனேகம் குடிகளைக் கெடுத்ததால், சிலர் அவளுக்கு "சண்டைக்காரி" என்றும், கன்னடம் பேசும் சில மாத்வஸ்திரீகள் "ஜகளசண்டி" என்றும் பெயரிட்டதுமன்றி, எல்லாரும் அவளிடம் வெறுப்பும் அலக்ஷியமுங்கொண்டு, அவ்வூரில் ஒருவருமே அகிலாண்டம்மாளுக்கு ஆகாமற் போய் விட்டனர்.

ஒரு நாள் ஆதிசேஷய்யர் காலையிலெழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, தன் மனைவியைப் பார்த்து "ஏண்டி, நான் இன்றைக்கு க்ஷவரம் செய்து கொள்ளலாமென்று யோசிக்கிறேன். எங்கள் ஆபீசில் துரை தனிக்கைக்கு வரும் டயம். என்று வருவாரோ தெரியவில்லை. நினைத்தால் வந்து விடுவார். இன்றைக்கில்லாவிட்டால் இன்னும் பத்து நாள் வரை நாள் நன்றாயில்லை" என்றார்.

"இன்றைக்கே செய்து கொள்ளுங்களேன்! அதுக்கு என்னைக் கேழ்கிறதென்ன?" என்றாள் அகிலாண்டம்மாள். இதைக் கேட்ட ஆதிசேஷய்யர் வீதியிற் சென்று ஒரு க்ஷவரகனைப் பார்த்துக் கூப்பிட்டுவந்து, தெருத் திண்ணையில் க்ஷவரம் செய்துகொள்ள உட்காரப் போனார். அப்பொழுதுதான் அகிலாண்டம்மாள் படுக்கை விட்டெழுந்து வீதி வாசல் தெளித்துக் கோலமிட்டுக்கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்து ஆதிசேஷய்யர், "நான் இந்தத் திண்ணையில் உட்கார்ந்து க்ஷவரம் செய்து கொள்ளலாமா?" என்று கேட்டார்.

அதற்கு அந்த அம்மாள் தன் புருஷனைப் பார்த்து "நன்னா இருக்கு! இப்பத்தான் லக்ஷணம்போலே மொழுகிக் கோலமிட்டேன்; நீங்கள் அங்கே க்ஷவரம் செய்துகொண்டால் மறுபடி அந்த இடத்தை மொழுக வேண்டாமா? யார் மொழுகுவா? நீங்கள் என்ன கலியாணப் பிள்ளையா? இல்லாவிட்டால் இன்னிக்கித் தான் உமக்கு பிரம்மோபதேசமா, கோலத்தில் உட்கார்ந்து க்ஷவரம் செய்து கொள்ளரத்துக்கு? அங்கே உட்காரக்கூடாது!" என்றாள்.

இதைக் கேட்ட ஆதிசேஷய்யர் "ஆனால் ரேழி இன்னும் மொழுகவில்லையே! அங்கே உட்காரட்டுமா?" என்றார்.

அகிலாண்டம்மாள், "உமக்குக் கொஞ்சங்கூட புத்தி யில்லைபோலிருக்கிறதே, க்ஷவரகனை விட்டுக்குள் வரச்சொல்லுவாளோ?" என்றாள்.

ஆதிசேஷய்யர் 'ஆனால் பக்கத்து வீட்டுத் திண்ணையில் உட்காரட்டுமா? அவாள்தான் ஊரில் இல்லையே!" என்றார்.

அகிலாண்டம்மாள், "நாம் இந்த ஊர் ஜனங்களிடம் படும் துன்பம் போராதா? நம்மைக் கண்டால் இந்த ஊரில் ஒருவருக்கும் ஆகிறதில்லை. "சத்தும் பனங்காடு, சூழப் பனந்தேசம், பனங் காட்டுக்குள்ளே பாதிப் பேர் தாயாதி" என்று சொல்லுவார்கள். அது நமக்குத்தான் ஒத்திருக்கின்றது. நாளைக்குப் பக்கத்து வீட்டார் வந்தால் யாராவது அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துச் சண்டை மூட்டி வைப்பார்கள். ஆதலால், அங்கே உட்காரவேண்டாம்!" என்றாள்.

ஆதிசேஷய்யர், "ஆனால், நம் வீட்டுக் காம்பவுண்டை (Compound)ச் சுற்றிக் கொண்டு கொல்லைப் பக்கம் வரட்டுமா?" என்றார்.

அகிலாண்டம்மாள் ஜவாபு ஒன்றுஞ் சொல்லாமல் உள்ளே போனதைப் பார்த்த ஆதிசேஷய்யர் க்ஷவரகனை அழைத்துக் கொண்டு காம்பவுண்டைச் சுற்றிக் கொல்லைப் பக்கம் சென்றார். அங்கு போய்த் தன் மனைவியைக் கூப்பிட்டு "நான் இங்கு க்ஷவரம் செய்து கொள்ளட்டுமா?" என்று கேட்டார். உடனே அந்தம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது.

அவள் தன் புருஷனைப் பார்த்து, "உமக்கு வயதாயிற்றே! நம்ம வீட்டு மடி தெரியாதா? நம்ம குழந்தைகள் ராஜம்மாளும், மணியும், எப்போது பார்த்தாலும் அங்கேயே போய் விளையாடுகிறார்கள். அங்கே உட்காரக் கூடாது!!" என்றாள்.

அதைக் கண்ட ஆதிசேஷய்யர், வேறு இடத்தைக் காட்டி, "இங்கு உட்காரலாமா?" என்றார்.

அதற்கு அந்த அம்மாள், "நான் பாத்திரம் முதலியவைகள் சுத்தி செய்யுமிடமாயிற்றே! அங்கே உட்காரக் கூடாது!" என்றாள்.

மறுபடியும் ஆதிசேஷய்யர் ரொம்பப் பொறுமையுடன் கிணற்றண்டை கையைக் காட்டி, "அந்த சிமட்டி (Cement) போட்டு இழைத்திருக்கிற இடத்தில் உட்காரட்டுமா? அது தான் சரி! உனக்கு ஜலம் இழுத்துக் கொட்டுவதற்கும் லகுவாயிருக்கும்" என்றார்.

அகிலாண்டாம்மாள்:—"உமக்குத் தொண்ணூறும்பத்தும், குறுக்கே இறுநூறும் வயதாயிற்றே! ஆன வயதிற்கு அடையாளம் என்ன? எப்பொழுது புத்தி வரும்? நீர் க்ஷவரம் செய்து கொண்ட இடத்தை மிதித்துக் கொண்டு வந்தல்லவா தண்ணீர் இழுக்கவேண்டும்! லகுவாய் ஜலமிழுத்துக் கொட்டலாம் ஏன்கிறீரே! நான் வருவதெப்படி? என் காலைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டா வரட்டும்?" என்றாள்.

இதை யெல்லாம் கேட்ட க்ஷவரகன், "சாமி, நீங்கள் கொடுக்கிறது இரண்டணா. நான் வந்து இரண்டு மணி நேரமாயிற்று. உம்மால் எனக்கு இன்றைய வருமானம் நஷ்டமாயிற்று. இவ்வளவு பொழுது நான் நான்கு வீதி சுற்றி முக்கால் ரூபாய் சம்பாதிருப்பேன். உமக்கு இன்னும் உட்கார இடம் ஏற்படவில்லை. அந்தம்மாள் சொல்லுவதற்குச் சரியாய் நீங்களும் ஆடுகிறீர்கள். உங்களுக்குச் சரியாய் நானும் ஆடிக்கொண்டிருந்தால் என் பிழைப்புக் கெட்டுப் போகின்றது. நான் போகிறேன். உங்களுக்கு இடம் ஏற்பட்ட பின், வேறு க்ஷவரகனை அழைத்து வந்து மகாராஜாராய்ச் செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அதற்குப் பின் ஆதிசேஷய்யர், "க்ஷவரம் செய்துகொள்ள இடமில்லையே என்று யோசியாமல் விடு வாங்கினோமே! நாம் என்ன முட்டாள்!" என்று தன்னைத் தானே நொந்து கொண்டு வெளியே சென்றார்.

அங்கு போகும் வழியில் ஒரு க்ஷவரகனைக் கண்டு கூப்பிட்டு அங்கேயே நடு வழியில் ஒரு ஓரமாய் உட்கார்ந்து க்ஷவரம் செய்து கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்து, கேட்டு (Gate)க்குப் பக்கத்தில் நின்றுகொண்டு, அதி பயத்துடன் தனது குமாரன் ஸ்ரீனிவாசனைக் கூப்பிட்டு, "ஸ்ரீனிவாஸா, வென்னீர் காய்ந்திருக்கின்றதா? கேள்!" எனக்கு நேற்று அரிசி மூட்டை சுமந்து வந்தது உடம்பெல்லாம் கடுப்பும் வலியுமாயிருக்கின்றது. நான் இன்றைய தினம் ஏரிக்குப் போகவில்லை. இங்கேயே இரண்டு சொம்பு வென்னீர் விடுகிறாளா என்று உங்க அம்மாளைக் கேள்" என்றார்.

இந்தப் பேச்சுக் காதில் விழுந்ததும் அகிலாண்டம்மாள் வெளியே வந்து "இங்கே தண்ணுவிட முடியாது! கூவாகன் தீண்டல்! ஏகமாய் யார் தண்ணீர் விடுவார்கள்? உமக்குத் தண்ணீர் விட்டால் நான் போய் முழுகி வரவேண்டும். இல்லாவிட்டால் எனக்கு யார் தண்ணீர் விடுவார்கள்? ஸ்ரீனிவாஸன் விட்டால் அவன் போய் முழுகி வரவேண்டும். கடைசியாக யாராவது ஒருவர் ஏரிக்குப்போக வேண்டியே வருகிறது. அதையெல்லாம் பார்த்தால் நீங்கள் ஒருவர் போய் ஸ்நானம்செய்து வந்துவிட்டால் ஒரு கஷ்டமுமில்லை. அதல்லவா லகுவான வேலை! சீக்கிரம்போய் ஒரு முழுக்கு முழுகிவிட்டு வந்துவிடும். அதனால் உடம்புக்கு ஒன்றும் செய்யாது. நம்ம அனுமார் கோவில் ஏரி ஜலமாயிற்றே! நீர் ஸ்நானம் செய்து வருவதற்குள் காப்பி ஆய்விடும். நல்ல சூடாய்க் காப்பி சாப்பிட்டு விட்டால் ஒன்றுஞ் செய்யாது" என்றாள்.

உடனே ஆதிசேஷய்யர் ஸ்நானத்திற்குச் சென்றார். இந்த வேடிக்கை விநோதங்களையெல்லாம் பல வீடுகளில் கூலி வேலைசெய்து பிழைக்கும் ஒரு சூத்திர ஸ்திரீ ஒரு மாத்தின் மறைவில் நின்றுகொண்டு பார்த்திருந்தாள். அப்போது அவள் தான் வேலை செய்யும் வீடுகளுக்குப் போகும் சமயமாயிருந்தது. அவள் ஆதிசேஷய்யர் வீட்டு நடவடிக்கைகளைப் பார்த்துப் பெரு மூச்சு விட்டு "இவள் என்ன பெண் ஜன்மமா, அல்லது பிசாசு ஜன்மமா தெரியவில்லையே! தன் கணவனுக்கு இவ்வாறு சொல்வதும் பிராமண தர்மமா? நாமும் எவ்வளவோ பிராமணர் வீட்டில் வேலை செய்யப்போய்ப் பார்த்திருக்கிறோம். இப்படி ஒருவரையாவது கணவில்லை. இன்று நாம் வேலை செய்யும் வீடுகளில் உள்ள அம்மாமார்களிடம் கேட்டுப் பார்க்கவேண்டும்" என்று யோசித்துக்கொண்டு "பொழுதுபோய் விட்டதே! நாம் இங்கு நின்று விட்டோமே. அவர்கள் திட்டுவார்களே" என்று பாபரப்பாய் ஓடி, வேலை செய்யும் வீடுகளுக்குச் சென்று, தன் வேலைகளைச் செய்யத் தொடங்கினாள்.

முதல் வீட்டு யஜமானி, வெளியே வந்து வேலைக்காரியைப் பார்த்து, "ஸுந்தரம்மா, நீ என்ன இன்றைக்கி இவ்வளவு பொழுது போய் வந்தாய்?" என்று கேழ்க, வேலைக்காரி, "அம்மா, நான் வரும் வழியில் அந்தக் கோடி வீட்டம்மாள் புருஷனை ஆட்டி வைக்கிறதை வேடிக்கை பார்த்து நின்று விட்டேன். அந்த அம்மாள் புருஷனைப் படுத்தி வைப்பதும் ஒரு மடியாகுமா என்று சந்தேகித்து, என் மனம் ஆறாமல், இவள் பெண் ஜன்மமல்ல பேய் ஜன்மமென்றே தீர்மானித்து உங்களிடம் சொல்லவேண்டுமென்று வந்தேன். அதற்குள் நீங்களே கேட்டு விட்டீர்கள்" என்றாள்.

இதைக் கேட்ட ரங்கனாயகி அம்மாள், "இதென்னடி ஆச்சரியம்! நாங்களெல்லாம் பார்த்துச் சலித்து விட்டிருக்கிறோம்" என்றாள்.

III

இது இப்படி நிற்க,

ஆதிசேஷய்யர் ஸ்நானம் செய்து வீடு வந்து காப்பி சாப்பிட்டார். மணி பன்னிரண்டு அடித்து விட்டது. உடனே ஆபீசுக்குக் காலமாகி விட்டதென்று புறப்பட்டுப் போய் விட்டார்.

சாயங்காலம் ஆபீஸ் வேலை முடிந்து வீட்டுக்குப் புறப்படும் சமயத்தில் சில சிநேகிதர்கள் "என்ன ஆதிசேஷய்யரே, கொஞ்சம் வாக்கிங்கு (Walking) போகலாமா" என்று கூப்பிட்டார்கள்.

இவர் காலையிலிருந்து சாப்பிடவில்லை. பசி வயிற்றைப் பிச்சுத் தின்னுகின்றது. இவர்கள் ஒரு பக்கம் கூப்பிடுகின்றார்கள். போகாவிட்டால் மனஸ்தாபம் நேரிடுமோ என்று யோசித்துக்கொண்டு வாக்கிங்கு (Walking) போனார்.

போகும்போது வழியில் ஒரு சிநேகிதன் கண்டு கூப்பிட அவர் வீட்டில் நுழைந்தார். அந்த சிநேகிதன் "உட்காருங்கள் ஸார்" என்றார்.

அதற்கு ஆதிசேஷய்யர், "இங்கு உட்காரலாமோ, நான் ஆபீஸ் உடுப்புடன் இருக்கின்றேனே" என்றார்.

அதற்கு அந்த சிநேகிதன் "எங்கள் வீட்டில் அதெல்லாம் கிடையாது. அதெல்லாம் உங்கள் வீட்டில்தான்!" என்றார்.

இதைக்கேட்ட ஆதிசேஷய்யர், வெகு மனவருத்தத்துடன் "நம்ம வீட்டில் நடப்பது இவர்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வெட்கத்துடனும், பசி உபாதையுடனும் கொஞ்ச நேரஞ் சென்று தனது சிநேகிதனிடம் விடைபெற்றுத் தன் வீடு வந்து சேர்ந்தார். வரும்பொழுதே ஜுரமும் தலைநோவுமிருந்ததால் உடனே படுத்துக்கொண்டார்.

இதைக் கண்ட அகிலாண்டம்மாள் "ஏன் படுத்துக்கொண்டீர்கள்?" என்றாள்.

ஆதிசேஷய்யர் "உன் மடியினால் வரும் ஆபத்துத்தான்!" என்றார்.

அதற்கு அந்த அம்மாள், "என் மடியினால் உமக்கென்ன!"

ஆதிசேஷய்யர், "உன் மடியினால்தான் நான் உடம்பு வலியுடன் போய் ஏரியில் முழுகி வந்தேன். வேளையில் சோறாவது போடுகிறாயா, அதுவுமில்லை. இன்றைக்கெல்லாம் நான் பட்டினி. எல்லாரும் பத்து மணிக்கே சாப்பிட்டு ஆபீஸுக்கு வருகிறார்கள். எனக்குப் பன்னிரெண்டு மணிக்குக் கூடச் சோறு கிடைக்கிறதில்லை. இதெல்லாந்தான் எனக்கு ஜுரம் வந்துவிட்டது. நீ புருஷனைக் கொல்லும் பேயாயிருக்கிறாய்! நீ மடி, மடி என்று குதிக்கிறாயே தவிர, வீட்டில் எந்த வேலையை நன்றாய்ச் செய்கிறாய்? குழந்தைகளுக்கு ஒரு நாளாவது எல்லார் வீட்டுப் பெண்களையும் போல் தலை வாருகிறாயா! சொக்காய் போடுகிறாயா? வாங்கிவந்த சாமானைப் பத்திரமாய் மூடி, எலி தின்னாமல் வைக்கிறாயா, வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுகிறாயா, மூலை மூலையாய்க் குப்பையும் மண்ணுங் கிடக்கும்பொழுது, எங்கு பார்த்தாலும் இரவும் பகலும் மடி, மடி என்று தண்ணீரைக்கொட்டினால்தானா மடி? நமது பத்திரிகைகளில் "சுத்தமான அழுக்கில்லாத துணிகளுடனும் சுத்தமாய் வீட்டையும் குழந்தைகளையும் வைத்துக்கொண்டு பதிக்குக் கஷ்டமில்லாமல் சிசுருஷை செய்துகொண்டிருப்பதே மடி" என்று உன்னைப்போலுள்ள சகோதரிகள் எவ்வளவோ பெயர்கள் எழுதியிருக்கின்றார்களே!" என்றார்.

இதைக்கேட்ட அகிலாண்டம்மாள் "அவர்களெல்லாம் படித்தவர்கள். நான் ஒன்றும் படியாத மூடமாயிற்றே. உங்களுக்கு என்னைப் போல் இருப்பவர்களைக் கண்டால் ஆகுமோ? இந்தக் காலத்துப் பொம்மனாட்டிகளைப்போலே கோணல் வகுடு எடுத்துக்கொண்டும், பம்பாய அப்பாடை கட்டிக்கொண்டும், காலுக்கு பூட்ஸ் போட்டுக்கொண்டு முழங்கை வரைக்கும் ஜாக்கெட் போட்டுக்கொண்டு ஒரு கையில் குடையையும் இன்னுமொரு கையில் புருஷனையும் பிடித்துக்கொண்டு வாக்கிங்கு (Walking) போகிறார்களே, அந்தப் பொம்மனாட்டிகளைக் கண்டால்தான் பிடிக்கும்!" என்று சொல்லி

இருவரும் சண்டையிட்டு முடிந்தபின், அகிலாண்டம்மாள் தன் பிள்ளை ஸ்ரீநிவாஸனைக் கூப்பிட்டு "ஸ்ரீநிவாஸா, நீ போய் டாக்டர் பத்மனாப ராவை அழைத்துக்கொண்டு வா. என்னால் வந்த வியாதிக்கு நான்தானே அவஸ்தைப்படவேண்டும்! பத்மனாபராவ் என்ன வேளையில் டாக்டர் பரீட்சையில் தேறி வேலைக்கு வந்தாரோ! அவர் நம்ம வீட்டிற்கே டாக்டராய்விட்டார்! அவரை நம்ம வீட்டோடே வைத்துக்கொள்ள வேண்டியதுதான் போலிருக்கின்றது. இல்லாவிட்டால் இம்மாதிரி வீட்டில் ஒருவரில்லாவிட்டால் ஒருவருக்கு வியாதி வருமா? நம்மைப்போல் எவ்வளவோ ஜனங்கள் இருக்கவில்லையா? எல்லார் வீட்டிலும் வியாதிவந்தால், டாக்டருக்கு ஒரு காசுகூடக் கொடாமல் வாசியாகிறது. நம்ம வீட்டில் பத்மனாபராவுக்குப் பணத்தை வைத்தால்தான் வாசி ஆகும். அது அவர் செய்த புண்ணியம், இது நான் செய்த புண்ணியம்!" என்றாள்.

இதைக் கேட்ட ஸ்ரீநிவாஸன் எழுந்து வெளியே போய் டாக்டர் பத்மனாப ராவை அழைத்து வந்தான்.

டாக்டர் "ஆதிசேஷய்யரே, என்ன படுத்திருக்கின்றீர்?" என்றார்.

ஆதிசேஷய்யர் "நேற்றையதினம் கடை சாமான் வாங்கி வந்தேன்; உடம்பு வலியாயிருந்தது. அதைக் கவனியாமல் இன்று க்ஷவரஞ் செய்துகொண்டு ஏரியில் ஸ்நானம் செய்தேன். வீட்டுக்கு வந்தபொழுது சமயலாகாததினால் ஆபீஸுக்கு டயம் ஆய்விட்டதென்று சாப்பிடாமல் போய்விட்டேன். சாயங்காலம் வீட்டிற்கு வருவதற்குள் ஜுரம் வந்துவிட்டது" என்றார்.

இதைக் கேட்ட டாக்டர் அவரைப் பரீட்சை செய்து பார்த்து அகிலாண்டம்மாளைக் கூப்பிட்டு "அம்மா, அவரை உடம்பு வலியுடன் ஏரிக்கு ஏன் அனுப்பினீர்கள்? நேற்று மூட்டை சுமந்ததும் இன்று க்ஷவரம் செய்துகொண்டு ஏரியில் ஸ்நானம் செய்ததும் ஆகாமல் ஜுரம் வந்திருக்கின்றதே! அவருக்கு இரண்டு செம்பு வென்னீர் விட்டால் உங்கள் மடிக்கு ஆகாமல் போயிற்றா? காலையிலிருந்து சாப்பாடுமில்லையாமே! அவருக்கு இப்போது சீதம் ஜாஸ்தியாயிருக்கின்றதே. அத்துடன் நீங்கள் வீட்டில் கொட்டும் தண்ணீரின் ஈரமும் சேர்கின்றதே! அவருக்கு உடம்பு வாசியாகும் வரையிலாவது தண்ணீர் கொட்டாமலும் மடி குந்தாமலும் சாதாரணமாய் யிருக்கக்கூடாதா? நீங்கள் கொட்டும் தண்ணீரின் ஈரத்தில் சதா திரிவதால்தான் உங்கள் வீட்டில் ஒருவரில்லாவிட்டால் ஒருவர் படுக்கிறார்கள். பாக்கி ஒருவர் வீட்டிலும் இம்மாதிரி நான் பார்க்கவில்லை. அதிலும் உங்கள் வீட்டில் யாருக்கு ஜுரம் வந்தாலும் சீதம் ஜாஸ்தியா யிருக்கின்றது. அதற்குக் காரணம் நீங்கள் தண்ணீர் கொட்டுவதுதான்" என்றார்.

இதைக் கேட்ட அகிலாண்டம்மாள் "என்ன டாக்டரே! எல்லா—ரும் ஒரேமாதிரி என்னை மடி செய்கிறேன் என்றும் தண்ணீர் கொட்டுகிறேன் என்றும் கறுக்கி விளக்கில் விடுகின்றீர்களே. மடி செய்யாமல் எப்படி முடியும்? நீங்கள் எல்லா வியாதியஸ்தர்களையும் தொட்டுப் பார்த்து விட்டும் பல ஜாதியார் வீட்டிலும் நுழைந்தும், கால் பூட்ஸு வாங்காமலும், கைகால் கழுவாமலும் வீட்டுக்குள் போகிறீர்கள். உங்கள் வீட்டு ஸ்திரீகளும் அனாசார ஸ்திரீகள். ஒன்றும் சொல்வதில்லை. நாம் பிராமண ஜன்மத்தில் பிறந்தது எதற்காக? ஆசாரம் காசு கொடுத்து வாங்கவேண்டுமோ? கிடைக்குமா? நீர் வந்தால் மருந்து கொடுத்துப் போகாமல் வீண் வம்பு என்னத்திற்கு?" என்றாள்.

இதைக் கேட்ட டாக்டர் "ஐயோ! நாம் ஏன் இம்மாதிரி பேசினோம்? நமக்கும் இது ஒரு உபகாரமாக விருக்கின்றதே! நாம் இப்போதுதான் வேலைக்கு வந்திருக்கிறோம். புது டாக்டர் என்று நம்மை ஜாஸ்தியாய் ஜனங்கள் கூப்பிடுவதுமில்லை, வேறு வீடுகளில் வியாதியுமில்லை! இவர்கள் வீட்டில் சதா வியாதி இருக்கின்றது. இவர்கள் நம்மை லட்சியம் வைத்துக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்வதனால் இவர்களால் நமக்கு நல்ல வருமானமிருக்கின்றது. இவ்வூராரைப் போல் இவர்களும் இருந்துவிட்டால் நமக்கு வருமானம் ஏது? நாம் பிழைப்பதெப்படி? நமக்கு ஜாஸ்தி வருமானம் இன்னும் வரத் தொடங்கவில்லை. இவர்களுக்கு நாம் இம்மாதிரி புத்தி சொல்லி இவர்களும் வியாதியில்லாம லிருந்துவிட்டால் நம்ம தலையில் நாமே கல்லை வைத்துக்கொண்டது போலாகுமே! என்ன பைத்தியக்காரத்தனமாய் அந்த அம்மாளுக்குப் புத்தி சொன்னோம்? அந்த அம்மாளாலல்லவா நமக்கு துட்டு வருவது? அன்னமிட்ட வீட்டிற்கு கன்னமிடலாமா? அவர்கள் செய்யும் உபகாரத்தை மறக்கலாமா? அந்தம்மாள் தண்ணீர் கொட்டாவிட்டால் சீத ஜுரம் எப்படி வரும்? வாத்தியாருக்குப் பணம் உறுதி, பிள்ளைக்கு அடியுறுதி என்பதைப்போல் அவர்களுக்கு வியாதி உறுதியாய் வந்தாலல்லவா நமக்குப் பணம் உறுதியாய்க் கிடைக்கும்? வருமானத்தை உத்தேசித்தல்லவா நாமே டாக்டர் வேலைக்குப்படித்தது! எல்லாரையும்போல் இந்த அம்மாளும் தன் குழந்தைகளையும் கணவனையும் பாதுகாத்து வந்தால் நான் படித்து பாஸ் செய்ததற்கு என்ன பிரயோசனம்? எனக்காகவே பகவான் இந்த அம்மாளை இப்படிச் சிருஷ்டித்திருக்கிறார் போலிருக்கின்றது. ஆதலால், இனிமேல் நாம் இம்மாதிரி பேசாமல் இந்த அம்மாளுக்கு சமாதானம் சொல்லி இன்னும் ஜாஸ்தி மடி செய்யச் சொன்னால்தான் நமக்கு மேலுக்கு மேல் பணம் கிடைக்கும்" என்று தனக்குள்ளே தானே யோசித்துக்கொண்டு, அகிலாண்டம்மாளைக் கூப்பிட்டு, "இப்போது மருந்து கொடுத்திருக்கிறேன். மறுபடி நாளைக்கு வருகிறேன். ஏதோ கொஞ்சம் சீதம் இருக்கிறது; அவ்வளவு தான், பயம் ஒன்றுமில்லை. இராத்திரிக் கொஞ்சம் உடம்புக்குச் சூடுவரும்படி காய்ச்சி ஒத்திக்கொண்டிருங்கள். வேறொன்றும் வேண்டாம். நான் நல்ல மருந்து கொடுக்கிறேன். நீங்கள் பயப்படவேண்டாம்" என்று சொல்லி "நான் புறப்படட்டுமா?" என்றார்.

அதற்கு அந்த அம்மாள், "டாக்டரே, நீர் நாளைக்குவாரும். அவர் எழுந்ததுமேல் உமக்குக் கணக்குப்போட்டுக் கொடுத்து விடுவார். நீர் இருக்கும்போது எனக்குக் கவலை யென்ன? வியாதி மனுஷாளுக்கு வாராமல் மரம், செடிக்கா வரும்? இதற்காகப் பயந்து மடி பண்ணாமலும், தண்ணீர் கொட்டாமலும் இருக்கமுடியுமோ? மருந்து கொடுத்தால் வாசியாகின்றது. நல்ல மருந்து கொடுத்து வாசி பண்ண நீர்தான் அகப்பட்டிருக்கின்றீரே! எனக்கென்ன பயம்? நீங்கள் இவ்வூரில் இருக்கும்வரை வியாதி வந்து விட்டதே, மருந்து வேண்டுமே என்ற கவலையே கிடையாது. நீர் தான் காக்காயின் காலில் சீட்டெழுதி அனுப்பினாலும் வந்து விடுவீர் என்ற தைரியம் உண்டு. எனக்கென்ன குறை!" என்றாள்.

இதைக் கேட்டபின் டாக்டர் புறப்பட்டுப் போய் விட்டார்.

அகிலாண்டம்மாள் சீக்கிரம் வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு, தன் கணவனுக்குக் காய்ச்சி ஒத்தலாமென்று கும்மட்டியைப்

படுக்கையின் பக்கத்தில் கொண்டுவந்து வைத்துக்கொண்டு, ஆதிசேஷய்யரைத் தொட்டுப் பார்த்தால், அவரது உடல்பெல்லாம் "அல்லித் தண்டு" போல் "ஜில்" என்றிருந்தது. உடனே அந்த அம்மாள் திடுக்கிட்டு, "ஐயோ, இதென்ன, இப்படி உடம்பு ஜில்லிட்டிருக்கின்றதே, காயலா மனிதருக்கு உடம்பு இவ்வளவு சீதமாயிருக்கலாமா? ஜன்னி வராமல் இருக்க வேண்டுமே! இன்று டாக்டர் நமக்கு நல்ல புத்தி சொன்னதைக் கவனிக்காமல், அவரிடம் கோபித்தோமே" என்று திகிலடைந்து, தன் பிள்ளை ஸ்ரீனிவாஸனைக் கூப்பிட்டு "ஸ்ரீனிவாஸா, உங்கப்பா உடம்பு ரொம்பவும் ஜில்லிட்டிருக்கின்றதே, நீயொரு பக்கமும் நான் ஒரு பக்கமுமாய்க் காய்ச்சி ஒற்றலாமா, வாராயா, (வருகிறாயா)? உன் படிப்பு நாளைக்குப் படிக்கலாம். காலையில் டாக்டர் வருவதற்குள் உடம்பு சூடு வரவேண்டுமே! இல்லாவிட்டால் அவரும் மருந்து கொடுக்க மாட்டாரோ என்னவோ? காய்ச்சி ஒத்தும்படி சொல்லிப் போயிருக்கிறார். வைத்தியர்கள் சொன்னதைச் செய்ய வேண்டாமா?" என்றாள்.

ஸ்ரீனிவாஸன், "அம்மா, இதெல்லாம் உன்னால் வருகிறது. இப்போது கவலைப்பட்டு என்ன செய்கிறது. கண்டபடி அவரையும் கஷ்டப்படுத்தி என்னையும் படிக்கவிடாமலும், வேளையில் சோறில்லாமலும் தொந்தரவு செய்கிறாய்" என்றான்.

இதைக் கேட்ட அகிலாண்டம்மாள், "ஸ்ரீனிவாஸா! நீ யொருவன்தான் இம்மாதிரி சொல்வது பாக்கியாயிருந்தது. எல்லாரையும் பார்த்து நீயும் கற்றுக்கொண்டாயா? நீ இப்பொழுதே இம்மாதிரி பேசுபவன், உனக்குக் கலியாணமாகிப் பெண்சாதியும் வந்தபின் பேசுவதற்குக் கேட்கவும் வேண்டுமா? அதெல்லாம் தான் (மடி விஷயம்) தினம் பேசுகிறோம். இந்த சமயத்திலும் வேண்டுமா? உங்கப்பாவுக்கு உடம்பு வாசியாகட்டும். அதன் பிறகு நீ படிக்கலாம். இந்த வருஷம் பரீட்சை தேறிவிட்டால் போகிறது. நமக்குப் படிக்காவிட்டால் சாப்பாட்டுக்கில்லையே என்கிற கவலையில்லாமல் ஏதோ பகவான் ஆஸ்தி வீடு வாசல் முதலியவைகளைக் கொடுத்திருக்கிறார். படிக்காவிட்டால் ஒன்றும் குறைவில்லை" என்றாள்.

இதைக் கேட்ட ஸ்ரீனிவாஸன் எழுந்து தந்தைக்குக் காய்ச்சி ஒற்றுவதற்கு உட்கார்ந்தான். தாய் ஒரு பக்கமும் மகன் ஒரு பக்கமுமாகக் காய்ச்சி ஒற்ற ஆரம்பித்தார். காய்ச்சி ஒற்றும் மூலமாகத் தந்தையின் மேல் கையை வைத்த ஸ்ரீனிவாஸன் திகிலடைந்து, "அம்மா! நீ இவ்வளவு போதாய் இங்கு உட்கார்ந்திருக்கிறாயே, நீ பார்க்கவில்லையா? அப்பா உடம்பு ஏன் இவ்வளவு ஜில்லிட்டிருக்கின்றது? இப்படி யிருக்கலாமா? அந்த டாக்டர் சொன்னபொழுது உனக்குக் கோபம் வந்ததே! அவர் நமக்கு நல்லதல்லவா சொன்னார்! யாராவது 'தண்ணீர் கொட்டுகிறாய்' என்றால் உனக்குக் கோபம் வந்து விடுகிறது. அந்தத் தண்ணீரினால் வந்த சீதமல்லவா இது? நீ செய்வது உனக்குத் தெரிகிறதில்லை" என்றான்.

இதைக் கேட்ட அகிலாண்டம்மாளுக்கு ஏற்கனவே யிருந்த கவலை அதிகரித்துப் பயமுமுண்டாய் விட்டது. அந்த அம்மாள் இப்போது கோபித்துக் கொள்ளாமல், "ஸ்ரீனிவாஸா, நன்றாய்ச் சுடச்சுடக் காய்ச்சி ஒற்று. உடம்புக்கு நல்ல சூடு வரவேண்டும். அவருக்குக் கொஞ்சமாவது பிரஞ்ஞையுமில்லையே! நாம் இவ்வளவு பொழுதாய்ப் பேசுகிறோமே! அது அவருக்குத் தெரியவில்லையே! இதுவும் என் அதிர்ஷ்டமா? இவ்வூரார் கண் முன்னே பகவான் எனக்கு ஒரு கஷ்டமும் கொடாமல்

இருக்கவேண்டுமே ஸ்வாமீ, ஏழுமலையானே! உமக்கு எழுநூறு அங்கப்பிரதக்ஷிணம் செய்கிறேன்! மங்கைத் தாயாரே (அலமேலு மங்கைத் தாயார்) உனக்குத் தங்கப்பொட்டு அடித்துக் கட்டுகிறேன். பழனியாண்டவரே! உமக்குப் பால் காவடி எடுக்கச் செய்கிறேன். ஏரிக்கரை அனுமாரே! உமக்கு இளநீர் அபிஷேகம் செய்விக்கிறேன். கடைத் தெருப் பிள்ளையாரே! உமக்குக் குழைக்கட்டை பண்ணி நைவேத்தியம் செய்கிறேன். செம்பரோட்டை அய்யப்பா! உனக்குத் தேங்காய் அனுப்புகிறேன். நீங்கள் எல்லா தெய்வங்களுமாய்ச் சேர்ந்து என்னைக் கண்ணெடுத்துப் பாதுகாக்கவேண்டும். என்னை அபக்கியாதிக்கு ஆளாக்கக் கூடாது!" என்று தெய்வங்களைப் பிரார்த்தித்துக் கொண்டும் காய்ச்சி ஒற்றிக்கொண்டுமிருக்கையில் இந்தப் பிரார்த்தனைகளை கவனித்த ஸ்ரீனிவாஸன் "அம்மா, நீ பிரார்த்தித்த தெய்வங்களை யெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம். 'செம்பரோட்டை அய்யப்பா, தேங்காய் அனுப்புகிறேன்' என்றாயே, அது என்ன? அது என்ன தெய்வம்? அந்தக் கோவில் எங்கே யிருக்கின்றது? நான் இதுவரை கேட்டது கூட இல்லையே?" என்றான்.

இதற்கு அகிலாண்டம்மாள் "அந்த செம்பரோட்டை அய்யப்பன் ஹரிஹரபுத்திரர். அதெப்படி யென்றால், பாற்கடலிலிருந்து கடைந்தெடுத்த அமிர்தத்திற்காக தேவர்களும் அசுரர்களும் சண்டைபோட்டுக் கொண்டதைப் பார்த்த மகா விஷ்ணு, மோஹினி ரூபத்தை யெடுத்து, அந்த அமிர்தத்தைத் தன் கையில் வாங்கி, தேவர்களை ஒரு பக்கமும் அசுரர்களை ஒரு பக்கமும் உட்கார வைத்து அமிர்தத்தைப் பொழிந்தார். அப்பொழுது அந்த மோஹினி ரூபத்தைக் கண்ட ஹரன் என்னும் ஈசுவரர் மோகித்து, அப்போது பிறந்த பிள்ளையாதலால் அவருக்கு ஹரிஹர புத்திரர் என்றும் அய்யப்பன் என்றும் பெயர் வழங்கிற்றாம்."

ஸ்ரீனிவாஸன்:—"அப்படி ஒரு ஸ்வாமி எந்த ஜில்லாவில் இருக்கின்றது? அவ்விடத்திற்கு எந்த ஊர்போய்ப் போகவேண்டும்? நீ பார்த்திருக்கிறாயா? அந்த தெய்வத்திற்குத் தேங்காய் அனுப்புகிறேன் என்றாயே, எப்படி அனுப்புவது?" என்றான்.

இதற்கு அகிலாண்டம்மாள், "ஸ்ரீனிவாஸா, நான் அவ்வூர் போனதுமில்லை. அந்த தெய்வத்தைப் பார்த்ததுமில்லை. இது மலையாள ஜில்லாவிலுள்ள பாலக்காட்டுக்குச் சமீபத்தில் இருக்கிறதாம். அந்தப் பாலக்காடு நல்ல ஊரென்றும் பிராம்மணர்கள் வாசம் செய்யத் தகுந்த இடமென்றும் ஜலசௌக்கியமுள்ள தென்று, அங்கு கிடையாத சாமான் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். தவிர, அவ்வூருக்குப் பக்கத்தில் ஒரு காட்டாறு இருக்கின்றதாம். வெயிற் காலத்தில், காவேரி, பவானி முதலிய நதிகளில் ஜலமில்லாமற் போனாலும் போகுமாம். அந்தக் காட்டாற்றில் ஸதா ஜலம் ஓடுமாம்; வற்றாதாம். உடம்பிற்கு ஆரோக்கியமாகவும் இருக்கின்றதாம். அந்தப் பாலக்காட்டின் வழியே செல்லும் இக்காட்டாற்றின் நடுவில் இக்கோவில் இருக்கின்றதாம். அது மலையாள தேசமாதலால், அங்கு நம்பூரி என்னும் ஜாதியைச் சேர்ந்த ஒருவன் பூஜை செய்கிறானும்; வெயிற் காலத்தில்தான் ஸ்வாமியைப் பார்க்கலாமாம். மழை காலத்தில் ஆற்றில் பிரவாகம் அதிகம் வருமாம். அதனால் அந்த ஸ்வாமி இருக்குமிடமே தெரியாமல் தண்ணீரில் மூழ்கியிருக்குமாம். என்னைப்போல் பிரார்த்தனையுள்ளவர்கள், காணிக்கை செலுத்துவதாக ஏற்றுக்கொண்ட சாமான்களை அந்த ஆற்றில் பிரவாகம் வருகையில் நடுத் தண்ணீரில் போட்டு

விட்டால், அந்த சாமான் 'நெட்ட நெடுகப்' போய் அந்த ஸ்வாமியிருக்குமிடம் நின்று விடுமாம். அக்கோவிலில் பூஜை செய்யும் நம்பூரி, வெயிற் காலத்தில் கால் நடையாகவும் மழை காலத்தில் பாசல் போட்டுக்கொண்டும் வந்து, பாசல்மேல் உட்கார்ந்த வண்ணமே பூஜை செய்வானும்" என்றாள்.

ஸ்ரீனிவாஸன், "அம்மா, அந்தப் பிரவாகத்தில் அந்தப் பூசாரிக்கு ஸ்வாமி இருக்குமிடம் எப்படித் தெரியும்? தவிர, நாம் பாலக்காட்டிலிருந்து அனுப்பும் பதார்த்தம் அவ்வளவு தூரம்போவது அதற்கப்பால் ஏன் போகாது? அதை வழியில் யாரும் எடுக்க மாட்டார்களா?" என்றான்.

இதைக் கேட்ட அகிலாண்டம்மாள், "அப்பா ஸ்ரீனிவாஸா, இக்கலி காலத்திலும் கூட தெய்வத்திற்குச் சக்தியுண்டல்லவா? ஆதலால் பிரார்த்தனைக்காரர்கள் அனுப்பும் பழத்தையாவது காயையாவது, நடு ஆற்றில் எறிந்து விடுகிறதாம். அவை யார் கைக்கும் எட்டாவாம். தவிர, பிரவாக காலமானதால், ஜனங்கள் ஆற்றில் இறங்கப் பயப்படுவார்களாம். அந்த தெய்வத்தின் சக்தியினால், அவருக்கென்று போட்ட பதார்த்தம் அவரது கோவிலைத் தாண்டிப்போகாமல், அந்த மூர்த்தியிருக்குமிடத்திலேயே தண்ணீரில் சுற்றிச் சுற்றி மிதந்து கொண்டிருக்குமாம். பிரவாகத்தில் வரக்கூடிய எவ்வளவோ மரம் செடி விஷ ஜெந்துக்கள் கோயிலுக்கப்பால்போய் விடுமாம். இந்த அய்யப்பனுக்கென்று போட்ட பதார்த்தம் மாத்திரம் அங்கேயே நின்று விடுமாம். இதைப் பூஜை செய்ய வந்த நம்பூரி கண்டு "நம்ம ஸ்வாமிக்கு யாரோ அனுப்பியிருக்கிறார்கள்" என்று எடுத்து தேங்காயானால் உடைத்து நைவேத்தியமாகவும், இளநீரானால் அபிஷேகமாகவும் உபயோகிப்பானும்" என்றாள்

ஸ்ரீனிவாசன்:—"அம்மா, அந்தப்பூசாரிக்கு இந்தத் தேங்காய் இந்தக் கோவிலுக்கே வந்திருக்கிறதென்று எப்படித் தெரியும்? ஸ்வாமியும் இருக்குமிடம் தெரியாமல் தண்ணீரில் மூழ்கி யிருந்தால், அவன் எப்படிப் பூஜை செய்வான்?" என்றான்.

அகிலாண்டம்மாள், "அப்பா, அந்த நம்பூரிவெகு நாளாய்ப் பூஜை செய்பவனானதினாலும், ஒரு நாள் சாற்றிய மாலை, புஷ்ப முதலியவைகள் மறுநாள் பூஜாகாலம் வரை மூர்த்தியைச் சுற்றி மிதந்துகொண்டு மிருக்குமாதலாலும், அவன், "நெப்பு" தெரியாமல் தடுமாறமாட்டான். இன்னும் அவ்வூரார் மனிதர்களுக்கு மாத்திரமல்லாமல் மரஙகளுக்குக் கூட பிரார்த்தனை செய்கின்றார்களாம்" என்றாள்.

ஸ்ரீனிவாஸன், "அம்மா, மரங்களுக்குப் பிரார்த்தனை எதற்காக?" என்றான்.

அகிலாண்டம்மாள், "வீடுகளிலுள்ள சில மரங்கள், அதாவது, தென்னமரம், மாமரம், பலாமரம் இவைகள் ஏதாவது ரொம்ப நாள் வரை காய்க்காமலும் பழுக்காமலும் இருந்தால் அவ்வூரார், "இந்த அய்யப்பன் தயவினால் இம்மரம் காய்த்தால், முதலில் காய்க்கும் காய், அல்லது பழத்தை அவருக்கு அனுப்பிகிறேன்" என்று பிரார்த்தனை செய்து கொள்ளுவார்களாம். உடனே அந்த மரம் காய்க்குமாம். அப்போது அந்தந்த மரங்களின் காயையோ, பழத்தையோ, முதல் முதல் காய்த்ததை இம்மாதிரி அனுப்புவார்களாம். இப்போதும் நடந்து வருகிறதாம்" என்றாள்.

ஸ்ரீனிவாஸன், "அம்மா, இது ரொம்ப ஆச்சரியமா யிருக்கின்றதே. நீ பார்த்ததுமில்லை என்கிறாயே, உனக்கு இது எப்படித் தெரிந்தது?" என்றான்.

அகிலாண்டம்மாள், "ஸ்ரீனிவாஸா, நான் இதைப் பார்த்ததில்லை; நிஜந்தான். என் தங்கைநாகம்மாள், அதாவது உன்சிறியதாயார், இருக்கிறாளே, அவளது நாத்தனார் பாலக்காட்டில் இருக்கிறாள். அங்கு நாகம்மாள் ஒரு தடவை போனாள்; அவள் இதை எனக்குச் சொன்னாள். அந்த ஞாபகம் இப்போது வந்ததினால் பிரார்த்தித்தேன்" என்றாள்.

இதைக் கேட்ட ஸ்ரீனிவாஸன், "அம்மா, அந்த ஸ்வாமியை நாம் போய் ஒரு தடவை பார்த்து வரலாமா?" என்றான்.

அகிலாண்டம்மாள், "உங்க அப்பாவுக்கு உடம்பு வாசியாகட்டும். போய் வரலாம்" என்று சொல்லும் பொழுதே, கோழி கூவிற்று. ஆதிசேஷய்பரும் கொஞ்சம் உடம்பு சீதம் தணிந்து பிரஞ்ஞை தெளிந்து பேசத் தொடங்கினார்.

காலையில் எழுந்தவுடன் டாக்டரும் வந்து பார்த்து "அம்மா, இனிமேல் பயமேயில்லை. சீதம் தணிந்து உடம்பு சூடாயிருக்கின்றது. இரண்டு நாள் காஷுவல் லீவு (Casual leave) வாங்கிக் கொண்டு வீட்டிலிருந்து மருந்து சாப்பிடட்டும். நான் இன்றும் மருந்து கொடுத்துப் போகிறேன். நாளைய தினம் பையனை அனுப்புங்கள், மருந்து அனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டு மருந்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்.

டாக்டர் சொன்னது போல், பையனை அனுப்பி மருந்து வாங்கி வரும்படி செய்ய, இரண்டு நாளில் ஆதிசேஷய்பருக்குக் காயலா குணமாகி, எழுந்து, ஆபீஸுக்குப் போய்க்கொண்டும், ஸம்சாரத்தைப் பார்த்துக்கொண்டும் இருக்கலானார்.

ஆதிசேஷய்யர் உடம்பு குணமாகி எழுந்தவுடன், அகிலாண்டம்மாளுக்கு வந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அவள் அந்த ஊரே அதிரும்படி சப்தம் போட்டுக்கொண்டு "எனக்கு சரி யார்?" என்று பெருமைபாராட்டிக்கொண்டு சந்தோஷமாய் வசிக்கலானாள்.

IV

ஒரு நாள், அகிலாண்டம்மாள் வீட்டுக்கு நான்கு வீடு விட்டு வசிக்கும் விசாலாக்ஷி அம்மாள் தன் கைக் குழந்தையைச் சிரசில் வாட்டிப்போட்ட வெற்றிலையுடனும், நெற்றியிலரைத்துப் போட்ட பத்துடனும், உடம்பில் போட்ட பிளானல் (Flannel) சொக்காயுடனும், இடுப்பில் எடுத்துக் கொண்டு வீதி வாசற்படியில் வந்தாள்.

அந்த சமயத்தில் எதிர் வீட்டில் வசிக்கும் அலமேலு அம்மாளும் வெளியே வந்தாள்.

அலமேலு அம்மாள் விசாலாக்ஷி அம்மாளைப் பார்த்து, "விசாலாக்ஷி! உன் குழந்தைக்கு என்ன உடம்பு?" என்றாள்.

விசாலாக்ஷி அம்மாள், "அலமேலு, வந்து உட்காரேன்! என் குழந்தைக்கு ஜலதோஷம். ராத்திரி பெல்லாம் அழுதுகொண்டே யிருந்தது. என்னையும் தூங்கவிடவில்லை. காலையிலெழுந்து வீட்டுவேலைகளைச்செய்து, சமைத்து, குழந்தைகளுக்கும் அவருக்கும் போட்டு விட்டு நானும் சாப்பிட்டு வேலை யெல்லாம் முடித்துக்கொண்டு, பிள்ளைகளை ஸ்கூலுக்கு அனுப்பிவிட்டு, கொஞ்சம் தூங்கலாமென்று படுத்திருந்தேன். கோடி யாத்து அகிலாண்டம்மா போடும் சப்தத்தால் தூக்கம் பிடிக்காமல் எழுந்து வந்தேன். நாராயணய்யர் இந்த வீதியை விட்டுப்போனதுமன்னியில், நல்லவாளுக்கு வீட்டைக் கொடுக்காமல், இவாளுக்குக் கொடுத்துவிட்டுப்போனார்; இதென்ன தொந்தரவு?" என்றாள்.

அலமேலு, "அதனால் உனக்கென்ன? அவள் வீட்டில் அவள் சத்தம் போடுகிறாள். நாம் ஊராரை அடக்கமுடியுமோ? உலை வாயை மூடலாம், ஊர் வாயை மூடமுடியுமோ? என்றாள்.

விசாலாக்ஷி, "அதென்னமோ? எனக்குக் கொஞ்சம் சப்தம் ஏற்பட்டால் தூக்கம் வாராது" என்றாள்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த விசாலாக்ஷியம்மாள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டு ஜானகி வெளியேவந்து, "என்ன விசாலாக்ஷியம்மா, அந்த அகிலாண்டம்மா சப்தம் போடுவதினால், நமக்கு எவ்வளவு உபகாரமிருக்கின்றது? உபகாரம் செய்பவரை தூஷணை செய்யலாமா?" என்றாள்.

விசாலாக்ஷியம்மா, "ஜானகீ, அவள் சப்தம் போடுவதில் நீ என்ன உபகாரம் கண்டுபிடித்தாய், சொல்லு பார்ப்போம்" என்றாள்.

ஜானகி சொல்லத் தொடங்கினாள் :—

"விசாலாக்ஷியம்மா, அலமேலு அம்மா, இருவரும் கேளுங்கள். நாம் இப்போது இருக்கும் தெருவில் மேற்குப் பக்கம் ஆஞ்சனேயர் கோவில் இருக்கின்றது. அதில் சில பேய் பிடித்த பெண்களைக் கூட்டி வந்து பேய் ஆட்டுகிறார்கள். அந்த ஆஞ்சனேயர் தம் சக்தியால் அந்தப் பேய்களை ஓட்டிவிடுகிறார். அதுவுமன்றி அவர் தம் கோவிலுக்குச் சுற்றி ஒரு பர்லாங்கு வரையிலும் உள்ள ஒரு மாதத்திலாவது அவைகளை இருக்க விடுவதில்லை, எவ்வளவோ நாளாய் அந்தப் பெண்களைத் தொந்தரவு செய்து வந்த பேய்கள் இவர் கோவிலுக்கு வந்ததால் அப்பெண்களை விட்டு விலகி இருக்க வேறு இடமில்லாமல் தவித்து, இத்தெருவுக்குக் கிழக்குப் பக்கம் மாங்கள் அடர்ந்திருப்பதாலும், அனுமார் கோவில் கொஞ்சம் எட்டிப் போய்விட்டதாலும், அம்மாங்களை அடைந்து விட்டாற்போல் தோன்றுகின்றது. அவைகளின் குணம் ஒருவரைவிட்டால் ஒருவரைப் பிடிப்பதும், அகப்பட்டவரைக் கஷ்டப்படுத்துவதும், ராத்திரி காலத்தில் சஞ்சரிப்பதும் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஆதலால், அந்தப் பேய்களுக்கு ராத்திரி காலத்தில் நம்ம தெருவில் சஞ்சரிக்கவும் நம்மைப் பிடிக்கவும் இலகுவாயிற்று. இப்பொழுது இந்த அகிலாண்டம்மாள் இரவும் பகலும் செய்யும் சப்தத்தால் அந்தப் பேய்கள் நம்ம தெருப் பக்கம் வந்தால் இவள் சப்தத்தைக்கேட்டு பயந்து, "நாமே பெண்களைப் பிடிக்கும் பேயாயிருக்க, நம்மைப் பிடிக்கும் பேயொன்று இவ்வூரில் இருக்கிறதுபோலத் தோன்றுகின்றதே. இதென்ன மாயம்! இந்த ஆஞ்சனேயர் அந்தப் பக்கத்தைவிட்டு ஓட்டிவிட்டதுமன்றி இந்தப் பக்கத்திலும் நாம் தெருவுக்குள் போகாமலிருக்கும்படி செய்துவிட்டார் போலிருக்கின்றது. நாம் அங்கு போனால் பிழைக்கமாட்டோம். இனிமேல் இந்தப் பக்கமும் இருக்க முடியாது" என்று தங்களுக்குள்ளே யோசித்துக்கொண்டு இவ்வூரையே விட்டுப்போய் விடும்.

"இதுவுமன்றி, திருடர்கள் வந்தால் இவள் சப்தத்தைக்கேட்டு 'இவ்வீதியில் நாம் எப்பொழுது வந்தாலும் சந்தடியாயிருக்கின்றது. போனால் ஒன்றுங்கிடைக்காது. அப்படிதைரியமாய்ப் போனாலும் ஜெயிலுக்கு இரையாவோம். அல்லது உயிரைப் போக்கிக்கொள்வோம். சுவர் இருந்தாலல்லவா சித்திரம் எழுதலாம். நம்ம உயிரிருந்தால், இங்கில்லாவிட்டாலும், வேறிடத்திற்காவதுபோய்த் திருடிப் பிழைக்கலாம். உயிரே போய் விட்டால் என்ன செய்வது?' என்று யோசித்து பயந்து இங்கு வர மாட்டார்கள். நாம் சுகமாய்க் கவலையில்லாமல் தூங்கலாம். இவ்வளவு உபகாரம் அந்த அம்மாவால் இருப்பதை யோசனை செய்யாமல் தூஷணை செய்யலாமா? நம்ம தெருவை அந்த அம்மாள் "ரக்ஷகர்"போல் ரக்ஷித்து வருகிறாள். இந்த மாதிரி ரக்ஷிக்க உங்களால் ஆகுமா, என்னால் ஆகுமா?" என்றாள்.

இதைக் கேட்ட அலமேலு அம்மாளும் விசாலாக்ஷியம்மாளும் சந்தோஷித்து, "ஜானகி! இந்த யோசனை நீ எங்கு படித்தாய்? எங்களுக்குத் தெரியவில்லையே! நீ இவ்வளவு யுக்தியுள்ளவள் என்று தெரிந்துதான் உன் தாயார் தகப்பனார் உனக்கு "ஜானகி" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். உன்னைப் பெற்றவள் என்ன பாக்கியசாலியோ, கொண்டவன் என்ன பாக்கியசாலியோ" என்றனர்.

இதற்குள் விசாலாக்ஷியம்மாள், "அலமேலு அம்மா, உங்கப் பக்கத்து வீட்டிலிருக்கும் ராஜலக்ஷ்மி ஊரில் இருக்கிறாளா? காண்கிறதே இல்லையே! இந்த சமாசாரங்களை ராஜலக்ஷ்மி கேட்டால் நன்றாயிருக்கும். உடனே அவள் புருஷனுக்குச் சொல்லி இந்த மாதம் வரும் சிந்தாமணியில் போடும்படி செய்வாள்" என்றாள்.

இதற்கு ஜானகி, "ஏன், ராஜலக்ஷ்மி இல்லாவிட்டால், நீங்களே எழுதி, உங்கள் ஆத்துக்காரரிடம் சொல்லிப் போடும்படி செய்யக் கூடாதோ? உங்கள் வீட்டுக்கும் மாதம் தவறாமல் சிந்தாமணிப் பத்திரிகை வருகின்றதே!" என்றாள்.

எங்கள் வீடுகளில் ஊராருக்கு மெய்ப்பிக்க வேண்டி "பேப்பர்" வரவழைப்பதும் பார்ப்பதுமாயிருக்கிறார்களே தவிர, ராஜலக்ஷ்மி அகமுடையானைப்போல் கதைகள் கட்டுவதற்கும் எழுதுவதற்கும் புத்தி போதாது. ராஜலக்ஷ்மி கணவர் எழுதினால் கண்டோர் களிக்கும்படி பார்த்தோர் பிரமிக்கும்படி எழுதுவார்! அவனை வெளியே காண்கிறதுமில்லை! ஊரில் தான் இருப்பாள். அவள் புருஷன் எப்படி வெளியில் வாராமல் ஏதோ ஒன்றைப் படித்துக்கொண்டேயிருக்கிறாரோ, அப்படியே அவருடைய மனைவியாதலால் அவளும் வேலை செய்யும் போதைத் தவிர பாக்கி வேளையில் ஏதோ ஒன்றைப் படித்துக்கொண்டு படிதாண்டாப் பத்தினி போலிருப்பாள்" என்றனள்.

இதைக் கேட்ட ஜானகி என்னைப் பார்த்து "அதோ, திண்ணையில், கம்பத்தின் மறைவில், நாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டே நிற்கின்றாளே!" என்றாள்.

உடனே, விசாலாக்ஷி, அலமேலு, ஜானகி ஆகிய மூன்று பேரும் எழுந்து, எங்கள் வீட்டுக்கு வர, நானும் "வாருங்கள்" என்று கூப்பிட்டு உட்கார வைத்தேன்.

அலமேலு அம்மாள், "ராஜலக்ஷ்மீ, நாங்கள் பேசினதெல்லாம் கேட்டாயா?" என்றாள்.

நான் "அலமேலு, எல்லாம் கேட்டேன்" என்றேன்.

விசாலாக்ஷி, "உங்க ஆத்துக்காரரிடம் சொல்லி ஒரு கதையாய் எழுதும்படிசெய்து, இம்மாதம் வரும் சிந்தாமணியில் போடச் சொல்லேன்" என்றாள்.

அதற்கு நான், "விசாலாக்ஷி, இதெல்லாம் நம்ம பெண்கள் பேச்சாதலால் நான் என் கணவரிடம் ஒரு பெரிய மனுஷிபோல் உட்கார்ந்து சொல்லவும், அவர் எழுதவும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆதலால், உங்களுக்கு இஷ்டமிருந்தால் நானே எழுதிப் பத்திரிகையில் வரும்படி செய்கிறேன்" என்றேன்.

அதற்கு விசாலாக்ஷி, "உன் கணவர் எழுதுவதில் கைதேர்ந்தவர். எவ்வளவோ கதைகள்

எழுதி வழக்கமிருக்கின்றது. உனக்கு அப்படி வழக்கமில்லையே. தெரியாமல் பழுதுகள் வந்து விட்டால் என்ன செய்கிறது?" என்றாள்.

அதற்கு நான், "விசாலாக்ஷி, தெரியாமல் அப்படி வாக்குப் பழுது வந்து விட்டால் அந்தப் பத்திரிகைக்கு யஜமானியாயிருக்கும் பாலம்மாளும் நம்மைப்போல் ஒரு ஸ்திரீயாகையால் அந்தப் பழுதைத் திருத்திப் பத்திரிகையில் போடுவார்" என்றேன்.

அதற்கு விசாலாக்ஷி, "உனக்கு உன் கணவரைப்போல் இதுவரை ஒன்றும் எழுதி வழக்கமில்லையே. இதை பாலம்மாள் அச்சிடாமல் தள்ளி விட்டால் நாம் பட்டபாடெல்லாம் வீணாய்ப் போகுமே" என்றாள்.

அதற்கு நான், "அப்படி ஒரு நாளும் நம்ம சகோதரி பாலம்மாள் செய்யமாட்டார். 'எவ்வளவோ' கைதேர்ந்த சகோதர சகோதரிகள் நம்ம பத்திரிகைக்குக் கதைகள் எழுதி அனுப்புகிறார்கள். அதில் ஒன்றுந் தெரியாத சகோதரி ஒருவள் இருக்கட்டும்' என்றும், 'மற்றவர்கள் எழுதியனுப்புங் கதைகளுக்கு திருஷ்டிபடாமல், இது ஒரு திருஷ்டி பரிகாரமாயிருக்கட்டும்' என்றும் அவசியம் எடுத்துக் கொள்வார்" என்றேன்.

இதைக் கேட்ட விசாலாக்ஷி, அலமேலு, ஜானகி ஆகிய மூன்று பேரும், "உன் இஷ்டம்போல் செய். பத்திரிகையில் வந்தமேல் பார்க்கலாம்" என்றார்கள்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த எங்கள் வீட்டுக்கு இடப் பக்கத்து வீட்டிலிருக்கும் முத்தம்மாப்பாட்டி ஒரு தடியை ஊன்றிக் கொண்டும் முதுகைக் கூனிக்கொண்டும் வந்தாள்.

"பாட்டீ, வாருங்கள், உட்காருங்கள்" என்றேன்.

அந்தப் பாட்டி, "என்டீ, ராஜலக்ஷ்மி, நீங்கள் எல்லோருமாய்ச் சேர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருக்கிறீர்களே! என்ன சமாசாரம்?" என்றாள்.

அதற்கு நான், "பாட்டீ, விசேஷம் ஒன்றுமில்லை. கோடியாத்து அகிலாண்டம்மாள் சமாசாரந்தான்!" என்றேன்.

அதற்கு அந்தப் பாட்டி, "அகிலாண்டம்மாள் மடி கொண்டாட்டம், ஆதிசேஷய்யர் படுத்திண்டாட்டம்! இவ்வளவு தானா!" என்றாள்.

இதைக் கேட்ட நான் இக்கதைக்கு இதே பெயரிருக்கட்டுமென நினைத்துக்கொண்டு, எனது சிநேகிதிகள் அவரவர் வீட்டுக்குப் போக, நானும் என் வீட்டிற்குள் சென்று, வேலைகளை முடித்துவிட்டு எழுதலானேன்.

அகிலாண்டம்மாள் மடி கொண்டாட்டம், ஆதிசேஷய்யர் படுத்திண்டாட்டம். அது ஒரு நிரந்தர பஜனை. அவர்களிருவர் மண்டையோட்டுடன்தான் நிற்குமாதலால் எனது கதையை இத்துடன் ஒருவாறு முடிக்கிறேன்.

சுபம்!

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

லியோனிதாஸ்.

(ஜனாப் M. A. அல்லாபிச்சை).

இரத்தினாகரமென்னுஞ் சிறப்புப் பெயர் பெற்ற கடலாற் சூழப்பட்ட இப் பரந்த நிலவுலகின்கண் குடியிருக்கும் மாந்தர்களின் பெருஞ் சுகத்திற்காக நம்மைப் படைத்துக் காக்கும் முழு முதற்கடவுள் பகற்காலத்திலொளி வீசும்படி சூரியனையும், சராசரமாகிய சகல சீவராசிகளும் பலவகை யுணவு பெற்று வாழும் பொருட்டுப் பருவகாலந் தவறாது மழை பொழிவதற்குரிய மேகத்தையும், இரவும் பகலுங் கடவுளை வழிபட்டேத்தும் அன்புடைய தொண்டன் போல் ஒரு கண்ணிமைப் பொழுதேனும் ஓயாமற் கடவுளின் பெருமை, வன்மை, இரக்க முதலியவற்றை யெடுத்து ஓசையால் துதிக்கும் பெருங்கடலையும், தன்னுடைய "அளவு செய்தற்கரிய வடிவத்தின் அளவினாலும், பல வகைப்பட்ட பொருள்களையுடைமையாலும் எப்படிப்பட்ட வலிமையுடையவர்களாலும் அசைக்கப்படாத உருவத்தின் வன்மையாலும் நெடுந்தூரத்திலுள்ளவராலுங் காணப்படுகின்ற உயர்ச்சியினாலும் மழை பெய்யாமல் வறந்துபோனாலும் தன்னைச் சார்ந்த உயிர்களுக்கு நீர்வள முதலியவற்றைக் கொடுக்கின்ற கொடையினாலும் விளங்குகின்ற மலையானது" தன்னைக் கண்டவர் மனதிற் கடவுள் ஒருவருண்டென்னுமுண்மையை விளக்கிக் காட்டத்தக்க சிறப்பினையும், வைகறையில் தம்மைப் படைத்த பரமன் தங்களுக்குச் செய்யும் நன்மையைப் பாராட்டித் தேனினுமினிய குரலோசையினால் பாடியாடும் பற்பல பறவைகளையும், பத்தி நிறைந்த நன்னெஞ்சுடையார் தம் சிரசைத் தாழ்த்தி வணங்குவதுபோல் தங்களுச்சியைத் தாழ்த்திக் காற்றினாலிங்குமங்கும் அசைந்து வணங்கும் தருக்களையும், புல்லுண்டினிய பாலைச் சொரியும் பசுக்களையும், மற்றுமுள்ள சீவராசிகளையும் படைத்துள்ளாரென்று சொல்வது மிகையாகும். இவற்றுள் ஒன்றையேனுமொருவனூக்கத்துடன் கவனிப்பானாயின், உலகத்தைப் படைத்து அதற்கு வேண்டுவன அளித்துவருங் கடவுளொருவருள்ளாரென்றும் அவரைத் துதித்தல் கடமை யென்றும் அறிவான் என்பதற்குச் சற்று மையப்பாடில்லை. ஆயினும் பெரும்பாலும் மாந்தர் உலகத்தில் புகழ் இன்ப முதலியவற்றிலாழ்ந்திருத்தலாலும், உலகமே கடவுளென்று கருதுவதாலும், தாங்கள் அனுபவிக்கும் இன்பமே முத்தி யென்று நினைப்பதாலும், உண்டபோதே அறிவை மயக்கு மதுபான முதலியவற்றையே அமிர்தமெனப் புகழ்ந்து கூறுவதாலும், களவு, பொய் யுரைத்தல், பொறாமை, இரக்கமின்மை முதலிய தீக் குணங்களைக் குணமென எண்ணுவதாலும், கடவுளாவது சூனியம், இவ்வையகத்திலுள் நீர்க்குமிழி போன்ற இன்பமெப்போதுமிருப்பது திண்ணமென வீணெண்ணங் கொள்ளுதலாலும், மற்றும் பலவாறு கருதுவதாலும் அப்பரம்பொருளாகிய கடவுள் அவர்களைச் சீர்திருத்தவும், கடவுளொருவருண்டெனத் தெளியும் ஞானத்தை யுலகத்தில் நிலைநாட்டவும் குற்றமற்ற பரிசுத்தமான அனேகந் தூதர்களை இம்மண்ணுலகிலனுப்பி இருக்கின்றனர்.

அவர்களுக்குள் பரிசுத்த ஏசு கிறிஸ்துவைப் பற்றியும், முகமதைப் பற்றியும் சில விஷயங்கள் கூறுதல் நம்முடைய கடமையாகும். கருணையங் கடலாகிய ஏசுகிறிஸ்து உதிப்பதற்குமுன் உலகத்தில் கொடுமை முதலிய அஞ்ஞான இருள் குடிகொண்டிருந்தன,

அவற்றை யழித்து ஞான வொளியைப் பெருகச் செய்யக் கருதிய அவரைக் கல்லினுங் கொடிய வன்னெஞ்சுடைய யூதர்கள் கானத்தில் தனியே செல்லும் செம்மறிப் புருவையை வேங்கைகள் பல கூடிப்பாய்ந்து தாக்குவன போலத் தாக்கினார்கள். ஆயினும் அவர் வியக்கத்தக்க பொறையுடனே, அலைகளால் மோதுண்டு மசையாமல் ஆகாயத்தை யளாவி நிற்குமொருமலைபோல் அக்கொடியார்களுக்குச் சற்று மஞ்சாமல், ஒரு மரத்தை வெட்டுமளவும் அது தன்னை வெட்டுகின்றவனுக்குக் குளிர்நிழலைத் தந்து அவனைப் பகலவனுஷ்ணத்தினின்று காப்பதுபோல் பெருங் கருணாநிதியாகிய அப்பெருமான் யூதர்கள் தமக்குச் செய்த துன்பங்கள் யாவற்றையுஞ் சற்றுங் கவனியாமல், அவர்களுக்கு நன்மையே செய்ய வேண்டுமென்று எண்ணங் கொண்டாரென்பதை யறியாரிவ்வுலகத்தி லொருவருமிலர். கண்டகர்களாகிய யூதர்கள் அவரைப் பழித்தார்கள். வையகத்தைக் கெடுக்க வந்த பெரும் பாவியென்று வெறுத்து நிந்தித்தார்கள்; கல்லாலெறிந்து பூப்போலும் மெல்லிய அவர் திருமேனியை வருத்தினார்கள். முடிவிற் சிலுவையிலறைந்தும் வதைத்தார்கள். ஆயினும் தயாநிதியாகிய அவர் நம்மாலெடுத்துரைக்க இயலாப் பெரும் நன்மையே யிவ்வுலகத்திற்குச் செய்தனர்.

அன்றியும் பாலைவனங்கள் நிறைந்த அரேபியா என்னும் நாட்டில் ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்குமுன் 'முகமத்' என்ற திருநாமந் தரித்த ஒரு தூதரிருந்தனர். அவர் தம் தேயத்துக்கும், உலகத்திற்கும் செய்த நன்மையை யறிய விரும்பின் அவர் காலத்தில் வசித்திருந்த அரேபியர்களின் நிலைமையைப் பற்றி முன்னால் சற்றேனு மறியவேண்டும். அக்காலத்தில் அரேபியர்கள் கட்குடியில் மிகுதியும் விருப்பமுடையவர்கள்; வியபிசாரத்தில் முன்னேற்ற மடைந்தவர்கள்; சூதாட்டத்தில் தங்களை நிகரற்றவர்கள்; வீண் பழி விளைப்பதிற் கன்னெஞ்சம் படைத்தவர்கள்; தங்களுக்குப் பிறந்த பெண் குழந்தைகளைச் சற்றும் இரக்கமின்றிப் படுகுழியில் தள்ளிப் புதைக்கு மதி பாதகர்கள். சந்திரன், சூரியன், நட்சத்திரம், தருக்கள், கல் முதலியவற்றைக் கடவுளாகப் பாவித்து வணங்கியவர்கள்; தங்கள் மக்களை மிருகங்களைப் போலவும் பாராட்டியவர்கள்; பொய் யுரைத்தல், களவு, பொறாமை முதலியவற்றில் நிபுணர்கள். மூட பக்திக்காகப் பெரும் போர் புரிந்து மாந்தரை வதைக்க அஞ்சாத நெஞ்சம் படைத்த மூட பக்தர்கள்; தங்கள் வணங்கும் தேவதைகளின் கோபத்தை யடக்கும் வண்ணம் நரபலி கொடுக்குஞ் செயலுடையவர்கள்.

அரக்கரைப் போன்ற இக்கொடியாரிடத்துக் கடவுள் பக்தி, நல்லொழுக்கம், கல்வி, பொறை, போராண்மை, சகோதரத்துவம், தயாளம், பெருந்தன்மை முதலியவற்றை நிலைநாட்டவும் முன் கூறிய விடம்போன்ற தீய செயல்களை அழிக்க முன் வந்த குணக்குன்றாகிய முகமத் என்ற அத்தூதருக்கு அந்த அறிவிலாரியற்றிய துன்பங்களுக்கோ ரளவில்லை. அவர்கள் செய்த பெருங்கொடுமையை முகமலர்ச்சியுடன் பொறுத்து முப்பது வருடங்களுக்குள் அத்தேயத்திலிருந்த கொடுந் தொழில்களை யழித்து, அரேபியர்கள் சிறந்த நாகரிகத்தையும், பெருந்தன்மையு மடையும்படி செய்த அத்தூதரை பற்றிப் புகழ்ந்து முற்றுங் கூறுதலேட்டிலடங்காது.

உலகமுய்யும் வண்ணம் கருணை வடிவுடன் வந்த மேற்கூறிய அவ்விருவரும் தங்கள் தேயங்களுக்கேயன்றி வையக முழுமைக்கும் பேருபகாரம் புரிந்தபடியாலும், உலக முழுவதையும் தங்கள் நாடென்று கருதியபடியாலும், எல்லாத் தேயத்தாரையும் தங்கள் சகோதரர்களென்றெண்ணியபடியாலும், தங்களுக்குப் பரமனளித்த சுருதிகளை யாவரும் நன்கறிந்து,இம்மை மறுமை இன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்றே அவர்கள் உலகத்திற்காகப் பாடுபட்டபடியாலும், அவர்களை யுலக பத்தரென்று கூறத் துணிந்ததாயிற்று.

ஈண்டு எழுதத் துணிந்தது இராஜ பத்தி, தேய பத்தியைப் பற்றியதாகையால், ஒரு தேய பத்தனுக்கு இன்றியமையாத சிறந்த குணாதிசயங்களைப் பற்றிச் சில விஷயங்களைத் தெளிவாக முன்னர் எழுதத் துணிந்தனம். சிறந்த தேய பத்தன் தன் நாடாகிய வுடலுக்கு உயிர் போன்றிருந்து அரசுரிமை செய்யும் அரசனது முன்னேற்றத்தையும் தன் தேயத்தினது பெறும் சிறப்பையும் நாடுவதன்றி உலக முழுவதற்கும் நன்மையே செய்ய அவாவுடையவனாகவுமிருப்பான். அவனிருதயத்தி லெப்பொழுதும் நேர்மையும், ஒற்றுமையும், அரச பத்தியும், தேய பத்தியுங் குடிகொண்டிருக்கும். தைரியத்திலவனுக்குவமையாக எடுத்துரைக்கத் தக்க சிருஷ்டி இல்லையென்றே யாம் கூறலாம். பொறுமையில் பூமியை ஒப்பான். தான் கூறுவனவாகிய நல்ல காரியங்களைச் செய்கையால் விளங்கச் செய்வான். உலகத்திலுள்ள பலவகைத் துன்பங்களுக்கும் முதற் காரணமாகிய பொருட் செல்வத்தை ஒரு போதும் வியவான்; தந்நாட்டினாசனுக்கும், தேயத்திற்கும்நன்மைசெய்வதே அவன் பெரும் செல்வமாம். தன்னரசனுக்கேனும், தேயத்திற்கேனும் அபாயமுண்டாகுங் காலத்துத் தன் மனைவி மக்களையும் ஒரு பொருளென மதியாது வீர கேஸரிபோல் கர்ஜித்துப் பகைவர் முன் எதிர்த்துப் போர் புரிவான். இராஜ பத்தர் போலும், தேய பத்தர் போலும் நடிக்கும் நயவஞ்சகர்களைச் சிறிதும் நாடாமல் வெறுத்தொழிவான். அவன் "தல்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம், வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்" என ஆன்றோர் கூறியபடி தன் தேயத்தார் படும் துன்பத்தைக் காணின் தானே அனுபவிக்கும் துன்பமெனக் கருதித் தன்னாலியலுமாறு அதனைத் தீர்க்கும்படி முயற்சி செய்வான். அவன் கருணைக் கிருப்பிடம்; தருமத்திற்கு நண்பன்; கொடுமைக்குச் சத்துரு. அவனைப் பற்றிப் பல பலவியந்து கூறுவதேன்? இராஜ பத்தியும், தேய பத்தியுமுடையவன் அத்தேயஞ் செய்த தவப்பயனுக்காக எல்லாம் வல்ல கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு சிறந்த வெகுமதியேயாவான்.

பண்டை காலத்தில் பிரசித்த பெற்ற தேய பத்தர்களுக்குள் வீரச் சுடர்போல் விளங்கும் மூன்று தேயங்களிலுதித்த மூன்று தேய பத்தரைப் பற்றியும், அவர்கள் தங்கள் தேயங்களுக்குச் செய்த வியக்கத் தக்க வீரச் செயல்களைப் பற்றியுஞ் சுருக்கமாகச் சில வரலாறுகளை வெளிப்படுத்தல் நலமாகும்.

கிரீஸ் தேயத்திலுள்ள ஸ்பார்ட்டா நகரவாசிகளாகிய உடலுக்கு ஒரின்னுயிர்போல் விளங்கிய லியோனிதாஸ் மன்னனைப் பற்றியும், அவனோடு ஒற்றுமையுடன் தேயத்தின் பொருட்டு உயிர்துறந்த முந்நூறு வீரர்களைப் பற்றியும், பின்னர், உரோமாபுரியின் சுதந்தரத்தைப் பாதுகாத்த ஹொரேஷஸ் என்னும் தேய பத்தனைப் பற்றியும் அறிவிக்கவேண்டுமென எழுந்த பேரவாவானது எமது சிற்றறிவுக் கடங்காதென்பதைச் சிறிதேனுமுணராது எழுந்தமையால் சிறிது எழுதத் துணிந்தனம்.

ஏறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்குமுன் மிக்க நாகரிக மடைந்திருந்த பாரசீக தேயத்தை செர்செக்ச் என்னுமரசன் அரசாண்டு வந்தனன், அப்

பாரசீகத்தையே யன்றி வேறு பல நாடுகளையும் வென்று, அவையாவும் தன் பொன்குடை நிழற் கீழ்த் தங்கும்படி அரசாட்சி செய்து வந்தனன். இச்சக்கரவர்த்தியினுடை கையில் இருந்த பல நாடுகளில் ஒருவன் சுகத்தை யனுபவிப்பதற்கு வேண்டிய பொருள்களேயன்றிப் பொன், வெள்ளி முதலிய நாணங்கள் கிடைக்கும் பெருஞ் சுரங்கங்களுமிருந்தன.

செல்வப் பொருள் ஒருவன் மனத்திற் செருக் குண்டாதற்குக் காரணமாயுள்ளது. செருக்குக் கொண்ட ஒருவனால் உலகத்திற்கு நன்மையுண்டாவதில்லை யென்பது யாவரும் நன் குணர்ந்த விஷயமே. செருக்குக் கொண்ட ஒருவன் தன்னைப்பற்றி யாவருமுயர்வாகப் புகழ்ந்து பேசவேண்டுமென்று எண்ணங் கொள்வதே அவனது இயற்கையன்றோ? செருக்குடன் பேராசை சேரின் உலகத்தில் துன்ப மதிகரிக்குமென்பதற்குச் சற்றும் ஐயப்பாடில்லை. செர்செக்ச் என்னும் மன்னர் மன்னன் தன் செல்வத்தின் பெருமையாலும் பிரசித்தி பெற்ற தன் வீரர்களின் புயவன்மையாலும், உலகத்திலுள்ள நாடு நகரங்கள் யாவும் தன்னுடைய சட்டத்திற் கடங்கியிருக்க வேண்டுமென்றே எண்ணங் கொண்டனன். இவ்வெண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு ஐந்து லக்ஷம் பாரசீக வீரர்களையும், தன் ஆட்சிக் கடங்கியிருந்த நாட்டுப் படைகளையுங் கொண்ட ஒரு பெரும் சேனையைச் சேகரித்துக் கிரீஸ் தேயத்தை வெல்லத் துணிந்தனன். பின்னர் தான் வெல்லக் கருதிய கிரீஸ் தேயத்தில் போர் மேற் சென்றனன். அங்கு சென்ற அம்மன்னனது சேனைகள் விச்சிலுள்ள ஓராற்றின் நீரைப் பருகி, அவ்வாற்றை ஜலமில்லாத வெற்றிடமாக மாற்றி விட்டன. அவ்வேந்தர்பிரானுடைய ஆடு மாடு முதலிய மிருகங்களும் பிச்சிரச்சுக்கருகேயுள்ள ஓரேரியின் ஜல முழுதையுங் குடித்து அதனையும் வெற்றிடமாகச் செய்தன. முடிவிலப்பெரும் சேனைகள் "தெர்மாபிலே" என்னும் பெயர் வாய்ந்த ஒரு கணவாயினருகே பாசறை யமைக்கத் தொடங்கின.

அக்காலத்தில் கிரீஸ் தேயத்தில் அனேக மலைகள் விசேஷமாகக் காணப்பட்டனவேயன்றிச் சிற்சிலவாகவே சரியான நேர் பாதைகள் தோன்றின. கடலுக்குச் சமீபத்திற் கிழக்குக் கடற் கரையில் மலைகளுக்கிடையில் "தெர்மாபிலே" என்ற ஒரு கணவாயுள்ளது. கிரீஸ் தேயத்தையடைய இக்கணவாயைக் கடக்கவேண்டும். இக்கணவாயில் லியோனிதாஸ் மன்னனுக்கும் செர்செக்ச் சக்கரவர்த்திக்கும் நடந்த உலகப் பிரசித்தி பெற்ற போரினைத் தெளிவாகக் கூறுவதற்குமுன் கிரீஸ் தேயத்திலுள்ள ஸ்பார்ட்டா நகரத்து ஜனங்களின் சிறந்த குணநிசயங்களைப் பற்றிக் கூறுதல் சிறப்புடைத்தாகும்.

பண்டைக் காலத்தில் மிக்க நாகரிக மடைந்திருந்த நாடுகளில் கிரீஸ் ஒன்று. அது பாண்டித்தியத்திற் சிறந்தோங்கியது. தத்துவ ஞானத்தில் மிக்குயர்ந்த நிறை மொழியாளரைப் பெற்றுள்ளது. சொல் வன்மையில் மேம்பாடுற்ற புலமையுடையாளரை மிக்குடையது. ஆயுள் வேத ஞானத்தில் முன்னேற்றமடைந்துள்ளது. பலவகை ஓவியத் தொழிலிற் சிறந்து திலகம்போல் விளங்கி நின்றது. இச்சிறந்த தேயத்தில் பராக்கிரமத்திற் குறைவிடமாகிய ஸ்பார்ட்டா நகரமே அந்த லியோனிதாஸுக்கு ஜனன பூமியாகும். இம்மன்னவன் தைரியம், தேய பத்தி, கருணை முதலியவற்றின வதாரமெனக் கூறின் புனைந்துரையாகுமோ? ஸ்பார்ட்டா நகரத்தினரும் "அரசனெவ்வழி அவ்வழி குடிகள்" என்னுமுதுரை பிழையாகா வண்ணம் தமது தேயத்திற்கு அபாயம் உண்டாகும் காலத்தில் தங்கள் சாயத்தார்கள், தாய் தந்தையர்கள், மனைவி மக்கள் முதலியனவர்களையுமொரு பொருட்படுத்தாது தங்கள் அரசனுடனே தேயத்தின் சுதந்தரத்திற்காகத் தங்களுயிரையுமர்ப்பணஞ்செய்யமுன்வந்த பெரும் தேயபத்தர்கள். அவ்வீரர்கள் போர்த்தொழிலை நாடோறும் பந்தாடல் முதலிய விளையாட்டுத் தொழிலாகக் கொள்ளும் மிக்க ஆற்றலுடையவர். அவர்கள் போர்க்களத்திலடைவது வெற்றி, இழப்பது இன்னுயிரெனக் கொள்ளும் கொள்கையுடையார். இத்தகைய வீரசிங்கங்களைப் பெற்ற நாட்டிற்கு ஓரபாயமுமில்லை யென்பது கூறுதேயமையும்.

செர்செக்ச் தம் தேயத்தை வெற்றி அடையக் கடல் போன்ற பெரும் படையைத் தெர்மாபிலே கணவாயில் செலுத்தி வருவானென்பதை யறிந்த லியோனிதாஸ் மன்னன் ஓராலோசனை சபையைக் கூட்டி "செர்செக்ச் தெர்மாபிலே கணவாயைக்கடப்பின் நம்முடைய தேயத்திற்குண்டாகுமிடுக்கண்கள் பலவாகும்" என்று எடுத்துரைத்து "அக்கணவாயைக் காவல் செய்யத் தக்க தைரியம் படைத்தார் யாருளர்?" எனக் கூறினன். எவருமின்மையால் தானே யக்கணவாயைக் காவல் செய்யும்படி யெண்ணிய விருப்பத்தைச் சபையாரிடந் தெரிவிக்க, அவர்கள் சந்தோஷமும், துக்கமும் அடைந்து "மன்ன! அவ்வாறே செய்க!" என்று உறுதி மொழி கூறினர். அது கேட்ட அரசன் பெரும் மகிழ்ச்சி கொண்டனன். கேள்வியுற்ற அவனுடைய குடி ஜனங்களுக்குள் முந்நூறு வீரர்கள் "அரச! யாங்களும் நின்னுடன் காவல் புரியுமாறு வருகின்றனம்" என்றனர். மன்னன் "அப்படியே ஆகுக!" என்று வாக்களித்துத் தன்னரண்மனைக் கேகினன்.

அங்ஙனஞ் சென்ற அரசன் தன் ஆருயிரனைய நாயகியைக் கண்டு "யான் தெர்மாபிலே கணவாயைக் காவல் செய்யச் செல்லாமலிருப்பின் நம்முடைய தேயத்துக்குப் பாரசீகமன்னனால் பெருந் துன்பமுண்டாகும்" என்றுரைத்தனன்.

அவ்வீரமொழி கேட்ட அவள் முகமலர்ச்சியுடன் செல்லும்படி விடைதரப் பெற்றபின், 'என்னுயிரினுஞ் சிறந்த பாவாய்! யான் இறப்பது திண்ணம். யானெவ்விதம் கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்தேனோ அவ்வண்ணமே என்னுடைய அருமைக் குழந்தைகளும் கல்வி கேள்விகளில் தேர்ச்சியடையச்செய்வது உனது சிறந்த கடமையாகும்!' என்று கூறித் தன் சிறிய குழந்தைகளைக் கரத்திலேந்தி முத்தமிட்டு அரண்மனையைவிட்டு நீங்கினன்.

வியக்கத் தக்க வீரம் வாய்ந்த லியோனிதாஸ் மன்னனும், அவன் முந்நூறு வீரர்களும் முழுமனதுடன் நேசித்த கன்னியர்களைக் கடிமணஞ்செய்ய மிக்க உவகையுடனே செல்லுமாடவர்களைப் போல் தெர்மாபிலே கணவாய்க் கேகினர். ஏகும்பொழுது பதிவாணர்கள் அவர்களைப் புகழ்ந்தார்கள். இளங்கன்னியர்களுள் சிலர் தங்களின்னிசைக் குரலினால் "வெற்றியுண்டாகுக! வெற்றி யுண்டாகுக!" என ஆரவாரித்தனர். மற்றுஞ் சில மகளிர் அவர்கள் செல்லும் பாதையிற் பூமாரி பொழிந்தனர். அவ்வாறு அவர்கள் செல்வதைக் கண்ட நண்பர்களாகிய டெகேடேயர்களும், மந்தீனியர்களும் ஒன்றுகூடிய ஆயிரம் வீரர்களும், ஆயிரம் ஆர்கேடியர்களும், மூன்றுயிரத்து நூறு வீரர்களடங்கிய வேறு பிலொபானியர்களும், நூறு போக்கியர்களும், நானூறு தீபர்களும், எழுநூறு தெஸ்பியர்களும் போர்த் துணையாக உடன்வந்து சேர்ந்தனர். அவ்வீரர்கள் வந்தடைந்ததைக் கண்டு மகிழ்ந்த மன்னன்

தெர்மாபிலே யினை யடைந்தனன். இத்தெர்மாபிலேயினைப்பற்றிய சில விஷயங்கள் முன்னமே சொல்லப்பட்டிருக்கின்றன. இக்கணவாயில் மலைகளுக்குங் கடலுக்குமிடையில் ஏறக்குறைய ஆயிரத்தெழுநூற்றைம்பது கஜ தூரமளவு ஒரு குறுகிய சிறிய பாதையுள்ளது. இப்பாதையில் இரண்டு வண்டிகள் ஒன்றுடன் ஒன்று எதிராகச் செல்ல இயலா. இக்கணவாயிடையில் தெச்சாலியக் கொள்ளைக்காரர்களைத் தடுக்கும் பொருட்டுப் போகியர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பெருஞ்சுவர் இருக்கின்றது. அஃது அப்பொழுது பழுதுபட்டிருந்தமையால் அதனை முதலில் லியோனிதாஸ் பழுது பார்த்தனன். பிறகு மற்றொரு பாதையைப் பாதுகாக்கும் பொருட்டுச் சில வீரர்களை யனுப்பினன்.

செர்செக்ச் பெருங் கடல்போலப் பரவிய தன் சேனையுடன் வந்து அக்கணவாயினெதிரிலுள்ள சம வெளியில் தங்கினன். அக்கணவாயில் போர் புரியுமாறு தங்கியிருந்த அச்சிறிய சேனையைக் கண்டு நகைத்தனன். "ஒரு முயல் மதங்கொண்ட ஒரு யானையை தாக்குமோ?" என்று வியப்படைந்தனன். "ஆகாரமற்ற பசு ஒன்று ஆண்மையுடனே திரியும் ஒரு புலியை எதிர்க்குமோ?" என்று ஆச்சரிய மடைந்தனன். இதுவுமன்றிச் சத்துருக்கள் கணக்கற்றவர்களாக முன்னிருந்துஞ் சற்றுமச்சங்கொள்ளாமல் கிரேக்கர்கள் மல்யுத்தம் செய்தும் இன்புடன் விளையாடியும் மயிர்களைக் கோதிக் கொண்டிருந்தலையுங் கண்டு செர்செக்ச் மன்னன் வியப்படைந்து தன் சேனையிலுள்ள சில கிரேக்கர்களை நோக்கி "அவர்கள் இச்சமயத்தில் இவ்வாறு மயிர்களைக் கோதற்குக் காரணமென்ன?" என்று கேட்க, அவர்கள் "மன்ன! அபாயமதிகமாக இருக்கும்பொழுது ஸ்பார்ட்டர்கள் மயிர் வார்தல் வழக்கம்" என்று கூறினர்.

ஒரு தேயப் பற்றுடையவன் யுத்தத்திலிறப்பன் என்பதையும், ஆனாலொருபோதும் பகைவனுக் கடங்கான் என்பதையும், அவன் தன் தேயத்தின் கீர்த்திக்காகத் தன்னிடத்திலுள்ள எல்லாவற்றையும் அர்ப்பணஞ் செய்வான் என்பதையுமறியாத செர்செக்ச், லியோனிதாஸ் மன்னனும், அவன் வீரர்களும், தன் சேனையைக் கண்டு நடுநடுங்கித் தனக்குச் சரணமடைவார்கள் என்னுந் துரெண்ணங்கொண்டு நான்கு நாட்கள் மட்டும் அவர்களோடு போர் புரியாமலிருந்தனன். அதை யறிந்த டிமாரடச் செர்செக்ச் மன்னனை நோக்கி "மன்ன! ஸ்பார்ட்டர்களுயிரிழப்பினுமிழப்பர், ஆனால் சரணமடையார்" என்று கூறினன்.

அதைக் கேள்வியுற்ற மன்னன் தன் வீரர்களிற் சிலரை நோக்கி "அக்கணவாயைப் பாதுகாத்திருக்கும் கிரேக்கர்களையும் அவர்கள் தலைவனையுமுயிருடன் பிடித்துக் கயிற்றாற் பிணித்து என் எதிரிற்கொணர்வீர்" என உத்திரவு அளித்தனன். அவன் கூறிய மொழிக்கிணங்கிப் பல வீரர்கள் மிக்க கோபத்துடன், அமைதியற்ற அலைகள் கடலிடையிருக்குமொரு மலையினிடம் மோதி யெப்படித் தூளி தூளியாகச் சிதறுகின்றனவோ, அதே வண்ணம் கிரேக்கரைத் தாக்கி யழிந்தனர். அவ்விதம் பலமுறை போர் புரிந்து பாரசீக வீரர்கள் அக்கணவாயிலில் கணக்கற்று மாண்டனர். பெருங் காற்றால் புரட்டித் தள்ளப்படும் விருட்சங்கள்போல், லியோனிதாவினீட்டியின் வீரக் காற்றினாலும் அவனுடைய வீரர்களின் தைரியக் காற்றாலும் பாரசீக வீரர்களாகிய விருட்சங்கள் புரட்டித் தள்ளப்பட்டன; கடலினுலவுமொரு சுறா பல மச்சங்களைக் கொலை புரிவதுபோலவும், பசியால் வருந்துமொரு வேங்கை ஆட்டுக்கிடையிற் புகுந்து தன்னெதிரிலெதிர்ப்பட்ட ஆடுகளைக் கொல்லல்

போலவும் தங்களை யெதிர்த்த பாரசீக வீரரைக் கிரேக்கர்கள் தாக்கியழித்தலைக் கண்டு அஞ்சித் தன்னுடைய சிங்காசனத்திலிருந்து மூன்று முறை பெருஞ் சினத்துடன் துள்ளியெழுந்தனன் செர்செக்ச் மன்னன். முதல் நாட் சமரில் தன்னுடைய பெரும் படையிவ்வாறழிவுறுவதைக் கண்ட அம்மன்னர் மன்னன் உலகத்தில் பிரசித்தி பெற்ற "மீடர்" வீரர்களை நோக்கி, "இக்கிரேக்கர்களைத் தாக்கியழிமின்!" என்று கூற அவ்வீரர்களுந் தங்கள் கொற்றவன் விரும்பிய வண்ணம் மிக்க சினத்துடன் புலிப்போத்தெனப் பாய்ந்து கிரேக்கர்களைத் தாக்கினர். ஆயினும் அவீர் முயற்சிகளு முன்னர்ப் பொருத மற்ற வீரர்களின் முயர்ச்சிகள் போலவே பயனற்றன. இவ்விதம் இக்கொடிய யுத்தம் இரண்டு நாள் அளவாக நடந்தது. இரண்டு நாட்கள் வரையில் சில கிரேக்க தேய பத்தர்கள் ஐந்து லக்ஷம் பாரஸீகரை யெதிர்த்ததுடன் அவர்களுக்குள் பலரையும் தங்கள் வாட் படைக்கு விருந்தளித்தனர்.

சான்றோர் பொருட் செல்வத்தைக் காரணமின்றி வெறுத்தாரில்லை. பொருட் செல்வமிகுதியாகப் பெறவேண்டுமென்ற பேராவாக் கொண்ட ஒருவன் அதனைச் சேகரிக்கும் பொருட்டு எந்தக் கொடுஞ் செயலையுஞ் செய்ய அஞ்சான். வையகத்தில் ஞானத்தை நிலைநாட்ட வந்த ஏசுகிறிஸ்துவை முப்பது வெள்ளிக் காசுக்காக விற்ற கபடமே குடிகொண்ட நெஞ்சம் படைத்த யூதாஸ் என்பவனையறியாரெவரேனு மிவ்வுலகத்திலுளரோ?

இரவிலெங்கும் பரவும் நிறை யிருளையொழித்துப் பால் போலும் வெள்ளிய குளிர்ந்த நிலவைப் பொழிகின்ற பூரண சந்திரனிடத்துங்களங்க மிருப்பதுபோல், தேய பத்தியிற் சிறந்த அக்கிரீஸ் தேயத்திலும் தேய துரோகி யொருவனிருந்தனன் என்பதை மிக்க துக்கத்துடன் வெளிப்படுத்தலாயினோம். யுத்தம் தொடங்கிய இரண்டா நாள் சாயங்காலம் செர்செக்ச் மன்னன் மிக்க துக்கத்துடனிருக்கும்பொழுது, பாதகமே ஒரு வடிவெடுத்து வந்ததுபோல் செர்செக்ச் சமுகத்தில் ஒரு கிரேக்கன் வந்து சேர்ந்தனன். இப்பாமரன்றான் லியோனிதாஸ் மன்னனையும், அவன் வீரர்களையுங் கொல்வித்த ஷெபியால்டெஸ் என்னும் தேயத் துரோகியாவன். அப்பொழுது அக்கொற்றவன் அவனை நோக்கி "இங்கு நீ இதுபொழுது வந்ததற்குக் காரணமென்ன?" என்று வினவினன். அது கேட்ட அவ்வஞ்சகன் "மன்ன! ஓர் ரகசியமான பாதை யெனக்குத் தெரியும்; அதை இடையர்கள் அறிவார்களே யன்றி மற்றவர் யாவருமறியார்; அதன் மூலமாய் அக்கிரேக்கர் களிருக்குங் கணவாயின் பின் புறத்தை யடைந்து அவர்கள் யாவரையுங்கொன்று வெற்றியடைதல் மிகவும் சுலபம்" என்றான்.

அதைக் கேட்ட வேந்தர் வேந்தன் மிக்க உவகையடைந்து "அழிவற்றார்" என்னும் பட்டம் வாய்ந்த பதினாயிரம் பராக்கிரமசாலிகளையும், ஹைடார்னெச் என்னும் தளகர்த்தனையும் அவ்வஞ்சகனுடன் அனுப்பினன். அப்பெருஞ் சேனை "கெல்லிடாரமச்" என்னுங் கணவாயின் மூலமாயிரவு முழுது நடந்து வைகறையில் பெரிய கருவாலி மரங்களால் அடர்ந்த ஒரு குன்றை யடைந்தது. லியோனிதாஸ் மன்னன் தான் தெர்மாபிலே கணவாய்க்கு வந்தபோது தன் வீரர்களிற் சிலரை ரகசியமான இப்பாதையைக் காவல் செய்யும் வண்ணம் அனுப்பினனென்பதை யாம் முன்னரே கூறியிருக்கின்றனம். அப்பாதையைக் காவல் செய்ய அனுப்பப்பட்டவர் ஆயிரம் வீரராவர்.

அங்குள்ள அவ்வீரர்கள் பகைவர்களாகிய பாரசீகர் வருவதைப்பெரிய மரங்கள் அடர்த்தியாக வளர்ந்தோங்கியிருந்தமையால் அறிந்தாரில்லை. ஆயினுங் காலைக் காற்றில் பாரசீகர் நடப்பதாலுண்டாகுமொருவகை ஒலியைக் கேட்டுத் திடுக்கிட்டு அக்குன்றின் மேலிருந்து கீழே பாரசீக சேனை யிறங்குவதைக் கண்டனர். பின்னர் கிரேக்க வீரர்கள் அம்பு மாரி பொழிந்தனர். அம்மாரியால் சற்றேனும் பயன்படாமையால் கூடிய சீக்கிரத்தில் அக்கிரேக்கர்கள் அங்குள்ள சிகரத்திற்கேகினர். உடனே பாரசீகர்கள் மலையினுச்சியிலிருந்து கீழே யிறங்கி ஒரு வளைந்த பாதையின் மூலமாய்த் தெர்மாபிலேயைக் காவல் செய்யும் கிரேக்கர்களின் பின்புறத்தை அடைந்தனர்.

அதைக் கண்ட லியோனிதாஸ் மன்னன் தனக்குதவி செய்யும்படி வந்த அரிய நண்பர்களையும், அவர்களின் தைரியத்தையும் மிகவும் வியந்து அவர்களை தங்கள் இல்லங்களுக்குச் செல்லும்படி கூறியபின் தன் முந்நூறு வீரர்களை நோக்கி அவர்களுக்குப் பலவித வீர வார்த்தைகளை எடுத்துக் கூறித் தங்களைத் தாக்கும் வண்ணம் சேர்ந்திருக்குஞ் சேனையை நள்ளிரவில் தாக்கி செர்செக்ச் வேந்தர் வேந்தனையுங் கொல்ல வேண்டுமென்று கொண்ட தன் எண்ணத்தைத் தெரிவித்தனன். அதைக் கேட்ட அவ்வீரர்கள் "எங்கள் தலைவ! அவ்வாறே செய்வோம்" என்று உறுதி மொழி கூறினர். அவ்வுறுதிமொழி கேட்டு மிக்க ஆனந்தமடைந்தான் மன்னன். பகலவன் மேற்கு திசையில் அஸ்தமித்தபோது தன் வீரருடன் சிறிதாகார மருந்தினன்.

லியோனிதாஸ் மன்னன் தான் முன் கருதியவாறே தானும் தன் வீரர்களும் பாரசீகர்கள் தங்கியிருக்கும் பாசறைக்கேகி அங்குள்ள படமாடங்கள் பலவற்றையுமழித்தனர். தங்களை யெதிர்த்த பலரையுங் கோறல் புரிந்தனர். செர்செக்ச் மன்னர் மன்னன் வசித்த பாசறையையுமழித்து, அங்குள்ள விலையுயர்ந்த அரிய பொருள்களையும், பொற் பாத்திரங்களையுமுடைத்தனர். இவ்வித மிரவு முழுவதும் பாரசீகர்களையும் அவர்கள் கூடார முதலிய பலவற்றையும் அக்கிரேக்கர்க ளழித்தனர்.

சூரியன் கிழக்குத் திசையிலுதித்தனன். ஓராற்றல் மிக்க வேங்கையைப் பல ஓமலிகள் வளைவதுபோல், லியோனிதாஸையும் அவன் வீரர்களையும் பாரசீக சேனை வளைந்து வந்த பின்னர், மலையும் மலையுமோதினாற்போலவும் கோளரிங் கோளரியும் பொருதாற்போலவும் பாரசீக வீரரும் கிரேக்க தேய பத்தரும் மிக்க பராக்கிரமத்துடனும் கோபாவேசத்துடனும் பெரும் போர் புரிந்தனர். கிரேக்கர்கள் தமது கூரிய ஈட்டிகளாற் புலியெனப் பாய்ந்து பல சத்துருக்களையும் மாய்த்தனர். அது பொழுது அச்சவளங்களுடைந்து நொருங்கினமையின் வாட்படைகளைக் கையிலேந்தி மேலும் பல பாரசீக வீரர்களை யழித்தனர். தங்கள் வாளாயுத முடைந்த பின்னர்க் கேடயங்களைக் கொண்டு மற்றும் பல பாரசீகரை வதைத்தனர். அக்கேடயங்களழிந்த பின்னர் தங்கள் முஷ்டிகளால் குத்தியும், மார்பால் தாக்கியும், பற்களாற் கடித்தும், காலாலுதைத்தும் அனேகம் பாரசீகரைக் கொன்றனர். மிக்க வீரத்துடன் சண்டைசெய்து கொண்டே லியோனிதாஸ் மன்னனும் அவன் வீரரும் முடிவில் ஒவ்வொருவராகச் சுதந்தரத்திற்காகத் தங்களரியவுயிர்களையும் ஒருபொருட்படுத்தாது தங்களது கடமையை முடித்து, பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பை நிலை நிறுத்தி வெற்றி வீரராய்ப் போர்க்களத்தில் உயிர் நீத்தனர்.

சுகன்யை சரித்திரம்.

(ஸ்ரீமதி சுகப்ரியை)

371-ம் பக்கத் தொடர்ச்சி.

இரண்டாம் அங்கம்.

முதற் காட்சி.

பாத்திரங்கள்—விதூஷகனும் சாஸ்திரியும்.

இடம்—ஓர் தெரு.

வி.—என்ன, சாஸ்திரியாரே, அவசரமாய்ப் போகிறாப்போலிருக்கிறது. கொஞ்சம் நில்லும்.

சா.—என்ன விசேஷம்? உம்மைக்கண்டு வெகு நாளாயிற்றே.

வி.—விசேஷமில்லாமல் நிற்கச் சொல்லுவேனா. இரண்டுமூன்று நாட்களாய்க் கேட்கவேண்டுமென்றுதான் நினைத்தேன். உம்மைக் காணக் கிடைக்கவில்லை.

சா.—கிடைக்காமலென்ன. இங்கேதானிருக்கிறேன்.

வி.—'இங்கேதான், இங்கேதான்' என்று ஊர் முழுவதும் சுற்றுவீர். இங்கே என்றால் நான் எங்கே தேடுவது?

சா.—நான் அவசரமாய் அரண்மனைக்குப் போகவேண்டும். சீக்கிரம் சொல்லும்.

வி.—என்ன! ரொம்ப அவசரப்படுகிறீரே. நீர் பறவை யினமில்லையே. இறக்கையில்லாமற் பறக்கமுடியுமா.

சா.—நான் சீக்கிரம் போகவேண்டும், சமாசாரத்தைச் சொல்லுமே.

வி.—அதுதானையா, கேளும். 'அவசரப்பட்டால் அவலமாகும்' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களன்றோ. ஆகையால் அவசரப்படாமல் நிதானமாய்க் கேளும்.

சா.—விதூஷகரே. உம்முடன் பேச இது தருணமல்ல. நான் திரும்பி வரும்போது வருகிறேன்.

(போக யத்தனிக்கிறார்.)

வி.—கொஞ்சம் பொறும். இரண்டு நாட்களாய் அரசனுள்பட எல்லாருக்கும் வயிற்று வலி; காரணம் தெரியவில்லை. ஓர் ஆரூடம் பாரும்.

சா.—சரிதான்! அங்கே கேட்க வேண்டியதை இங்கே கேட்டுவிட்டீர். எனக்கும் இரண்டு நாளாய் வயிற்று வலி. ஜோசியம் பார்த்ததில் மகாத்மாக்களுக்கு அரச குடும்ப

தில் யாராவது தீங்கு செய்திருக்க வேண்டுமென்று தோன்றிற்று. உம்மைக் கேட்டால் கோபித்துக் கொள்ளுவீரோ என்னமோவென்று யோசித்தேன்.

வி.—சரி, சரி. நான் நினைத்தது சரியாய் விட்டது. இராஜ குமாரி 'ஏதோ ஒரு புற்றுள் பளபளவென்று தெரிந்தது. முள்ளினால் குத்தினேன்' என்றாளாம். எங்கள் பாட்டனார் 'இங்கே ஒரு "சயவனரோ" அல்லது சபணரோ ஒரு ரிஷி இருந்தார். வெகு நாளாய்க் காணவில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தார். இப்பொழுது தெரிந்து விட்டது. ரிஷியின்மேல் புற்று வளர்ந்திருக்கலாம். ரிஷியைத்தான் அரச குமாரி குத்தி யிருப்பாள். சீக்கிரம் வாரும்! அரசனிடம் சொல்வோம்.

(இருவரும் போதல்.)

இரண்டாம் அங்கம்.

இரண்டாம் காட்சி

பாத்திரங்கள்—அரசன், அரசி, விதூஷகன், வேலையாட்கள்.

(வேலையாட்களும் அரசனும் புற்றை மெதுவாய்ப் பிரிக்க, விதூஷகன் வெகு அவசரமாய் அங்குமிங்கும் திரிகிறான். ச்யவனர் நிஷ்டை கலைகிறது.)

அரசன்.—(அவர் பாதங்களிற் பணிந்து) மகானுபாவரே! இங்கே விளையாடிக்கொண்டிருந்த என் மகள் அறியாமையாற் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். முனிவர்களுக்குக் கோபமில்லை என்று எல்லாரும் சொல்வதைப்போல் க்ஷமிக்க வேண்டும்.

வி.—ஆம் ஆம் அதற்கு துர்வாஸரே சாட்சி, கௌசிகர் இரண்டாவது சாட்சி.

அ.—நீர் மகாமுனிவரானபடியால் அறிபாலையான என் புதல்வி செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும்.

ச்யவ.—அரசனே—நான் உங்களில் ஒருவரையும் சபிக்க வில்லை. உன் மகளையும் சபிக்கவில்லை. என் தவ மகிமையால் உங்களுக்குத் தீங்கு நேர்ந்திருக்கிறது. ஆகையால் உங்கள் வருத்தத்திற்கு நான் காரணமல்ல.

வி.—ஆமாம். ஆமாம்.

ச்யவ.—அரசனே! நானோ கண் தெரியாத குருடனாய்விட்டேன்; என்ன செய்யக்கூடும்.

அ.—முனிபுங்கவரே! நீர் வருந்த வேண்டாம். அனேகம் வேலையாட்களை வைத்து உமக்குப் பணிவிடை செய்கிறேன். தாங்கள் இப்பிழை பொறுத்து இத்துன்பத்தைப் போக்க வேண்டும்.

வி.—(ஓர் புறமாய்) ஆமாம். எல்லாரும் சுயகாரியப் புலிகள்தான். குருடனாய்விட்டாரே என்று முதலில் யோசிக்காமல் தன் வயிற்று வலியை முதலிற் சொல்லுகிறாரே.

(சிரிக்கிறான்.)

ச்யவ.—அரசனே! நீ ஆயிரம் ஆட்களை வைத்தாலும் என் இஷ்டத்தை யறிந்து செய்வார்களா. அடிமைகளுக்கு அன்புண்டாகுமா. ஆதலால் என்னிடமிருந்து நீ மன்னிப்பை எதிர்பார்க்கும் பட்சத்தில் உன் புத்திரியை எனக்கு விவாகம் செய்துகொடு.

வி.—இரண்டும் இரண்டுதான், வெண்கலக் குண்டுதான்!

அர.—(மனத்துள்) அடாடா! குருபியாயும் கிழவராயும் இருக்கும் இவருக்குப் பெண்ணைக் கொடுத்தால் நமக்கு நோய் நீங்குமேயன்றி அவளுக்கு என்னபயன்? கடவுளே! இருதலைக்கொள்ளி எறும்புபோல் தவிக்கும் நான் என்ன செய்வேன். (ஓர் புறமாய் அரசியிடம்) நீ என்ன சொல்லுகிறாய்? இவனைக் கொடுப்போமா, அல்லது இந்நோயுடனே காலங்கழிப்போமா? நம்முடனில்லாது நம் குடிகளைவருத்துமன்றோ இந்நோய் வந்திருக்கிறது. என்ன செய்வது!

(வருந்துகிறார்கள்.)

'அன்று கண்ட திரு முகத்தை இன்று கண்டேனே' என்ற மெட்டு.

அரசி. நாதனே நான் என்ன செய்வேன்
எவ்விதம் உய்வேன்.
பாதகர்போல் நாமும் குழந்தையைக்
கொடுப்பதோ.

அரசன். ஒன்றும் தெரியவில்லையே என்ன
செய்குவேன்.
துன்பமோ என்னால் பொறுக்கக்
கூடவில்லையே.

அரசி. ஈசனைத் துதித்திடுவோம்
நேசனே நாமும்.
மாசிலாக் குண மணியும்
அருள் செய்திடுவாரே.

அரசன். தேறுதல் நீ சொல்லியும் பயன்
என்ன இப்போது.
ஆறுதலளிக்க வல்லார்
அவரொருவரே.

(இருவரும் துதித்தல்.)

அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்
குள்ளே-அகிலாண்டகோடி யெல்லாம்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெல்லாந்-
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்ற
தெது-வெங்கணும் பெரு வழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்—
என்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல் பகலறநின்ற வெல்லையுளதெதுவது—
கருத்திற் கிசைந்ததுவே
கண்டனவெலாமோன உருவெளியதாகவுங்-
கருதியஞ்சலி செய்குவாம்.

அரசி.—நாதா, அதோ சுகன்னி தோழிகளுடன் வருகிறாள். என்ன சொல்லுகிறாள் கேட்போம்.

(சுகன்யை வருகிறாள்.)

சு.—அம்மா, நீர் எனக்காகக் கவலையடைய வேண்டாம். நானே அவருக்கு எப்பொழுதும் பணிவிடை செய்கிறேன்.

அரசன்.—கண்ணே! சுகன்யா, நீ அவருக்குப் பணிவிடை செய்கிறேன் என்பதனால் நான் சந்தோஷமடைகிறேன். ஆயினும் அவரையே மணம் புரியவேண்டுமென்றோ. எனக்கு அது துன்பமாயிராதா?

சு.—தந்தையே! நீர் நியாயம் தெரிந்த அரசராயிருந்தும் எனக்காக நியாயம் தவறலாமோ? நானன்றோ அவரைக் குருடாக்கினேன். அதற்காக ஏற்படும் தண்டனையை நானன்றோ அனுபவிக்கவேண்டும். என் நிமித்தமாய்த் துன்பமுற்ற ஜனங்களெல்லாரும் என் நிமித்தமாகவே இன்புறட்டும். நான் இப்பொழுதே இவரை மணாளனாக வரிக்கிறேன். இன்பமோ துன்பமோ எது வந்தாலும் அன்புடனே அதை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

வி.—இதுதான் சரி. இருந்தாலும் குருடருக்கும் ராஜ கன்னிகைக்குமா ஜோடி! பரமன் மற்ற தலைகளையும் கிள்ளாமல் விட்ட தலையாட்டலினால் தான் இப்படி நேர்ந்திருக்கிறது.

(சகிகளும் தாதிகளும் தட்டுகளில் மாலைகளும் புஷ்பங்களும் கொண்டு வந்து வைக்கிறார்கள். அரசன் மாலைகளை எடுத்து இருவருக்கும் கொடுக்க மாலை மாற்றிக் கொள்ளுகிறார்கள். அரசன் இருவர் வலக் கரங்களையும் சேர்த்து வைக்கிறான். சகிகளும் தாதிகளும் புஷ்பம் தூவ, வாத்தியம் முழங்குகிறது. அரசி வாடிய முகத்துடன் நிற்கிறாள்.)

சு.—(இருவரையும் பணிந்து) தந்தையே, வைர வைடூரியங்கள் பதித்த இவ்வாபரணங்கள் எனக்கு என்ன பயன்? இனி நான் ரிஷி பத்தினியாகையால் மாவுரியும் மான் தோலும் போதும்.

(மான் தோலைக் கையிலெடுத்துக் கொண்டு ஆபரணங்களைக் கொடுக்கிறாள். அரசியும் அரசனும் கண்ணீர் விடுகிறார்கள்.)

சு.—அம்மா, அப்பா, எனக்காகக் கவலையுற வேண்டாம். அவனன்றி ஓரணுவுமசையாது. நாம் வருந்துவதால் என்ன பயன்?

(திரை வீழ்கிறது.)

இரண்டாம் அங்கம்.

மூன்றாங் காட்சி.

பாத்திரங்கள்—ச்யவனரை கையைப் பிடித்தழைத்துக் கொண்டு சுகன்யை வருகிறாள்.

இடம்—பர்ணசாலை.

சு.—பிரபுவே, இந்த ஆசனத்தில் உட்காரும். நான் கைகால்களை அலம்பி விடுகிறேன்.

(மணையின் மேல் உட்கார வைத்துக் கை கால்களைச் சுத்திசெய்து துடைக்கிறாள்.)

ச்ய.—அடாடா! ஐயோ! நடக்கும்பொழுது ஒரு கல் காலில் இடறிற்று. அந்த இடத்தை அழுத்திப் பிடித்து விட்டாயே. சீ, சீ, ஜடமே, மகிஷமே.

சு.—பிரபுவே, மன்னிக்கவேண்டும். தந்தகாஷ்டங்கள் இதோ கொண்டு வந்திருக்கிறேன். பல் துலக்கி, ஸ்நானஞ் செய்து ஜபம்செய்து கொள்ளுங்கள்.

ச்ய.—பூஜைக்கு வேண்டியதெல்லாம் சேகரித்தாயிற்று?

சு.—ஸ்வாமி புஷ்பங்கள்தான் கொண்டுவர வேண்டும். இதோ ஒரு நொடியிற் கொண்டு வருகிறேன்.

ச்ய.—புஷ்பங் கூடக் கொண்டு வாராமல் இவ்வளவு நேரம் என்ன செய்தாய்? சீக்கிரம் விபூதியும் தீர்த்தமும் எடுத்து வைத்து விட்டுப் போய் வா.

சு.—இதோ கொண்டு வருகிறேன்.

(விபூதியும் தீர்த்தமும் கொண்டுவந்து வைத்துவிட்டுக் குடலையை எடுத்துக்கொண்டு செல்கிறாள்.)

ச்ய.—ஆ, ஆ! இவள் பொறுமையே பொறுமை. எவ்வளவுதான் கடிந்தாலும் முகத்தைக் கடுத்துக் கொள்ளுகிறாளா. எவ்வளவு திட்டினாலும் சிரித்துக் கொண்டன்றோ என்ன வேண்டுமென்று கேட்கிறாள். இனி இவளைச் சோதிக்கக் கூடாது.

(திரை வீழ்கிறது.)

(தொடரும்.)

பர்வத குமாரி.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா)

(363-வது பக்கத் தொடர்ச்சி)

பதினோராம் அத்தியாயம்.

ஸ்திரீ ஹிருதயம்.

நிருபமை தினந்தோறும் ஸ்நானம் செய்துவிட்டுப் பிரதிமையின் வீட்டுக்கு வருவது போலவே இன்றைக்கும் வந்தாள். இந்த விசித்திரக் காட்சியைக் கண்டு அவள் மனோரமையைக் கேட்டாள்: "அக்கா, இன்றைக்கு என்ன விசேஷம்?" என்று. அதற்கு மனோரமை சிரித்துக்கொண்டே, "அடி பைத்தியக்காரி, நாளைக்கு உங்கள் பிரதிமை யக்காவுக்குக் கல்யாணமாண்டி" என்றாள்.

"நாளைக்குப் பிரதிமை யக்காவுக்குக் கல்யாணமா?" என்று சொல்லிக்கொண்டே அவள் சற்று நேரம் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தாள். பிறகு உடனே தன் வீட்டுக்கு ஓடிப்போய் அங்கே மிக உல்லாஸத்தோடு தன் தாயாரிடம் இந்த சுப சமாசாரத்தைச் சொன்னாள். அதைக் கேட்டதும் அவ்வம்மை எழுந்து கைக்குழந்தையை இடுப்பில் எடுத்துக் கொண்டு, நிருபமையையும் அவள் தங்கை அநுபமையையும் கூட அழைத்துக்கொண்டு பிரதிமையின் வீட்டுக்கு வந்து மிக்க ஆவலுடன்—"நாளைக்குப் பிரதிமைக்குக் கல்யாணமாமே!" என்று கேட்டாள். நிருபமை சொன்னது வாஸ்தவமே யென்று தெரிந்ததும், அவளுக்குண்டான ஆநந்தத்துக்கு அளவில்லை. இந்த சுப காரியத்தில் கூட வந்திருந்து சகாயம் செய்யும்படி செவிலித்தாய் கேட்டுக்கொண்டாள், அதற்கு மனோரமையின் தாயார் சொன்னாள்—"இந்தக் காரியத்துக்கு நீங்கள் சொல்லவும் வேண்டுமா? இது எங்கள் காரியம் தானே! நான் எங்கள் மணியையும் பிரதிமையையும் சமானமாகவே நினைக்கிறேன். நான் சற்றைக்கெல்லாம் வந்து எல்லாக் காரியங்களையும் செய்து வைக்கிறேன். கவலை வேண்டாம்." இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போதே அவள் கண்களில் நீர் ததும்பியது. தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தழுதழுத்த குரலில், "இப்போது பிரதிமையின் தாயாரும் தகப்பனாரும் ஜீவித்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்! இன்றைக்கு அவாளுக்கு எவ்வளவு ஆநந்தமாயிருக்கும்! ஐயோ! அவர்கள் உலகத்தை விட்டுப் போவதற்காவது அவ்வளவு காலமாயிற்று?" என்றாள்.

செவிலித்தாய்க்கும் மனோரமைக்குங் கூட அழுகையை நிறுத்த முடியவில்லை. செவிலித்தாய்க்கு ஏகாந்தமான ஓர் இடத்துக்குப்போய் ஒரு தரம் துக்கந் தீரக் குரலெடுத்து அழமாட்டோமா என்றிருந்தது. பிரதிமையின் கண்களிலிருந்தும் நீர் பெருகியது. தாய் தந்தைகளின் நினைவு உண்டாகவும், அவளுடைய மெல்லிய இருதயத்தில் பொறுக்க முடியாத வேதனை உண்டாகத் தலைப்பட்டது.

பிரதிமையின் நிலைமையைக் கண்டு மனோரமையின் தாயார் தன் துக்கத்தை அடக்கிக்கொண்டு பிரதிமையின் மோவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு,—"குழந்தாய், நீ ஏன் கண்ணீர் விடுகிறாய்? எல்லாருக்குமே

தாய் தகப்பனார் நெடுங் காலம் ஜீவித்திருக்கிறார்களா? நானே உனக்குத் தாயார். என் செல்லக் குழந்தாய், இனி மேல நீ அழாதே. பகவத் கிருபையாலே நாளைக்கு இரண்டு கைகளும் ஒன்றாய்ச் சேரவேண்டும். இந்த சுப காரியம நடந்து விட்டால், நாங்களெல்லோரும் சுகமாயும நிச்சிந்தையாயும் இருப்போம். நீ ராஜ ராணியாய் தீர்க்காயுஷ்மதியாய்ச் சுகமாயிரு" என்று ஆறுதல் கூறி ஆசீர்வாதம் பண்ணினாள். பிறகு மனோரமையைப் பிரதிபையினிடம் இருக்கும்படி சைகை பண்ணிவிட்டு அவ்வமமை அநுபமையையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போனாள்.

செவிலித்தாய் பிரதிபையினிடம் சொன்னாள்—"வா, அண்ணாவுக்குக் கொஞ்சம் சமையல் பண்ணிப்போடு. அவன சாப்பிட்டு விட்டு இப்போதே வெளியே போவான். நான் இனி மேல் எல்லாக் காரியங்களும் செய்தாகவேண்டும்."

பிரதிபை சமையலறைக்குப் போவதை நிருபமை பார்த்து, "இல்லை, இல்லை, பிரதிபையக்கா, இன்றைக்கு நான உன்னைச் சமையல் பண்ணவிட மாட்டேன். நானபோய் எனனாலானதைச் செய்கிறேன். பாட்டியம்மா, போகலாம வா, நானே வருகிறேன" என்று சொல்லிவிட்டு, மனோரமையை நோக்கி, "அக்கா, நீ பிரதிபை யக்காவிடம் உட்கார்ந்திரு" என்று கேட்டுக்கொண்டு, பிரதிபையினிடமிருந்து பதில் பெறுவதற்கு எதிர்பார்க்காமலே வேகமாய்க் கீழ இறங்கிப் போய்விட்டாள்.

பிரதிபை மனோரமையிடம், "வா மணி, கீழே போவோம். நிரு இன்னும் குழந்தைதானே. அவள் தனியே போய் என்ன பண்ணுவாள?" என்றாள்.

மனோரமை—"அவளாகவே செய்யக் கூடாதபடி எவ்வளவு பெரிய சமையல்! எல்லாம் அவளே செய்வாள். நீ இங்கேயே இரு" என்று சொல்லிப் பிரதிபையை நிறுத்தி விட்டாள்.

சற்று நேரம் கழித்து மனோரமை கூறினாள்: "சகி, நாளைக்கு உனக்குக் கல்யாணம். இவ்வளவு சீக்கிரத்தில் உனக்குக் கல்யாணம் நடக்குமென்று நான் கனவிலும் நினைத்ததில்லை! என் பிரிய சகி, நாளைக்கு நீ ராஜ ராணியாகப் போகிறாய். ஆனால் ராஜ ராணியான பிற்பாடும் எனக்கு நீ பிராண சகியாகவே இருப்பாயோ? சகி, வாஸ்தவத்தைச் சொல்லு. இன்றைக்கு உனக்கேன் சந்தோஷமாயில்லை?"

பிரதிபை சற்று நேரம் சும்மா இருந்தாள். பிறகு இவ்வாறு சொல்லலுற்றாள்: "சகி, இப்படிப்பட்ட சமயத்தில் யாருக்குத் தான் சந்தோஷமாயிராது? ஆனால், ஏனோ தெரியவில்லை, என் மனதில் எவ்வளவு சந்தோஷம் இருக்கவேண்டுமோ அவ்வளவு இல்லை. இது வரையில என் வாழ்க்கை எவ்விதமாய் நடந்து வந்ததோ, இனி அந்த விதத்தில் நடவாது. இனிமேல் வேறு விதமாய் வாழ் நாளை நான் கழிக்கவேண்டி வரும். அவரால் எனக்குச் சுகம் உண்டாகுமா அல்லது துக்கம் உண்டாகுமா என்பது எனக்குத் தெரியாத விஷயம். அந்தர்யாமியாகிய பகவான ஒருவருக்கே அது தெரியும். ஆனால் அதைப் பற்றி நான் விசாரப்படவில்லை. நான சுகம் துக்கம் இரண்டையும் சமானமாக பாவிக்கிறேன். "சுகத்திலும் துக்கமிருக்கிறது; துக்கத்திலும் சுகமிருக்கிறது," என்று சொல்லி யிருக்கிறார் குருமஹாராஜன். ஆகவே சுகம் எது, துக்கம் எது வென்று ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. சுகமோ துக்கமோ எது வந்தாலும் சமானமாக நினைத்துத் தலைவணங்கிப் பொறுத்துக்கொள்ளுவேன். இவ்விதமாக இந்த பாவனைப்படி என் சந்தோ

ஷத்தில் குறைவு கிடையாது.' ஆனால் என் தமையனை விட்டுவிட்டு நான் எப்படி யிருப்பேன் என்கிற ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரம் எனக்கு சதா சிந்தையா யிருக்கிறது. சகி, தாய் தகப்பனார் பரகதி யடைந்தது முதற்கொண்டு நான் என் தமையனை விட்டு வேறு யாரிடத்திலும் போயிருந்ததில்லை. தமையனென்றாலும் தமையனா, ஸாக்ஷாத் தேவதையென்றுசொல்லவேண்டும்! அவரிடத்திலிருந்து நான் எவ்வளவு உபதேசம் பெற்றிருக்கிறேனோ, எவ்வளவு ஞானம் அடைந்திருக்கிறேனோ இவ்வளவென்று எனக்கே தெரியாது. அவரை நான் ஒரு நாழிகை பாராதபோதிலும், என் உயிர் வருந்தும். என் தமையனிடம் நான் பட்டிருக்கும் நட்புக் கடனை எப்பொழுது எவ்வகையாகத் தீர்க்கப்போகிறேனோ தெரியாது. அவர் இயற்கையிலேயே எதிலும் பற்றில்லாத சந்நியாஸிபோல் இருக்கிறார். அண்ணா இது வரையில் எனக்காகவே சம்சாரத்தில் கட்டுண்டு கிடக்கிறார்; நான் புக்ககம் போவது தான் தாமதம், அவருடைய கட்டுகளெல்லாம் அறுப்புண்டுபோம். அப்பொழுது அண்ணா சம்சாரத்திலேயே இருப்பாரோ அல்லது எங்கேயாவது புறப்பட்டுப் போவாரோ தெரியாது. சகி, இக்காரணத்தினாலேயே அண்ணாவின் நிலைமையை நினைக்க நினைக்க எனக்கு அழுகை வருகிறது. எவ்வளவு இருக்கவேண்டுமோ, அவ்வளவு சந்தோஷம் உண்டாகாம லிருப்பதற்குக் காரணம் இதுவே. நான் என் தமையன் விஷயத்தைப்பற்றி வெகு நாளாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். நிருபமைக்கும் அண்ணாவுக்கும் கல்யாணம் நடப்பதைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தால் திருப்தியடைந்து அவர் விஷயத்தில் நிச்சிந்தையா யிருப்பேனென்று அன்றையதினம் நான் உன்னிடம் சொன்னேனே". இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே பிரதிபையின் கண்களிலிருந்து பலபலவென்று நீர் பெருகியது.

மனோரமை சொன்னாள்: "சகி, உன் கல்யாணம் ஆனவுடனே நான் உன் தமையனை இந்த விஷயத்தைப்பற்றிக் கேட்கப்போகிறேன். இந்த சம்பந்தம் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எல்லா விதங்களிலும் சம்மதமா யிருக்கிறது. 'பாபு இஷ்டப்பட்டால் இன்றைக்கே நிருவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க சித்தமா யிருக்கிறேன்' என்கிறார் அப்பா. நிருவுக்கும் உங்களெல்லார் பேரிலும் அதிக வாஞ்சை இருக்கிறதாகத் தெரிகிறது. அவள் இன்னமும் குழந்தைதானே; அவள் மனதில் என்ன இருக்கிறதோ அவளுக்குத்தான் தெரியும். ஆனால் உன்பேரிலும் உன தமையன் பேரிலும் அவளுக்கு நிரம்ப அன்பு இருக்கிறதென்று நமக்கெல்லாம் தெரிகிறது. எங்கள் வீட்டில் அவள் ஒரு நாழிகைகூடத் தங்குவதில்லை. எப்போது பார்த்தாலும் பிரதிபை யக்கா பைத்தியமே பிடித்தலைந்துகொண்டிருக்கிறாள். இன்றைக்குப் பார், தானே சமையல் பண்ணப் போயிருக்கிறாள். அவளுடைய மனம் பளிங்கு போன்றது. அதில் எங்கும் ஒரு களங்கமாவது இதுவரையில் உண்டானது கிடையாது. உங்கள் தமையன் எப்படியோ அப்படியே எங்கள் நிருபமையும். இருவரும் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர். முதலில ஈசுவர கிருபையால் உன் விவாகம் நடக்கட்டும். பிறகு தெய்வ யோகம் இருந்தால் இவர்களுக்கும் கல்யாணம நடக்கும். நீ கொஞ்சமும் சிந்திக்கவேண்டாம். வா, கீழே போவோம. நிரு என்ன பண்ணிக்கொண்டிருக்கிறாள் பார்ப்போம்."

உடனே இருவரும் சமைய லறைக்குப் போகக் கீழே இறங்கிப் போனார்கள்.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

ஒரு புதிய பிரஸ்தாபம்.

சுசீல குமாரனுக்கு மூச்சுவிடக்கூட ஒழியவில்லை. அவன் வித்தியா வாகீச மஹாசயரை வரவழைத்து, முகூர்த்தப் பத்திரிகை அனுப்பச் சேரவேண்டியவர்களின் ஜாபிதா ஒன்று தயார் செய்வித்தான். கல்யாண விருந்துக்காக விதம் விதமான வஸ்துக்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கல்கத்தாவிலுள்ள பத்துப் பன்னிரெண்டு பிரசித்திபெற்ற பண்டிதர் வீடுகளுக்கு ஸ்வயம்பாக ஸாமக்கிரியைகள் அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சாயங்காலம் வித்தியா வாகீச மஹாசயரோடு எல்லோர் வீடுகளுக்கும் போய் அழைத்துவிட்டு வருவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அவன் தனக்குற்ற நாலைந்து சிநேகிதர்களை வரவழைத்து வெவ்வேறு காரியங்களில் அமர்த்தி யிருக்கிறான். ஒருவன் வீட்டின் பெரிய கூடத்தைத் துப்புரவு செய்து ஜோடித்துக்கொண்டிருக்கிறான்; ஒருவன் முற்றத்தின்மேல் மிகப் பெரிய விதானங் கட்டி அதனடியிலே பலவகையான புஷ்பத் தொட்டிகளை வரிசையாய் வைத்துக்கொண்டிருக்கிறான்; ஒருவன் மேற்கூரையில் அஸ்மானகிரி தொங்கவிடுகிறான்; இன்னொருவன் குளோபு, வால ஷேட் முதலியவைகளை அங்கங்கே அமைக்கிறான். மாளிகை முழுதும் ஆனந்த கோலாகலத் தொனிகளால் நிறைந்து உற்சவக் காட்சியளிக்கின்றது.

உச்சி வேளைக்குப் பிரதிமைக்குப் பரிசயமாயிருந்த அக்கம்பக்கத்து ஸ்திரீகள் விவாக சமாசாரத்தைக் கேட்டு ஒன்றாய்க் கூடியிருந்தார்கள். பாலக பாலிகைகளின் கோலாகலத்திலும் ஸ்திரீகளின் பேச்சரவத்திலும் பிரதிமையின் அறை சப்த மயமாய் விளங்கியது. எல்லோரும் பிரதிமையின் மங்களத்தை விரும்பினவர்களாய், எல்லோரும் அவளுக்கு வரவிருக்கும் சுகவாழ்வை நினைந்து மகிழ்ச்சி பாராட்டினார்கள்.

சுசீலகுமாரன் சகல ஸந்நாஹங்களும் செய்துகொண்டு வித்தியா வாகீசரையுங்கூட அழைத்துக்கொண்டு, தன் பந்து மித்திரர்களையும் பண்டித மஹாசயர்களையும் அழைத்துவிட்டு வரும்பொருட்டு வீட்டிலிருந்து புறப்பட்டான். எல்லோரும் ஆனந்தத்தோடும் ஆதரத்தோடும் அவ் வழைப்பை ஏற்றுக்கொண்டனர். சாயங்காலம் அவன் வித்தியாவாகீச மஹாசயருடன் வீட்டுக்குத் திரும்பிவந்தான். இதற்குள் அவனுடைய சிநேகிதர்கள் வீடு முழுவதையும் மிக நன்றாய்ப் பரிஷ்கரித்து ஜோடித்து வைத்திருந்தார்கள். அதைக் கண்டு களிப்படைந்த சுசீலன் அவர்களைப் பெரிதும் கொண்டாடினான்.

வித்தியாவாகீச மஹாசயருடன் பல விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டி யிருந்ததால், சுசீலகுமாரன் அவரைக் கூட்டிக்கொண்டு மாடியறைக்குச் சென்றான். அங்கே இருவருக்கும் சம்பாஷணை நடந்துகொண்டிருக்கையில் கீழேயிருந்து நரேசன் பேச்சுக்குரல் வந்தது. சுசீலன் பரபரப்புடன் அறைக்கு வெளியே வந்து "யாரங்கே, நரேசா! வா அப்பா, மேலே வா" என்றான்.

நரேசன்: "நான் மாத்திரம் இல்லை; ஸ்மிருதி ரத்ந மஹாசயரும் என்னுடன்கூட இருக்கிறார்."

சுசீலன்: "ஸ்மிருதி ரத்ந மஹாசயாளா! அப்படியானால் அவாளையுங்கூட அழைத்துக்கொண்டுவா. அவர் இன்று அடியேன் குடிசையைத் தம் பாததூளியால் பாவனம் செய்தது என் பாக்கியமே."

அப்பொழுதே அவ்விருவரும் மேலே வந்தார்கள். நரேசன் சொன்னான்: "காலமே இவாளுடன் உன்னைப் பரிசயம் பண்ணி வைக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இவாள் தான் ஸ்ரீயுக்த மஹேச சந்திர ஸ்மிருதி ரத்ந மஹாசயாள். இவாளைக் குறித்தே நான் உனக்கெழுதியிருந்தேன் என் கடிதத்தில்."

சுசீலன் அவரை நமஸ்கரித்து "ஸ்மிருதி ரத்ந மஹாசயரே, தாங்கள் செய்த உபகாரத்துக்குப் பிரதியுபகாரம் நான் எவ்விதம் செய்யக்கூடும்? தங்கள் உபகாரம் மிகப் பெரிதாயிற்றே!" என்று நன்றி கூறினான்.

ஸ்மிருதிரத்ந மஹாசயர்: "அப்பா, உம்மை எனக்குச் சிறு பிராயம் முதல் தெரியும். உம்முடைய பிதா எனக்குப் பரம மித்திராயிருந்தவர். ஆகையால் உமது க்ஷேமத்தின் பொருட்டு ஏதோ சொற்பமாய் நான் செய்தது என் கடமை யென்று எண்ணியே யன்றி வேறில்லை. அதற்காக நீர் நன்றி பாராட்டவேண்டிய அவசியமில்லை. இன்று உம்மைப் பார்த்ததே எனக்குப் பரம சந்தோஷம். உமக்கு ஸமஸ்த மங்களங்களும் உண்டாகும்படி ஸர்வேசுவரன் அநுக்ரஹிக்க வேண்டுமென்பதே என் பிரார்த்தனை."

சுசீலன்: "தங்களுடைய ஆசீர்வாதமே எங்களுக்குப் பரம பாக்கியம்."

சற்று நேரங்கழித்து ஸ்மிருதிரத்நம் கூறினார்: "சுசீலரே, ஸ்ரீமத் ஆத்மாநந்த ஸ்வாமிகளுடன் உமக்கு எப்படிப் பரிசயம் உண்டாயிற்று?"

சுசீலன் ஆச்சரியத்துடன் ஸ்மிருதிரத்நத்தின் முகத்தை நோக்கிச் சற்று நேரம் கழித்து, "ஸ்ரீமத் ஆத்மாநந்த ஸ்வாமிகள் யார்? அவரை எனக்குத் தெரியாதே" என்றான்.

ஸ்மிருதிரத்ந மஹாசயர் வியப்புற்றுக் கூறினார்—"அவரை உமக்குத் தெரியாதா? ஆனால் அவர் உம்மையும் உம் தங்கை பிரதிமையையும் நன்றாய் அறிந்திருக்கிறாரே!"

சுசீலன் வியப்போடும் ஆநந்தத்தோடும் பேசலுற்றான்: "எந்த ஆத்மாநந்த ஸ்வாமிகள்? ஒரு வேளை எங்கள் குருமஹாராஜாவோ? அவர் பெயர் தான் ஸ்ரீமத் ஆத்மாநந்த ஸ்வாமிகளாக்கும். எனக்கு அவர் பெயர் தெரியாது. அவர் பெயரைக் கேட்கும்படியான சாகசமும் எனக்கு ஒருபோதும் உண்டானதில்லை. அப்பா. அவர் தான் ஆத்மாநந்த ஸ்வாமிகளோ?" இப்படிப் பேசிவிட்டுச் சுசீலன் சற்று நேரம் சும்மா இருந்தான். பிறகு சொன்னான்: "அவரை நான் முதல் முதல் குமாரீ பர்வதத்தில் பார்த்தேன்."

ஸ்மிருதிரத்ந மஹாசயர் ஆநந்தத்துடன் சொன்னார்: "ரொம்ப சரி, அவரும் என்னிடம் இந்த மலையைப் பற்றிச் சொன்னார். சுசீலரே, அவரே என்னுடைய குருதேவரென்பது ஒரு வேளை உமக்குத் தெரியாதிருக்கலாம். இந்த விஷயத்தில் அவர் எனக்கு எவ்வளவு உதவி செய்திருக்கிறாரென்பதும் ஒரு வேளை உமக்குத் தெரியாதிருக்கலாம். அவருடைய கிருபை இல்லாவிட்டால், இன்று நாம் இந்தக் காரியத்தில் கொஞ்சமும் சித்தியடைந்திருக்கமாட்டோம். அவர் ஈடும் எடுப்பு மற்ற ஒரு மஹாத்மா. அப்படிப்பட்டவருடைய பரிசயம் உமக்கு உண்டாயிருப்பது உம்முடைய விசேஷ சௌபாக்கிய மென்றே எண்ணவேண்டும்."

சுசீலனுடைய இருதயம் வியப்பினாலும் ஆநந்தத்தினாலும் நன்றியறிவினாலும் பூரித்தது. குருமஹாராஜனது திவ்யவடிவம் நினைவுக்கு வரவும், அவனுக்கு ரோமாஞ்சம் உண்டாயிற்று. அவன், "அவருடைய தரி

சனம் கிடைப்பது எனக்குப் பரம சௌபாக்கியமென்பதிற் சந்தேகமில்லை. அவர் எனக்கு இந்த ஆபத்தான சமயத்திலும் முந்தின நாள் இங்கே வந்து தரிசனம் தந்தார்" என்றான்.

ஸ்மிருதிரத்ந மஹாசயர் வியப்புற்றவராய், "குருதேவர் நேற்று இங்கே வந்திருந்தாரோ? அவசியம் வந்திருப்பார். இதனால் அவரும் தன்னியரானார், அவருடைய காரியமும் தன்னியமாயிற்று" என்றார்.

சற்று நேரம் எல்லாரும் சும்மா இருந்தார்கள். பிற்பாடு ஸ்மிருதிரத்ந மஹாசயர் வித்தியாவாகீச மஹாசயரை நோக்கி, "தங்கள் பரிசயத்தை அபேக்ஷிக்கிறேன்; தாங்கள் யார்?" என்று கேட்டார்.

சுசீலன் கூறினான்—"இவாளுடைய பெயர் ஸ்ரீயுக்த ராமசந்திர வித்தியாவாகீசர். இவாள் தான் எங்கள் அகத்துப்புரோஹிதர்."

ஸ்மிருதிரத்ந மஹாசயர்—"அப்படியானால் இவர் இங்கே இருப்பதில் ஆக்ஷேபம் ஒன்றுமில்லை; ஒருவிதத்தில் இந்த சமயம் இவர் இருப்பது அவசியமுமாகும்" என்று சொல்லி, சுசீலகுமாரனை நோக்கி, "சுசீலரே, நாளைக்குப் பிரதிமையின் கல்யாணம் நிர்விக்கினமாய் நடக்கப்போகிறது. இவ்விஷயத்தில் நீர் நிச்சிந்தையாய் இருக்கலாம். இப்பொழுது எனக்கு உம்மிடம் ஒரு வேண்டுகோள் உண்டு. நான் உமது சமுகத்தில் ஒரு புதிய பிரஸ்தாபம் கொண்டுவரப் போகிறேன். அதை நீர் ஏற்றுக்கொள்ள இசைந்தால், சொல்லுகிறேன்" என்றார்.

சுசீலன் வியப்புற்று விளம்பலானான்: "என் முன்னிலையில் தங்களுடைய பிரஸ்தாபமென்ன, வேண்டுகோளென்ன? என்னால் கூடியமட்டில் நான் அதை அவசியம் ஏற்றுக்கொள்வேன். தாங்கள் ஸங்கோசத்தை விட்டுச் சொல்லலாம்."

அப்பொழுது ஸ்மிருதிரத்ந மஹாசயர் இவ்வாறு கூறலுற்றார்: "சுசீலரே, இப்பொழுது உம்முடைய தாய் தகப்பனார் இல்லை. உம்முடைய தகப்பனார் எனக்குப் பரம மித்திரராயிருந்தார். ஆகையால் நான் இப்பொழுது உமக்குத் தகப்பனாரின் ஸ்தானத்தில் இருக்கிறேன். குருமஹாராஜனிடம் எனக்குள்ள சம்பந்தத்தால் நான் உமக்குத் தமையன் ஸ்தானத்திலும் இருக்கிறேன். என் வார்த்தைகளை நீர் அவசியம் ஏற்றுக்கொள்ளவேண்டும். நாளைக்கு உம் தங்கைக்கு விவாகம் நடக்கும். அதன் பிறகு நாளைக்கு மறு நாள் உமக்கும் விவாகம் செய்துவிட வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. நாங்கள் உமக்காக ஒரு நல்ல பெண்ணைத் தேடி வைத்திருக்கிறோம். உம்முடைய ஸம்மதி கிடைத்தவுடனே உம்முடைய விவாகத்துக்குரிய ஆயத்தங்களைச் செய்வோம்."

சுசீலன் சற்று நேரம்வரை அசைவற்றிருந்து விட்டுச் சொல்லலுற்றான்:—"பாருங்கள், தங்கள் ஆஞ்ஞையை உல்லங்கனம் செய்ய என்னால் ஆகாது; ஆனால் இந்தப் பிரஸ்தாபம் திடீரென்றும் அகாலத்திலும் கொண்டுவரப்பட்டதென்பதை நான் அழுத்திச் சொல்ல வேண்டும். நான் இதுவரையில் என் விவாகத்தைப் பற்றி திடமான யோசனை ஒன்றும் செய்ததில்லை. விவாகத்தைக் குறித்து எனக்கு எவ்வகை விரோதமும் இல்லை. உலகத்தில் இருக்க விரும்புகிறவன் விவாகம் செய்துகொள்ளவே வேண்டும். ஆனால் என்னைப் போன்ற மூன்று நாலு பேர் விவாகம்செய்து கொள்ளாவிட்டால் உலகத்துக்கு யாதொரு ஹானியும் உண்டாய்விடாதென்ற எண்ணமும் எனக்குண்டு. நான் பால்ய விவாகத்துக்கு விரோதி. என் தகப்பனாரும் இந்த வழக்கத்துக்கு விரோதியென்பது ஏற்கனவே தங்களுக்குத் தெரியும். பால்ய விவாகத்தினால் நம் தேசத்

துக்கும் சமூகத்துக்கும் பெரிய அபகாரம் உண்டாயிருக்கிறதென்பது என் நம்பிக்கை. இவ்விஷயத்தில் குரு மஹா ராஜனுடன் சம்பாஷித்ததில், அவர் கூடப் பால்ய விவாகத்துக்கு விரோதியாயிருப்பதாகத் தெரிந்துகொண்டேன். பாரத வர்ஷத்துக்கு இப்பொழுது வேண்டியது பிரமசரியமே. அவர் சொல்வதாவது: "பாலக பாலிகைகளும் யுவ யுவதிகளும் நர நாரியரும் ஆகிய எல்லோரும் பிரமசரியம் அநுஷ்டிக்க வேண்டியது அவசியம். பிரமசரியத்தின் சுபாவத்தினாலேயே பாரத நாட்டுக்கு இந்த துர்க்கதி விளைந்திருக்கிறது." குருதேவனுடைய கிருபையினாலும் தங்களைப் போன்றவர்களுடைய ஆசீர்வாதத்தாலும் நான் இதுவரையில் மனமொழி மெய்களால் பிரமசரியத்தில் நிலைபெற்றிருக்கிறேன். நான் விவாகம் செய்துகொள்ள ஆட்சேபமில்லை; ஆனால் பாலிகா விவாகத்துக்குச் சம்மதிக்கமாட்டேன். பிரமசரிய ஒழுக்கமுள்ள பேரிளம் பெண் எவளாவது என்னை மணக்க விரும்பி, அவளுடைய குணங்களால் என் மனம் ஆகர்ஷிக்கப்படுவதாயிருந்தால், நான் அவளை மணப்பேன். இல்லாவிட்டால் இந்த ஜன்மத்தில் விவாகம் செய்துகொள்ளப் போவதில்லை; இது நிச்சயம்."

சுசீலகுமாரன் கூறியதைக் கேட்டு ஸ்மிருதிரத்ந மஹாசயர் புன்னகை புரிந்து பேசலுற்றார்: "சுசீலரே, நீர் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஆதர்சம் சரியானதே. பிராசீன காலத்து ஆரியர் இந்த ஆதர்சத்தையே அநுசரித்து வந்தார்கள்; ஆனால் இக்காலத்தில் இந்த உயர்ந்த ஆதர்சம் குன்றிப்போய்விட்டபடியால், உன் விருப்பப்படியான பெண்கள் கிடைப்பது துர்லபமாய்விட்டது. இங்கேயே பார்க்கலாமே! உம்முடைய தங்கை எவ்விதமான ஆதர்ச கன்னிகையாயிருக்கிறாளோ பூபேந்திரநாதனும் அவ்விதமான ஆதர்சவரனென்று சொல்ல முடியுமா? ஒருநாளுமில்லை. மனக்கண்ணின் முன்னே உயர்ந்த ஆதர்சத்தை வைத்துக்கொண்டால் பால்ய விவாகமும் கெடுதியல்லவென்றே சொல்லலாம். பிரமசரியம் எங்கே இல்லையோ அங்கே எல்லா தோஷங்களும் இருக்கும். ஆனால் வரனும் கன்னிகையும் பிரமசரிய நெறியில் உறுதியுடன் நிலைபெற்றிருந்தால் பால்ய விவாகத்தினால் யாதொரு கெடுதியும் உண்டாகமாட்டாது. எவ்விதமாயினும் இன்றைக்கு உம்முடைய மனோபாவத்தை அறிந்து நான் மிகவும் ஆனந்தமடைந்தேன். நான் உமக்காகத் தேடி வைத்திருக்கும் பெண் முற்றிலும் பாலிகையுமல்ல. நீர் உம் வரையில் பிரமசரியத்தை விடாதிருந்தால், அவளையும் நீர் பிரமசரியத்தில் உறுதியாய் நிறுத்த முடியும். நீர் அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறீர். அவளுடைய சுபாவம், சீலம், குணநிசயம் இவற்றின் அநுபவமும் உமக்கு உண்டாயிருக்கிறது. பக்கத்து வீட்டிலிருக்கும் கிருஷ்ண தயாளு முகோபாத்தியாயரின் மகளும் உமது மித்திரன் நரேசபாபுவின் மைத்துனியுமாகிய நிருபமையே, அந்தப் பெண்!"

சுசீலன் சற்றுத் திகைத்தவன்போல் நரேசன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கையில், அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. உடனே சொன்னான்: "நிருபமையா? தாங்கள் நிருபமையையா எனக்கு நிச்சயித்திருக்கிறீர்கள்? அவளை எனக்கு நன்றாய்த் தெரியும். நிருபமையைப்போன்ற கன்னிகையைக் கலியாணம் பண்ணிக்கொள்ள எனக்கு ஒரு ஆட்சேபமும் இல்லை."

சுசீலன் சொன்னதைக் கேட்டு யாவரும் திருப்தியடைந்தார்கள். இதுவரையில் பேசா

மல் உட்கார்ந்திருந்த நரேசபாபு திடீரென்று பேசலுற்று "எல்லாம் சரிதான்; இந்தக் கலியாணத்தைக் கூட்டி வைத்ததற்காக எனக்கு என்ன தட்சிணை கிடைக்கும், சொல்லு" என்றான்.

சுசீலன் சிரித்துக்கொண்டே கேட்டான்: "தட்சிணை உனக்கா, ஸ்மிருதி ரத்ந மஹாசயருக்கா?"

நரேசன் பதிலுரைக்கான்: "ஸ்மிருதி ரத்ந மஹாசயருக்குத் தனியே, எனக்குத் தனியே."

(தொடரும்.)

ராணி சாந்த்பீபி அல்லது தேச சரித்திரத்தை யனுசரித்த ஒரு நவீனக் கதை.

(ஸ்ரீமதி சீதம்மாள்)

(348-ம் பக்கத் தொடர்ச்சி)

IV

அந்தப் புதிய மனிதனுக்கு இராணியின் உத்தரவின்படி அங்கருக்குள் இருப்பதற்குச் சகல சௌகரியங்களும் செய்யப்பட்டன. ஒவ்வொரு நாளும் அரசியினுடைய சபையிலும், தனிமையிலும் பேசவும் அனுமதி யளிக்கப்பட்டது.

அவன் அரசியோடு பேசும்பொழுதெல்லாம் அவளைப்பற்றியும், அவளுடைய ஆளுகையைப் பற்றியும் மாத்திரம் பேசுவான்.

சாந்த்பீபி, அவனுக்குத் தனது ஐசுவரியம், செல்வாக்கு முதலிய யாவற்றையும் காண்பித்தாள்.

இவன் பேசுவதையெல்லாம் கவனித்து அரசியானவள்:—"என்ன! எப்பொழுதும் என்னைப்பற்றியே பேசுகிறாயே; உன்னைப்பற்றி ஏதாகிலும் பேசு" என்பாள்.

அதற்கவன்:—"நான் எனதரசன் பக்கத்தி லில்லாதபொழுது எனக்கு ஒன்றுமேயில்லை. என்னைப்பற்றிச் சொல்லிக்கொள்ளுவதற்கும் ஒன்றுமில்லை" என்பான்.

இவைகளையெல்லாம் பார்த்த சாந்த்பீபிக்கு அவனைப்பற்றி மிகுந்த சந்தேகம் ஏற்பட்டு விட்டது. மிகவும் ஆச்சரியத்துடன் மனதிற்குள் 'இவன் யாராயிருக்கலாம்? எதற்காக வந்திருக்கலாம்?' என்று யோசிக்கலானாள்.

இன்னொரு விஷயம். இச்சமயமெல்லாம், அரசனுடைய சைனியங்கள், கோட்டையைத் தாக்குவது முதலிய யாதொரு யத்தனமுமில்லாமல் சோம்பேறிகளாய்க் கூடாரத்திலேயே உண்பதும் உறங்குவதும் தவிர, வேறு ஒன்றும் செய்யாமலிருந்தார்கள்.

அந்தப் புதிய மனிதனுக்குத் தலைவனை கொடுத்த மூன்றாம் நாள் அரசியானவள் அவனைப் பார்த்து "உனது யஜமானனான அரசன் தனது பெரிய தேசத்தை விட்டுவிட்டு, மிகச் சிறியதும் எளியதுமான எனதிராஜ்யத்தை ஏன் எதிர்க்கிறார்? அதன் விவரத்தைச் சொல்லு" என்றாள்.

"எனதரசனுடைய எண்ணம் என்னவென்றால்: எங்கும் சாந்தமும், சமாதானமும் பிரஜைகளினுடைய ஒற்றுமையும் இருக்கவேண்டுமென்பதுதான். இந்த மூன்று வருடத்தில் எல்லா தேசங்களையும் அப்படியே செய்துவிட்டார். ஆனால் ஒரு பெரிய சிநேகிதக் கூட்டத்தில் ஒரு சத்துரு இருப்பதுபோலவும் எல்லாரும் பணிவாயிருக்கும்பொழுது நடுவில் ஒரு முரடன் இருப்பதுபோலவும் இந்த ஒரு தேசம்தான் பாக்கி இருக்கிறது.

சாந்த்பீபி புருவத்தை நெறித்துக்கொண்டாள். அவன் மௌனமா யிருப்பதைப் பார்த்துச் சிறிது நேரங் கழித்து அவள் உரைக்கலானாள்: "அரசனால் அனுப்பப்பட்ட தூதர்கள் ஒருவரும் இவ்வார்த்தைகளைச் சொல்லவில்லையே, சொல்லியிருந்தால் அதற்கு நான் இணங்கி யிருப்பேனே; எனக்கு வந்த சமாசாரம் என்னவெனில் 'உடனே வந்து கீழ்ப்படியும்படி அரசனுடைய உத்திரவு' என்று சொன்னார்கள்" என்றாள், இத்துடன் அன்றையப் பேச்சு முடிந்தது.

அடுத்த நாள் இராணியானவள் அவனை வரும்படி கூப்பிட்டுக் கேட்கலுற்றாள்:—"உன்னுடைய அரசனுக்கு நான் எனது தேசத்தைக் கொடுத்துக் கீழ்ப்படிந்துவிட்டால் இங்கருக் காசியாக விருந்த நான் என்னமாகப் போகிறது?" என்றாள்.

உடனே வாலிபன்:—"அதற்கென்ன. அச்சபையில் உன்னத ஸ்தானத்திலும் அவருடைய அன்பிற்குப் பாத்திரையாயும் இருப்பீர்கள்" என்றான்.

"நான் அரசனுடைய அன்பை வஞ்சித்து அடைவதற்குப் பிரயத்தனப்படவில்லையே" என்று புருவத்தை நெறித்துக்கொண்டு பதிலுரைத்தாள்.

"அம்மா, அது எப்படி முடியுமென்பதைத் தாங்களறியவில்லை" என்று மெதுவாகச் சொன்னான்.

ஐந்தாம் நாள் மறுபடியும் அவ்வாலிபனைக் கூப்பிட்டுத் தனிமையில் அவனோடு பேசலுற்றாள்.

"இந்த இராஜ்யம் என் தகப்பனார்காலத்தில் இருந்ததுபோல அவ்வளவு அமைதியாக இப்பொழுது இல்லை. இத்தேசத்தை உனதரசனிடம் கொடுத்துவிட்டால் அமைதி ஏற்பட்டுவிடுமா? அப்பொழுது உனதரசர் என்ன செய்வார்?"

"அவர் பட்டணத்தையெல்லாம் சீர்திருத்திப் பகைவர்களையெல்லாம் அடக்கி, பிரஜைகளுக்கு எல்லாவித நன்மைகளையும் செய்வார்" என்றான்.

"அவர் உனக்கும் மிகுந்த சன்மானம் செய்வாரல்லவா?" என்றாள் அரசி.

"நான் இந்த விடுகதையின் அர்த்தத்தைச் சொன்ன நிமிஷமே அரசனுடைய எல்லாவித கௌரவத்தையும் என்னுடையதல்லவா?" என்றான் வாலிபன்.

"இன்னும் அதை விடுவிக்கவில்லையா?" என்றாள் அரசி.

"ஓ, அதைத் தங்களுடைய கண்களிலிருந்தே தெரிந்துகொள்ளப் பார்க்கிறேன்" என்று தைரியமாய் மறுமொழி பகர்ந்தான்.

உடனே சாந்த்பீபி, எங்கே தன் கண்களிலிருந்து தெரிந்துகொள்ளப் போகிறானோவென்று தன் பார்வையை வேறு பக்கமாகச் செலுத்தினாள். அன்று அத்துடன் முடிந்தது.

ஏழாம் நாள் மாலையில் சாந்த்பீபி தனது பிரபுக்கள், ஸ்திரீகள் ஒருவருக்கும் தெரியாமல் அவ்வாலிபனை வரும்படி ஒரு ஆளனுப்பித்தாள்.

தனிமையில் அவள் ஒரு பெரிய மண்டபத்தில் உட்கார்ந்திருந்தாள். தீபங்களெல்லாம் மங்கலாயிருந்தன. அந்த மங்கலான வெளிச்சத்திலும், அவளது அழகிய பூர்ணச் சந்திரன் போன்ற முகமும், அவளுடைய வெண்மையான உடுப்பும் பளீரென்று காந்தி வீசின,

அவள் ஏதோ சிந்தனையிலாழ்ந்தவளாய் உட்கார்ந்திருந்தாள். அச்சமயத்தில் அவளது முன்னிலையில் அவ்வாலிபன் வந்து நின்றான்.

அவனைப் பார்த்ததும் அரசி சொல்லுற்றாள்: "நாளை சூரியோதயத்தில் உன்னை நீ ஏற்றுக்கொண்ட நிபந்தனையின்படி உனதரசன் முன்னிலையில் என்னாட்கள் கொண்டுபோய் விட்டுவிடுவார்கள். உனதரசன் கோபத்திலிருந்து தயவை சம்பாதிப்பதற்கு நீ என்ன வெகுமதி கொண்டுபோகப்போகிறாய்?" என்றாள்.

"இந்தக் கோட்டையினுடைய சாவியைக் கொண்டுபோகாவிட்டால் என்னிடம் ஒன்றுமேயில்லை" என்றான்.

வெகுநாழிகை இருவரும் மௌனமாயிருந்தார்கள். அந்தப் பெரிய அறை மிகுந்த நிச்சப்தமாயிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வாலிபன் அரசியின் பக்கத்தில் அந்த நாற்காலியினுடைய கைப்பக்கத்தில் வந்து நின்றுகொண்டு "அம்மா, வந்தனம், போய்வருகிறேன்" என்றான்.

சாந்த்பீபி அவனைப் பார்த்த வண்ணமே தாழ்ந்த குரலில் 'சரி, வந்தனம்' என்று சொன்னாள்.

உடனே வாலிபன் "ஆனால் நாம் திரும்பவும் சந்திக்கவேண்டும்" என்றான்.

அதற்கு அரசி அவனைப் பார்ப்பதற்கு முடியாமல் கண்கள் வெகு சிரமப்பட்டும், பேசவதற்கு முடியாமல் தொண்டை அடைத்துக்கொண்டும் 'எப்பொழுது?' என்று கேட்டாள்.

அதற்கு வாலிபன் "இன்னும் ஒரே நாளைக்குள், கோட்டைக்கு வெளியில்" என்றான்.

"கோட்டைக்கு வெளியிலா?" என்றாள் அரசி.

"ஆம்" என்று அவள் முன்னிலையில் மண்டி போட்டு வணங்கி அவளுடைய கையை முத்தமிட்டான். பிறகு மெதுவாக "தேசத்தினுடைய கோட்டையானது அதன் யஜமானியினுடைய ஹிருதயம்" என்று சொன்னான்.

அவன் இதைச் சொன்னவுடனே அவள் சட்டென எழுந்திருந்தாள். உடனே, அவன் அவளை உட்காரும்படி கையமர்த்திவிட்டு அவளைக் கூர்ந்து நோக்கினான். இருவர் பார்வையும் ஒன்றாயிற்று.

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில'

என நாயனார் கூறியதுபோலாயிற்று; சாந்த்பீபியோ அசைவற்று அவன் போன பக்கமே பார்த்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் ஸ்தம்பித்துப் போனாள். பிறகு அவள் தனக்குத்தானே "என் யஜமானன் இன்னானென்பதை என்னுடைய ஹிருதயம் அறியும். இவ்விடம் வந்திருந்த வாலிபன் மனதரசனாய்த்தானிருக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டாள்.

V

அடுத்தநாட் பிற்பகலில் சில ராஜாங்க விஷயமாகத் தன் தேசத்திற்குப் போயிருந்த அரசனான ஆலி ஆதில்ஷா திரும்பிவந்தான்.

தன்னுடைய சைனியங்களையெல்லாம் அணிவகுத்து நிற்கும்படி ஆக்ஞாபித்தான்.

பிறகு அவர்களைத் தன்னுடன் வரும்படி சொல்லி அத்தேசத்தினுடைய கோட்டைக்குப் பக்கமாகக் கிழக்கோட்டை வாயிலை நோக்கிச் சென்றான்.

முகமத் ஆலியானவர் தான் சொன்னதிலிருந்து உண்டான நல்லதைப் பார்ப்பதற்காக அங்கு வந்தார். அவரை சேனாதிபதி பார்த்து

"ஐயா நாங்கள் மறுபடியும் கோட்டையை எதிர்க்கப்போகிறோம்" என்றான்.

முகமத் ஆலி, "இல்லை, அரசன் கோட்டையைத் தூக்கிக்கொண்டு வருவதற்குப் போகிறானென்று நினைக்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

சேனாதிபதி, அங்கிருந்த சேனாவீரர்கள் அனைவரும் அப்பெரியவர் அரசனுடைய காரியத்தைப் பரிகாசம் செய்வதாக நினைத்துக் கூடச் சிரித்தார்கள்.

இது நிற்க. மணி நான்கடித்ததும், அரசனானவன் நல்ல உயர்ந்த உடுப்புகளை யணிந்து, மிகுந்த கம்பீரமும், உயரமும், பலமுமுடைய கருப்புக் குதிரைமேல் ஏறிக்கொண்டு சைனியங்களையெல்லாம் அக்கோட்டை வாசலுக்கு 200 கஜ தூரத்திலேயே வரிசையாக நிறுத்திவிட்டு, தான்மாத்திரம் சில மெய்க்காப்பாளர்களோடு கோட்டை வாசலை நோக்கிச் சென்றான். அக்கோட்டை வாசலின்மேல் இராணி சாந்த்பீபியினுடைய ஆட்கள் கவசமணிந்தவர்களாய், கற்கள், இரும்புகள், குண்டுகள் முதலிய ஆயுதங்களைக் கைகளிற் தயாராக வைத்துக்கொண்டு கோட்டையைத் தாக்குபவர்கள்மீது எறிய சன்னத்தராயிருந்தார்கள். ஆலி ஆதில்ஷாவானவன், சில தூதுவர்களை முன்னால் "எங்களரசன் உங்களரசியோடு ஏதோ பேசவதற்கு வருகிறான், 'சண்டைக் கல்ல" என்று கத்திக்கொண்டு போகச் சொன்னான். இச்செய்தி நகருக்குள் எங்கிலும் பரவிற்று. அரசன் சிறிதும் அசையாமல் மிகவும் சாந்தமாய்த் தன்னுடைய கருப்புக் குதிரைமேல் அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்தான்.

இந்நிலைமையில் அரைமணிநேரம் சென்றது. பிறகு கோட்டைக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. சாந்த்பீபியானவள் தன்னுடைய பிரபுக்களும் ஸ்திரீகளும் புடைசூழ, தகதகவென்று ஜ்வலிக்கிற சிகப்பு உடைகளை யணிந்தவளாய், வெண்ணிறமான மட்டக் குதிரைமீது ஏறிக்கொண்டு வந்தாள்.

இவற்றையெல்லாம் பார்த்த சேனாதிபதி "இன்று ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது" என்று மிகுந்த பயத்தோடு சொன்னான்.

உடனே முகமத் ஆலி, "ஒன்றுமில்லை, பயமெல்லாவற்றையும் கூடிய சீக்கிரத்தில் கடந்துவிடுவீர்கள்" என்றார்.

அரசன் சாந்த்பீபியைக் கண்டதும் தன் குதிரையினுடைய விலாவில் காலால் மெதுவாக ஒரு உதை உதைத்தான். குதிரை இராணியிருக்குமிடம் நோக்கிப் புறப்பட்டது.

அவனைக் கண்டதும் சாந்த்பீபியினுடைய கண்களில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. என்றாலும் ஆச்சரியத்தைக் கிஞ்சிற்றும் வெளிக் காட்டிக்கொள்ளவில்லை. கூட வந்த பிரபுக்கள், ஸ்திரீகள் அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

எல்லோரும் திகைத்திருக்கும் பொழுது ஆலி ஆதில்ஷா சாந்த்பீபிக்கு மரியாதையாக வந்தனம் பண்ணினான்.

சாந்த்பீபி பதில் வந்தனம் செய்துவிட்டு, 'அரசனே என்ன விசேஷம்?' என்று கேட்டாள். உடனே அவன் கீழே குனிந்து தன் கைகளை அவளுடைய இடுப்பில் கொடுத்து அந்த மட்டக் குதிரையிலிருந்து அவளைத் தூக்கித் தன் குதிரையின்மேல் தனக்கு முன்பாக வைத்துக்கொண்டான். உடனே மைதானத்திலிருந்த சைனியங்களிலிருந்தும், கோட்டைமீது இருக்கிற வீரர்கள் இருந்த இடத்திலிருந்தும் ஒரு பெரிய கூச்சல் உண்டாயிற்று.

அரசன் "நான் கோட்டையைத் தூக்கியாய் விட்டது; இனி மதிற் சுவற்றைக் கடக்கவேண்

'டும்" என்ருன். ஒரு பெரிய சந்தோஷ ஆரவாரத்துடன் அவர்கள் தேசத்திற்குள் சவாரி செய்துகொண்டு போனுர்கள்.

VI

இந்தக் கதை மிகவும் சிறியதாயிருந்தாலும் இதிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய நீதிகள் பலவுள.

அரசர்களுக்கும், பிரபுக்களுக்கும் :—ஒருவரையொருவர் அறிவதற்கு இஷ்டப்பட்டால் அவரவர்கள் மனதிலுள்ளதை உள்ளொன்றும் உதட்டிலொன்றும் இல்லாமல் வெளிப்படையாகச் சொல்லவேண்டும்.

குழந்தைகளுக்கு :—அவர்களுடைய மூதாதைகள் ஐம்பது வருஷங்களாக எதை அனுசரித்து வந்தார்களோ அதை அவர்களுக்கு ஒரு நல்ல விவாகம் நடப்பதாயிருந்தால் தட்சணமே ஒழித்துவிடுவது நலம்.

மனிதர்களுக்கு :—ஒரு ஸ்திரீயினுடைய வார்த்தையை அறிவது மிகக் கடினம். அவ்வார்த்தையில் உள்ளர்த்தம் ஏதாவது வைத்துதான் பேசுவாள். எப்படியும் எப்பொழுது ஒரு வார்த்தையை மூன்று தடவை சொன்னுளோ, அதில் ஏதாவது அர்த்தம் இருந்தே தீரவேண்டும்.

ஸ்திரீகளுக்கு :—மதிற்சுவர்கள் (தேகம்) கோட்டையைக் (ஹிருதயம்) காப்பாற்றிக் கொண்டிருந்தன. ஆகிலும் கோட்டை (ஹிருதயம்) மதிற் சுவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டது.

ஒவ்வொருவருக்கும் :—நல்ல புத்திக்கூர்மையுடைய அறிவாளியானவன் ஒரு பிரயோசனமும் வேண்டாது பிறருடைய நன்மையின் பொருட்டே பாடுபடுவான்.

'கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர்'

என்ற நன்னெறி வாக்கியமே இருக்கிறது.

நிற்க, கோட்டையும் தூக்கப்பட்டது. மதிற்சுவரும் கடக்கப்பட்டது. அன்பர்கள் மிகுந்த சந்தோஷத்தை யடைந்தார்கள். விவாகமும் நன்றாக நடந்தேறியது.

ஆனல், அந்தோ! இவ்வளவு நன்மைக்கும் காரணமாயிருந்த முகமத் ஆலியைப்பற்றி அரசனாவது, அல்லது அரசியாவது, அல்லது பிரஜைகளில் யாராவது அவரைப்பற்றி நினைக்கவே யில்லை.

பலமணிக் கோவை.

(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)

(384-வது பக்கத் தொடர்ச்சி)

14. வீடு விழாமல் நிற்பதெவ்வாறு?

இது தெரியாதா? கற்களை எல்லாம் சுண்ணும்பு வைத்துக் கட்டுவதால் சுண்ணும்பு இறுகிப் பிடித்துக் கொள்கிறது. ஆகவே சுவர் விழாமல் இருக்கிறது. ஆனல் வெறும் சுண்ணும்பும் கற்களும் மாத்திரம் இருந்தால் போதாது. கற்களுக்குக் கனம் இருப்பதால் கற்கள் அசையாமல் இருக்கின்றன. ஒவ்வொரு சாமானையும் பூமி தனனை நோக்கிக் கீழாக இழுப்பதால் அதற்குக் கனம் உண்டாகிறது. இதைத் தான் பளுவு என்போம். கிணற்றில் சகடை வழியாகக குடம் ஜலம் இழுக்கும் போது நமக்கு சுலபமாயிருக்கிறதல்லவா? கிணற்றின் பிடி சுவர்மேல் நின்று சகடையில்லாமல் மேலே இழுக்கும்போது கை பலத்தினுல் அந்தக் குடத்து பளுவை இழுக்கிறேம். ஆனல் சகடையிலிருந்து கீழ் நோக்கி இழுக்கும் சக்தி நமக்கு அனுகூலமாக இருக்கிறது. சுவற்றின் கற்கள் கனத்தினுல் நிற்கும்போது சுண்ணும்பு கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சுவர் உருவம் நிற்கும்படி செய்கிறது.

15. சாமான்கள் உருவம் பெற்று இருப்பது எவ்வாறு?

சுண்ணும்பு கெட்டிப்படுவதால் இரண்டு மூன்று கற்களைச் சேர்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு கல்லை எடுத்தால் மற்றக் கற்களும் கூட வரும். ஒரு கடிதத்தின் ஒரு ஓரத்தைப் பிடித்துத் தூக்கினுல் அக்கடிதத்தின் மற்ற பாகமும் கூடவே வருகிறது. இரண்டு சாமான்களைப் பிசின்கொண்டு ஒட்டினுல் ஒரு சாமானைத் தூக்கினுல் இன்னென்றும் கூடவே வரும். இவ்விதம் ஒட்டிக்கொள்ளும் சக்திக்கு ஆஸ்லேஷம் சக்தி என்று பெயர். என்ன நடக்கிறது என்று நமது கண்களுக்குப் புலப்படாவிடினும் ஒட்டிக்கொள்கின்றன என்பது நமக்கு சாதாரணமாகத் தெரியும். அதே விதமாக ஒவ்வொரு சாமானிலும் உள்ள அணுக்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு இருப்பதால் அந்தந்த சாமான்களின் உருவம் ஏற்படுகிறது. இந்த சக்தி இல்லாவிடில் நமக்குப் பல சாமான்கள் எவ்விதம் உபயோகிக்கக் கிடைக்கும்?

16. மணலால் ஏன் கயிறு திரிக்க முடியாது?

இந்த வினவினுல் நாம் முன் சொன்ன விஷயம் நன்கு விளங்கும். மணலைக் கயிருகவும் பிரம்பாகவும் ஏன் செய்ய முடியாது? மணலுக்கு இவ்விதம் ஒட்டிக்கொள்ளும் சக்தி இல்லை. சுண்ணும்பு அல்லது செமண்டு கலந்தால் ஒட்டிக்கொள்ளும் சக்தி உண்டாகிறது. அப்போதும் பிரம்புபோல எடுத்து வீச முடியாது. சுவற்றில் கற்கள் பளுவினுல் மணலும் சுண்ணும்பும் கலந்து ஒரு உருவமாக நிற்கின்றன. இந்த ஒட்டிக்கொள்ளும் சக்தி மிகவும் ஆச்சரியமானது. அரக்கு உருகாமலிருக்கும் போது கெட்டியாகக் குச்சி போலிருக்கிறது. ஆனல் விளக்கிற் காட்டியவுடன் உருகி ஓடுகிறது. இந்த ஒட்டிக்கொள்ளும் சக்தி வஸ்துக்களில் ஒவ்வொன்றில் அதிகமாகவும் ஒவ்வொன்றில் குறைவாகவும் இருக்கும். இந்த சக்தி யிருப்பதனுல்தான் பூமியே அதன் உருவம் பெற்று இருக்கிறது என்றுல் பூமியில் உள்ள மற்ற வஸ்துக்களைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. இந்த சக்தி சில வஸ்துக்களில் உஷ்ணம் அதிகமானல் குறைந்து போம். அப்படி உஷ்ணம் மிகுந்து ஒட்டிக்கொள்ளும் சக்தியும் குறைந்துவிட்டால் அந்த வஸ்து திரவமாகி ஓடும்.

17. ஜலம் ஓடுவானேன்?

ஒட்டிக்கொள்ளும் சக்தி குறைவாக இருப்பதனுல்தான் ஜலம் ஓடுகிறது. இந்த சக்தி அதிகம் உள்ள வஸ்துக்களைத் திடமுள்ள பதார்த்தங்கள் எனலாம். இந்த சக்தி குறைந்து விட்டால் அவைகள் திடம் குறைந்து அழிந்து போம். ஆகவே ஜல ரூபமுள்ள பதார்த்தங்களுக்கு இந்த ஆஸ்லேஷம் சக்தி குறைவானதனுல் தாமே ஒரு உருவம் பெற்று இருப்பதில்லை. எப் பாத்திரத்தில் இருக்கின்றனவோ அப்பாத்திர உருவமே பெறும். ஜலத்தைவிட உருகிய அரக்கில் ஒட்டிக்கொள்ளும் சக்தி அதிகம். ஆனல் சாராயத்தில் ஜலத்தைவிட இந்த சக்தி குறைவு. ஜலத்தில் ஒட்டிக்கொள்ளும் சக்தி அதிகமாகவேண்டுமானல் அந்த ஜலத்தை இன்னும் குளிர்ச்சி செய்தால் அதாவது உஷ்ணத்தை எடுத்து விட்டால் ஜல

அணுக்கள் ஒன்று சேர்ந்து கெட்டிப்பட்டு பனிக்கட்டியாகி விடும். அதுபோல உஷ்ணம் அதிகமாக்கி ஜலத்தைக் காய்ச்சினால், கொஞ்சம் இருந்த ஒட்டிக்கொள்ளும் சக்தியும் போய் விடும். அப்போது ஜலம் நீராவியாகி விட்டது. இந்த நிலைமையில் ஆஸ்லேஷம் சக்தி இல்லை. நீராவி போன்ற எந்த வாயுவிலும் இந்த சக்தியேயில்லை. அதனால்தான் காற்று அணுக்கள் சுயேச்சையாக எவ்விடமும் திரிந்து அலையும். இடம் முழுதும் பரந்து வியாபித்து இருக்கும். கதவு இடுக்காலும், ஜன்னல் வழியாலும், புகை போக்கி வழியாகவும் எங்கும் அலைந்து செல்லும்.

18. பொற்காப்பு உருவம் எவ்விதம் நிற்கும்?

திடமான பதார்த்தங்கள் எல்லாவற்றிற்கும் இந்த ஒட்டிக்கொள்ளும் சக்தி உண்டு. ஒரு வஸ்துவின் அணுக்கள் தமது சிறு கைகளால் பக்கத்து அணுக்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன எனலாம். இப்படி இருப்பதனால்தான் உருவம் பெற்று வஸ்துக்கள் இருக்கின்றன. இவ்வளவு பெரிய பூமி எல்லா அணுக்களையும் தன்னிடம் ஆகர்ஷணம் செய்துகொள்கிறது. இந்த அணுக்கள் தம்மிடம் ஒருவித சக்தியுமின்றி பூமியின் ஆகர்ஷண சக்திக்கு வசப்பட்டுவிட்டால் ஒரு வஸ்துவும் உருவமின்றி எல்லாம் ஒரே அப்பளம் போல பூமிமீது விழுந்து கிடக்கும் அல்லவா? பொற்காப்பின் அணுக்கள் ஒன்றையொன்று கவ்வியிருக்கின்றன. இந்த சக்திக்கு இங்கிலீஷில் கோஹிஷன் (Cohesion) என்று பெயர். பூமியின் ஆகர்ஷண சக்தியினால் ஒரு வஸ்துவிற்கு கனம் ஏற்படுகிறது. அந்த சக்திக்கு எதிராக கொஹிஷன் வலிமையினால் அணுக்கள் ஒன்றுசேர்ந்து உருவம் பெற்று இருக்கின்றன.

19. பூமியின் ஆகர்ஷண சக்தி வெகு வலிமையுள்ளதா?

உலகத்தில் உள்ள சக்திகளில் வெகு வலிமையுள்ளது ஒரு சக்திதான். ஆயினும் [illegible]ஷன் சக்தியும் வலிமையுள்ளதுதான். ஏனெனில் ஒரு பெரிய கோபுரத்தைக் கவனிப்போம். அல்லது மகா உன்னதமான தாஜ்மஹால் நிற்பதைக் கவனிப்போம். அழகான மண்டபங்களும் தூண்களும் கமான்களும் நமது மனதைக் கவர்கின்றன. இவைகள் எல்லாம் கொஹிஷன் சக்தி இல்லாவிடில் இவ்வித உருவத்துடன் நின்று இருக்குமா? நாம் இந்த சக்தியை சாதாரணமாகக்கொண்டு பெரிய கட்டிடங்களையும் கோபுரங்களையும் கட்டி நிறுத்துகிறோம்.

20. முற்காலத்திய கட்டிடங்கள் எப்படி இருந்தன?

மனிதர்கள் முதல் முதல் குகைகளில் வசித்தார்கள். இக்குகைகளை அழகு செய்வதுதான் அவர்கள் வேலை. இன்னும் விஸ்தாரமாகக் குடைந்து, தூண்கள் நிறுத்தி உயர வளைந்த மண்டபமாக வேலை செய்து சிலைகள் செதுக்கினார்கள். நமது இந்தியாவில்தான் இவ்வித அழகான குகை மண்டபங்களும் கோவில்களும் காணப்படுகின்றன. அஜண்டா, எல்லோரா, சாஞ்சி முதலிய இடங்களில் அழகிய குகைக் கோவில்களும் மண்டபங்களும் உள. சென்னைப்பட்டணத்திற்குத் தெற்கே மகாபலிபுரத்தில் பல அழகான குகை மண்டபங்களும் சில உருவங்களும் இருக்கின்றன. நதியோரமாக மலைகளில் பல குகைகள் செய்தார்கள். பாறையைக் குடைந்து சிறிய அறைகளும் பெரிய சபா மண்டபமும் செய்தார்கள். இவ்விடங்களில் பல சந்நியாசிகள் வசித்தனர். முற்காலத்தில் பெரிய கலாசாலைகள் விஸ்தாரமான குகைகளில் இருந்தன. பிறகு சில வருஷங்களுக்குப் பிறகு கற்களை ஒன்றின் மேல் ஒன்று நிறுத்திப் பெரிய கோபுரங்கள் கட்டக் கற்றுக்கொண்டனர். பெரிய அரண்மனைகளும், தர்பார் மண்டபங்களும், நீராழி மண்டபங்களும் கட்டினார்கள். ஐரோப்பாவில் ரோம் நகரத்தில்தான் முதன்முதல் கற்களால் பெரிய கமான்கள் கட்டி அரண்மனைகளும் சர்க்கஸ் மேடைகளும் கட்டினார்கள். ஈஜிப்டு தேசத்திலும் கற்பாறைகளை நிறுத்தி உயர்ந்த கோபுரங்கள் (பிராமிட் என்று பெயர்) கட்டி அதனுள் அழகிய மண்டபங்கள் ஏற்படுத்தினார்கள்.

19381

இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924ஞு ஆகஸ்டுமீ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்துகொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்து விட்டன. 1925 பிப்ரவரிமீ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செலிமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், பத்திராதிபரால் எழுதப்பட்ட நவமணிபோன்ற பல சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செலிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. இவ் ஆறு தனிப்பிரதிகளும் தபால்சார்ஜ் உட்பட ரூ. 2-8-0க்கு அனுப்பப்படும்.

முதல் வருஷ ஆரம்பத்தின் ஆறு பிரதிகளும் தேவையென (1924 ஆகஸ்டிலிருந்து 1925 ஜனவரிவரை) 500 ஆர்டர்கள் பதிவானதும் அவை அச்சிடப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
லஸிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாபூர், சென்னை.

ஸ்ரீமான் க. சா. அ. ராம. சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே!

இப்பவும் தங்களால் நடத்தப் பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தா தாரராகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பியிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பி வைக்கக்கோருகிறேன்.

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செந்துலில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல் விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு ப்ரதியுபகாரங்கருதாது தம் கடமையை அன்புடன் புரிந்து வரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அதிஉசிதத்துள்ள பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கும் ஆக அதிகப் பிரயாசையுடன் தங்களால் வெளியிடப்படும் "சிந்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டுப் பெண் பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் ஆடவர்கள் தங்கள் தேச நிலையை கவனித்து அதன் முன்னேற்றத்திற்குழைக்க ஒரு முக்கிய கருவியாகவும் உதவுமென்பதை அறிவாளிகள் அனைவரும் உணர்வார்களென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. தங்களால் எய்தப் பெரும் பேருபகாரத்திற்கும் இந்நாட்டுப் பெண்மணிகளை மகிழ்விக்கும் சிந்தாமணியின் நெடுநல் வாழ்விற்கும் கடவுள் அருள் புரிவாராக.

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார் :—

20—1—1926.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபமுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸுபோதராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறீனென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா.

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷப் பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும், உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

4-8-26 ல் F. M. S லிருந்து ஸ்ரீமதி சொர்னலக்ஷ்மி எழுதுவது :—

சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப்பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமேயல்லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களின் ஊக்கங்குன்றா முயற்சியினாலேயே ஆகும். எல்லாம் வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.

சிந்தாமணி பைண்ட் வாலியம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டுபுத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1926 பிப்ரவரியிலிருந்து 26 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாரராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதார் ஆனவர்களுக்கும் மட்டும் மேற் கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் 3—ரூபாய்க்கு அனுப்பப்படும்.

பைண்ட் வாலியம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினாலன்றி புத்தகம் அனுப்பப் படமாட்டாது.

சொற்பப்பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவாக ஆர்டர் செய்யவும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாபூர், சென்னை.

சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் தொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

சுபோத ராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். ஹிந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள ஒவ்வொருவர் கையிலும இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேராவலை விளைவிக்கும்.

தேவதத்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாட்டச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

இதரப் பிரசுரங்கள்.

இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டா வென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகளடங்கிய ஸெட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி. 4—8—0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். சுபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணுவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,
சிந்தாமணி பத்திராதிபர்,
மயிலாபூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற் கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால் மராட்டி பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. மகா ராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் கிடையா. இவைகளை நம் சிறுவர்கள் படித்தல் அவசியம்.

பால ராமாயணம் டபிள் கிரவுன் விலை அணா.	0—6—0
பால பாரதம் ஷை 92-பக்கங்கள் அணா.	0—8—0
பால பாகவதம் ஷை 87-பக்கங்கள் அணா.	0—8—0

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், ‘சிந்தாமணி’ ஆபீஸ்
மயிலாபூர், சென்னை என்றெழுதவும்.

“சிந்தாமணி,”

மூன்றாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.
தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 6 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. 6½; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனாமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியேகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாபூர், சென்னை.

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், “சிந்தாமணி,” “விவேகாச்ரமம்,” ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், பூர்ண விலாசம் இவைகளுடன் இன்னருக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.

10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா' வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

இனாம்! இதுவே தகுந்த தருணம்—என்றுமில்லா லாபம். இனாம்!!



எங்களுடைய அழகான 18 காரெட் ரோல்டுகோல்டு ரேயர் லீவர்கோல்டு ஷைனிங் டயல் பாக்கட் கடியாரத்தைப் பிரபலப்படுத்தும் பொருட்டு நாங்கள் ஒரு "டீ" டயம்பீஸை ஷீ கடிகாரத்தை வாங்குவோருக்கு இனாமாகக் கொடுக்கிறோம்.

ஐந்து வருடங்கள் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளது.

ஆயுள் பரியந்தம் சரியாக ஓடக் கூடியது.

விலை ரூபாய் 4—12—0.

எமது விலாசம்:— ஸீகல் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெம்பர் 243, மதராஸ்.

ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

குழந்தைகளின் மித்திரன்.

பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேககாந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜஸுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனோவியாகுலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

26 பிராட்வே, மதராஸ்.

சீக்கிரம் வெளிவரும்!

அச்சிலிருக்கிறது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேச முன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கானவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாகிப் இதன் ஆசிரியர். டாக்டர் பி. வரதராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ. 1—0—0.

ஏற்கனவே பெயரைப்பதிவு செய்து கொண்டவர்களுக்கு விலை அணா 0—12—0.

மானேஜர், "சிந்தாமணி"
சலிவன்ஸ் கார்டன் ரோட்.
மயிலாப்பூர் சென்னை.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,
31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

'தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணா 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, dated 24-7-23.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது, ராவ் ஸாஹேப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, 21st October 1913.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, Part I-B, page 478, dated 3-6-24.

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது, விலை அணா 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், M.A., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணா. 10.

11. காளிதாஸன்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப் ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 12.

SRINIVASA VARADACHARI & CO.,
4, Mount Road, Madras.

ஸ்ரீமதி N. குப்பம்மாள் அவர்கள் 24-3-26-ல் டெலுக் ஆன்ஸனிலிருந்து எழுதுவது.

பூமகள் திலகம்போல் நின்றிலங்கும் அன்பிற்கினிய சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது நன்றியறிதலான வந்தனம். தங்களுடைய சிந்தாமணி என்ற உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை தமிழ் மக்களனைவரும் ஆதரிக்கக் கூடியவாறு அமைந்திருத்தல் போற்றத்தக்கதாம். இவ்வுயர்தரப் பத்திரிகை இன் பல வழிகளிற் சிறப்புற்று விளங்க தமிழ் நாடெங்கும் பறவவேண்டுமென்பது எனது எண்ணம். ஆகையால் யான் சந்தாதாராகச் சேர வேண்டுவதுடன் என்னால் கூடுமானவரை வியாசங்களையும் எழுத நினைக்கிறேன். பெண் கல்வியைப் பெருகச் செய்யும் செல்வியே! தங்களுடைய பதிலை எதிர் பார்க்கிறேன்.

ஸ்ரீமதி பெரிய நாயகம் (மிஸஸ் P. R. பத்தர்) அவர்கள் 13—3—26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

தெய்வீகம் பொருந்திய சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு, தாங்கள் பிரசுரித்து வரும் "சிந்தாமணி"யை வாசித்து வந்ததில் ஒவ்வொன்றும் மிகவும் உற்சாகத்தையும் நல்வழிக்கு ஆதாவையும் அளிபபதுடன் இவ்வரிய பெரிய வியாசங்களும் பண்டைகாலத்து சரித்திரஙகளும தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி அவர்கள் தற்கால நிலைமையினின்றும் உயர் நிலை யெய்துவதற்கு வேண்டிய கல்வி, ஒழுக்கம், நாகரிகம் முதலிய மகளிர்க் குரித்தான நற்குணங்களைப் போதிப்பதான விஷயங்கள் தங்கள் பத்திரிகையில் வரையப்பட்டுள்ளன. ஸ்திரீகள் விஷயத்தில் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு நன்றியை எவ்விதம் பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

ஸ்ரீமான் R. M. A. L. மாணிக்கம் பிள்ளை அவர்கள் 20-6-26-ல் மைடானிலிருந்து எழுதுவது.

சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். பெண்கள் விஷயமாய் கவனம் செலுத்தி அவர்கள் முன்னேறும் வழியைப் பற்றி தாங்கள் முயற்சி யெடுத்துக் கொண்டதைப் பற்றியும சிரமம் பாராது பததிரிகை நடத்தி வருவது பற்றியும் சகோதரர்கள் சந்தோஷமடைகிறார்கள். தங்களுக்கு கடவுள் பூரண ஆயுளைக்கொடுதது சிந்தாமணியை என்றும் நடத்தி வரும்படியாய் சதா கடவுளை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம்.

24—9—25-ல் சித்தியவானிலிருந்து ஸ்ரீமான் R.M.P.R. ராமசுவாமி செட்டியார் அவர்கள் எழுதுவது:—

அம்மா,

ஒரு காலத்தில் நாகரிகமே உருவாக விளங்கி மற்ற தேசங்களுக்கு வழி காட்டியாகவிருந்த நம் நாடானது பல காரணங்களினால் நவ நாகரிகத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் பொதுவாகத் தமிழ் மக்களின் வளர்ச்சியையும் சிறப்பாக நம் பெண்மணிகளின் வளர்ச்சியையுமே முக்கிய நோக்கமாகக் கொண்டு பல அறிஞர்களின அரிய கட்டுரைகளுடன் சிறந்த அறிவாளியும் தேசாபிமானியுமாகிய தங்களால் நடத்தப்பெறும் நமது "சிந்தாமணி" மேலும் மேலும் அதிக சிறப்புடன் நீடூழி காலம் நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவார.

கணபதி துணை.

வேதாந்த தருக்க போதகாசிரியர் திருவாளர் சென்னை கோ. வடிவேலு செட்டியாரவர்கள் அபிப்பிராயம் 8-5-26.

ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் சமுகத்திற்கு; தாங்கள் எனது பார்வைக்குத் தந்த தங்களது 'சிந்தாமணி' என்னும் பெயரிய மாதப்பத்திரிகை (மலர் 2 இதழ் 7) யை நான் முற்றுஞ் செவ்வையாகப் படித்துப் பார்த்தேன். பெண் மக்கள் அபிவிருத்தியாதற்குரிய விஷயங்கள் மிக அழகாகத் தெளிவான நடையிலெழுதப்பட்டு விளங்கும் தங்கள் பத்திரிகை ஒவ்வொரு வீட்டிலும் அத்தியாவசியமாயிருக்கவேண்டு மென்பதும், இப்பத்திரிகையைப் படிப்பவர் சாஸ்திரார்த்தம், மருத்துவ முறை தேச சரித்திரம், இல்லற வொழுக்கம், கதைப் போக்கு முதலியவற்றுளின்றியமையாதான பலவற்றையும் மிகத் தெளிவாயறிந்து கொள்ளுதற்குரியவராவாரென்பது எனதபிப்பிராயமாம்.

நேரிசை வெண்பா.

சிந்தாமணியாய்த் திகழுஞ்சிந் தாமணியை
நந்தாது நாளு நலமாகப்—பந்தமறக்
கற்பார்க்கு நல்ல கவினுண்டாம் வாழ்வுண்டாம்
பொற்பாயீ தோங்க பொலிந்து.

7-2-25-ல் டர்பனிலிருந்து ஸ்ரீமான் R. M. பிள்ளை அவர்கள் எழுதுவது:—

தேவரீர் சகோதரி பாப்மா அவர்களுக்கு தங்களுக்குச் சேரவேண்டிய சந்தாவை யனுப்பியிருக்கிறேன். சிற்க எனனுடைய மனைவி தங்கள் மாதாந்தப் பத்திரிகை சிந்தாமணியைப்பற்றி தன்னைப் போன்ற பெண்களிடம் பத்திரிகையிலுள்ள இனிய விஷயங்களைச் சொல்லி வருவதுடன் "சிந்தாமணி" கண்டு ஆனந்தமங் கொண்டதாக என் மூலம் தங்களுக்கு அறிக்கை செய்யச் சொன்னதுடன் தங்களைப் பார்க்கப் பிரியமாயிருப்பதால் தங்கள் உருவப்படம் ஒன்றை யனுப்பும்படிக்கும் எழுதச் சொல்லியிருப்பதால் ஒரு படம் அனுப்பி வைக்கவும்.

7—10—25-ல் நெட்டாலிலிருந்து ஸ்ரீமதி மிஸ் குணரத்தினம் நாயுடு எழுதுவது:—

சகோதரி அவர்களுக்கு.

தாங்களனுப்பிவரும் "சிந்தாமணி' எனும் பெயர் பெற்ற மாத சஞ்சிகையை மாதந்தோறும் வரப்பெறுகிறேன். அதன் சிறப்பை என்னென்று வரைவது! 'சிந்தாமணி' நீடூழி வாழ ஸ்ரீ கண்ணபிரான் கருணைபுரிவாராக.

ஸ்ரீமதி அம்புஜவல்லி அம்மாள் 19—9—'26ல் எழுதுவது.

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற இரண்டு வருடங்களாய் நடந்து வரும் இச்சிந்தாமணியை ஆவலுடன் படித்து வருகையில், அதில் வெளிவரும் விஷயங்கள் சிறந்தவைகளாகவும், ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கு சாதகமானவைகளாகவும், தற்காலப் போக்கிற்கு ஏற்றவைகளாகவும் இருக்கக் கண்டு சந்தோஷப்படுகிறேன். மேலும் சிந்தாமணியில் வெளிவரும் விஷயங்கள் தெளிந்த சுலபமான நடையில் வரையப்பட்டிருப்பதானது அதிக உயர்ந்த தமிழ் கல்வியாவது இலக்கண பரிச்சயமாவது இல்லாதவர்களும் அவரவர்கள் நுண்ணறிவிற்கு எட்டியவாறு ஏதோ சில விஷயங்களை எடுத்து கூற இடந்தருவதாய் இருக்கிறது.

ஸ்ரீமான் V. M. M. ஆச்சாரி அவர்கள் 16—3—'26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

இதில் வைத்திருக்கும் போஸ்டல் ஆர்டரைப் பெற்றுக்கொண்டு நமது நாட்டில் திலகமாக விளங்கும் அருமை பெருமை பொருந்திய "சிந்தாமணி" என்னும் பத்திரிகையை கீழ்க்காணும் விலாசத்திற்கனுப்பி வரவும். தாங்கள் மேரிட்ஸ்பர்க் வாலிபர்களுக்கு விடுத்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்து மிகவும் ஆனந்த மடைந்தேன். தாங்கள் நமது பாரத கண்டத்தில் நம் பெண்மணிகளின் முன்னேற்றங்கருதி சிரமம் பாராமலும் சுயநலத்தைக் கருதாமலும் தொண்டு புரிந்து வருவதைப் பார்க்க அதிக சந்தோஷமடைவதுடன் தங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் தீர்க்காயுளும் திடகாத்திரமும் அளித்து தாங்கள் எடுத்துள்ள கைங்கரியத்தை சித்தி பெறச் செய்து தங்கள் நாமம் இவ்வுலகில் நீடித்திருக்கச் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமான் மு. சி. சிற்றம்பலவன் அவர்கள் இலங்கையிலிருந்து 7-10-1926-ல் எழுதுவது.

எம் சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமூகத்திற்கு,

தங்களனுப்பிவரும் "சிந்தாமணியின்" எழுச்சியால் தமிழ் மகளிருட் கிடந்த பேதமை அகல வாரம்பிக்கின்றது. அம்மா நந்தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமையை நோக்கிப் பரிதவித்து அவர்கள் முற்காலத்து வாழ்ந்த பெண்மணிகளின் சீரிய வியல்வை யொட்டுமாறு வற்புறுத்தி அந்நிலைமைக்கு இவர்களை யுயர்த்து மாற்றலைக் கொண்டியும "சிந்தாமணியின" செம்மையை வரைய இக்கடிதமுமிடந்தரா எனினும் எம சகோதரிகளடைந்த சீர்திருத்தத்தையும் அவர்கள் தங்களினிடை கொண்டிருந்த மருளை ஒழித்ததும் இதனால் நானடைந்த உற்சாகத்தையும் இஃது போன்று நாங்களடைந்த முன்னேற்றமே இச் சிந்தாமணியின் ஆற்றலை வெளிப்படுத்தும.

அம்மா? தங்களிடமிருந்து புறப்படும் சிந்தாமணியின் வாசனையை நுகர்ந்த பெண்மணிகளிற் சிலரை நான் கண்ட பொழுது அவர்கள் சிந்தாமணியின கட்டுரைகளைத் தங்களுள்ளத்திற் பதித்தமையினால் அதைக் கடைப்பிடித்து தாங்கள் நடப்பதாலும தாங்கள் முன்னிருந்த நிலைமையினின்றும் இப்பொழுது மறுபிறப்படைந்திருக்கின்றோம் எனக் கூறினார்கள். இதுமட்டோ!!! இச்சிந்தாமணியைக் கண்ணுறும பெண்கள் ஒவ்வொருவரும தங்களை யுணர்ந்ததுமல்லாமல் தாங்கள் இதுகாறும நடந்து வந்த வழிகளை அறவே ஒழித்துவிட்டனர்.

அம்மா! தங்களால் வெளிப்படும் சிந்தாமணிக்கும் தங்களுக்கும் எம்பெருமான் நீண்ட ஆயுளைத் தந்து அருள் புரிவாராக.

ஸ்ரீமதி டி. நடராஜா அவர்கள் 13—6—26ல் பாஜாமிலிருந்து எழுதுவது.

தாங்கள் அனுப்பிய சிந்தாமணி இதழ்களைப் படித்து விஷயங்களின் ரசங்களை யுணர்ந்து மகிழ்ச்சியடைந்தேன். எங்கள் தமிழ் நாட்டின் கண்ணுள்ள சகோதரிகளின் முன்னேற்றத்தை விரும்பி தாங்கள் எடுக்கும் பிரயாசையும் இரக்கமும் எவரும் வியக்கத் தக்கதே. இவ்வரிய பத்திரிகை பெண்களுக்கு உற்ற துணையாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. தங்கள் பத்திரிகைத் தழைத்தோங்கும பொருட்டுத் தாங்கள் நீடூழி வாழச் சிவபிரான் கிருபை பாலிப்பாராக.

ஸ்ரீமதி செ. ராசம்மாள் ஸிலோனிலிருந்து 2-11-1926-ல் எழுதுவது.

சாத்வீகம் தங்கிய சகோதரிக்கு நமஸ்காரம்,

தாங்கள் நந்தமிழ் நாட்டிற்கும் விசேஷமாக அறிவுதித்துள்ள பெண்மக்களுக்கும் மிகவும் பிரயாசையுடன் வெளியிட்டு வரும் சிந்தாமணியை கையில் எடுத்தவர்கள் முற்றும் வாசியாமல் வைக்க விரும்பாததுடன் அடுத்த சஞ்சிகைகளையும் பார்க்க விரும்புகின்றனர். தங்களைச் சகோதரியாக அடையப் பெற்ற எங்கள் பாக்கியமே பாக்கியம். தாங்கள் புரியும் இந்நன்றிக்கு பிரதியுபகாரஞ் செய்ய எம்மால் இயலாதாயினும், தங்களுக்கும் தங்கள் சிந்தாமணிக்கும் நீடித்த ஆயுளைக் கொடுக்குமாறு படைத்தளித்துக் காக்கவல்ல பழம் பொருளைப் பன்முறை வேண்டுகிறேன்.

27—4—26-ல் ஸிலோனிலிருந்து ஸ்ரீமான் டி. ஜெ. பரமானந்தன் அவர்கள் எழுதுவது:—

சிந்தாமணி சஞ்சிகையைப் படித்ததிலிருந்து எனக்குண்டான மனமகிழ்ச்சிக் கோரளவில்லை. விசேஷமாய் தமிழ் நாட்டு ஸ்திரீகளின் நன்மைககென்று சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் பாராது மெத்தப் பிரயாசையுடன் தாஙகள் நடத்திவரும்சஞ்சிகையை எலலாம் வல்ல இறைவன் மேன்மேலும ஆசீர்வதிப்பாராக. "சிந்தாமணி"நீடூழி வாழ்க. தாங்கள் அன்புடன் எனக்கு சஞ்சிகையும் நிருபமுமனுப்பியதற்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். அனுப்பியிருக்கும் சந்தாவைப் பெற்றுக்கொண்டு என்னையும ஓர் சந்தாதாராகப் பதிவுசெய்து கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீமான் ஜி. பக்கிரிசாமி முதலியார் அவர்கள் 22—4—25ல் சிங்கப்பூரிலிருந்து எழுதுவது.

சிந்தாமணி பத்திராதிபர் அவர்களுக்கு,

தாங்கள் வெளியிட்டு வரும் சிந்தாமணி என்னும் தமிழ் மாதப்பத்திரிகையின் 1924 டிசம்பர் இதழ் எனது நண்பர் மூலமாக சமீபத்தில் எனக்குக் கிடைத்துக் கண்ணுற்றேன் அதிலடங்கிய சில விஷயங்களைப பார்க்க என்மனது குதூஹலமடைநதது. ஆகையால் என்னையொரு சந்தாதாராகச் சேர்த்துக்கொண்டு பழைய பிரதிகளையுமனுப்பக் கோருகிறேன்.

ஸ்ரீமான் மு, சா. கபாலி அவர்கள் 9—2—26ல் பினாங்கிலிருந்து எழுதுவது.

நம் பாரத நாட்டில் அவதரித்து செந்தமிழ்த் திலகம் போல் விளங்கும் சிந்தாமணி வரப்பெற்றேன். உள்ளம் மகிழ்ந்தேன். பெண் கல்வி முன்னேற்றத்தைப்பற்றியும் நம் தாய் நாடு தூங்கிக் கொண்டிருந்ததைத் தட்டி எழுப்பி நல்கி செய்த நன்றிக்கு........வைகமும்........மாற்றலரிது. நம் சகோதரிக்கு நீடித்த ஆயுளளித்து இம்முயற்சிக்கு கடவுள் கருணை புரிய வேண்டுகிறேன்.